பக்கங்கள்: பதினாறு

# உதயன்

விலை ரூபா 15.00

www.uthayan.com

சுடர் 24 வள்ளுவர் ஆண்டு 2040 ஆனி 11 வியாழக்கிழமை (25.06.2009) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 211

# 13ஆவது திருத்தத்துக்கு அப்பால் மாகாணங்களுக்கு அதிகாரப் பகிர்வு

## இலங்கை உறுதி அளித்திருப்பதாக கிருஷ்ணா தெரிவிப்பு



புதுடில்லி, ஜூன் 25

**இலங்கை அரசமைப்பின் 13ஆவது திருத்தத்துக்கு அப்பால் சென்று மாகாணங்களுக்கு அதிகாரத்தை பகிர்ந்து வழங்குவதற்கு அந்நாட்டு அரசின் சார்பில் வாக்குறுதி அளிக்கப்பட்டுள்ளது.**

**இவ்வாறு இங்கு நேற்றுத் தெரிவித்தார் வெளிவிவகார அமைச்சர் எஸ்.எம்.கிருஷ்ணா.**

இலங்கையில் இருந்து திடீர் விஜயம் மேற்கொண்ட மூவர் கொண்ட அரசாங்க உயர் மட்டக் குழுவினர் தம்முடன் நடத்திய சந்திப்பின்போது, இதனைத் தெரிவித்ததாக, அமைச்சர் கிருஷ்ணா செய்தியாளர்களிடம் கூறியதாக ஐ.ஒ.என்.எஸ் செய்திச் சேவை குறிப்பிட்டுள்ளது.

தம்முடனான சந்திப்புக் குறித்து அமைச்சர் மேலும் கூறியதாவது:

இலங்கையில் போர் முடிந்து விட்டதால் அங்கு வாழும் சகல மக்களுக்கும் புதிதாக வாய்ப்புகளை வழங்கி அவர்களுக்கு சிறந்த எதிர்காலத்தை உருவாக்கக்கூடிய நல்ல சந்தர்ப்பம் ஏற்பட்டுள்ளதாக தூதுக்குழுவினரிடம் நான் எடுத்துக் கூறினேன்.

இலங்கையின் நீண்டகாலப் பிரச்சினைக்கு அரசியல் தீர்வைக் கொண்டுவருவதற்கு அதிகாரப் பகிர்வுத் திட்டம் குறித்து அந்நாட்டு அரசு மிகுந்த கரிசனைகொண்டுள்ளது.

இடம்பெயர்ந்த மக்களை முன்னர் தெரிவித்தவாறு 180 நாள்களில் அவர்களின் சொந்த இடங்களில் மீளக்குடியமர்த்துவதற்கும் இலங்கை (16 ஆம் பக்கம் பார்க்க)

# உதவிப் பொருள்களுடன் 'வணங்கா மண்' சென்னையிலிருந்து கொழும்பு நோக்கி புறப்பட்டது

## இந்திய செஞ்சிலுவையின் அனுசரணையுடன் விநியோகம்

புதுடில்லி, ஜூன்25

இலங்கையில், வன்னியில், இடம்பெயர்ந்த மக்களுக்கு, ஐரோப்பிய நாடுகளில் வாழும் புலம்பெயர் தமிழ் மக்கள் அனுப்பிய உணவு மற்றும் மருந்துப் பொருள்களை ஏற்றி வந்த 'கப்டன் அலி' (வணங்காமண்) சென்னையில் இருந்து இந்திய செஞ்சிலுவைக் குழுவின் அனுசரணையுடன் கொழும்புக்கு வரும்.

இந்தியா தெரிவித்த இந்த யோசனையை இலங்கை ஏற்றுக்கொண்டுள்ளதாக வெளிவிவகார அமைச்சர் எஸ்.எம்.கிருஷ்ணா நேற்றுத் தெரிவித்தார். (16 ஆம் பக்கம் பார்க்க)

**கல்விச்சுடர்**

**உள்ளே**

தரம் 5 மாணவர்களுக்கான புலமைப்பரிசில் வினாத்தாள்

**நாளை**

தரம் 4 மாணவர்களுக்கான வினாத்தாள்

### யாழ். மாநகரசபைத் தேர்தல்

# ஐக்கிய சுதந்திரக் கூட்டமைப்பு, முஸ்லிம் காங்கிரஸுடன் சுயேட்சைக் குழு ஒன்றும் நேற்று நியமனப்பத்திரம் தாக்கல்

யாழ்ப்பாணம், ஜூன் 25

யாழ்.மாநகர சபைத் தேர்தலில் ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு, ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ், சுயேட் சைக் குழு ஒன்று ஆகியன நேற்று தமது வேட்பு மனுக்களைத் தாக்கல் செய்தன.

யாழ். செயலகத்தில் தெரிவத்தாட்சி அதிகாரியிடம் வேட்புமனுக்கள் நேற்றுமுற்பகல் நேரில் கையளிக்கப்பட்டன.

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் செயலாளரும் கல்வி அமைச்சருமான சுசில் (15 ஆம் பக்கம் பார்க்க)

# யாழ். நலன்புரி நிலைய மாணவர்களுக்கு சீருடை, பாடப்புத்தகங்கள் அடுத்த மாதத்தில்

## கல்வி அபிவிருத்தி மாநாட்டில் வைத்து அமைச்சர் தகவல்

யாழ்ப்பாணம், ஜூன்25

வன்னியில் இருந்து இடம்பெயர்ந்து யாழ். மாவட்டத்தில் உள்ள நலன்புரி நிலை யங்களில் தங்கியுள்ள மாணவர்களுக்கான இலவசப் பாடப் புத்தகங்கள், சீருடைத் துணிகள் என்பன அடுத்த மாதமளவில் வழங்கப்படவுள்ளன.

கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த இதனைத் தெரிவித்தார்.

குடாநாட்டில் கல்வி அபிவிருத்தி குறித்து ஆராய்வதற்கான மாநாடு ஒன்று நேற்று யாழ். செயலகத்தில் நடைபெற்றது.

இதில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

நேற்றுக்காலை யாழ்ப்பாணம் வந்த அமைச்சர் செயலகத்தில் கல்வியாளர்கள், கல்வி அதிகாரிகள் ஆகியோரைச் சந்தித்து (16 ஆம் பக்கம் பார்க்க)



யாழ்.செயலகத்தில் இடம்பெற்ற கல்வி அபிவிருத்தி மாநாட்டில் கல்வி அமைச்சர் சுசில் பிரேம ஜயந்த உரையாற்றுகிறார். அருகில் சமூகசேவைகள் மற்றும் சமூகநலத்துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவும் பிரதி அமைச்சர் லயனல் பிரேமசிறியும் அரச அதிபர் கே.கணேஸும் அமர்ந்திருக்கிறார்கள்.

*(படம்: லக்ஸ்மன்)*



டயலொக் CDMA இப்போது யாழ்ப்பாணத்தில்

டயலொக் CDMA முற்கொடுப்பனவு இணைப்பு ரூ. 5999/- மட்டுமே

- இலவச IDD இணைப்பு
- செக்கன் அடிப்படையிலான கட்டணங்கள்
- ஆரம்பக் கட்டணம் எதுவுமில்லை
- ரீலோட் செய்யும் வசதி

வாடிக்கையாளர் சேவை இலக்கம் 011 7 100 100

Fixed Line

Dialog

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# தமிழ்க் கூட்டமைப்பு, முக்கூட்டணி இன்று வேட்புமனுத்தாக்கல்

யாழ்ப்பாணம், ஜூன் 25

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வேட்பு மனு இன்று தாக்கல் செய்யப்பட்ட விருக்கிறது எனக் கூட்டமைப்பு தெரிவித்தது.

சட்டத்தரணி, உயர் கல்வி மாணவன், இளைப்பாறிய அரச அதிகாரிகள் மற்றும் மூன்று பெண்கள் கூட்டமைப்பு சார்பில் களம் இறங்குகிறார்கள்.

கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களான மாவை சேனாதிராசா, கஜேந்திரகுமார் பொன்னம்பலம், சுரேஷ் பிரேமச்சந்திரன், என்.சிறிகாந்தா, எஸ்.சிறில், எம்.இமாம் ஆகியோர் வேட்பு மனுத்தாக்கலின் போது கலந்துகொள்வர்.

தமிழர் விடுதலைக் கூட்டணி, புளொட், ஈ.பி.ஆர்.எல்.எவ் (பத்மநாபா) அணி ஆகியன அங்கம் வகிக்கும் ஜனநாயக தமிழர் கூட்டணியும் இன்று வேட்புமனுத் தாக்கல் செய்யவிருக்கிறது. (1)

# தமிழகத்திலிருந்து அகதிகளை அழைத்துவந்து மூன்று மாதங்களில் மீளக்குடியமர்த்துக

## நாடாளுமன்றத் தெரிவுக்குழு இடைக்கால அறிக்கை

கொழும்பு, ஜூன் 25

பிரஜா உரிமைகளின்றி தமிழ்நாட்டு அகதி முகாம்களில் உள்ள இலங்கைத் தமிழர்களை அடுத்த மூன்று மாதங்களில் இங்கு மீண்டும் அழைத்து வந்து மீளக் குடியேற்றுமாறு, இதற்கென நியமிக்கப்பட்ட நாடாளுமன்றத் தெரிவுக்குழு சிபார்சு செய்துள்ளது. இக்குழு தனது இடைக்கால அறிக்கையை நேற்று நாடாளுமன்றில் சமர்ப்பித்தது.

தெரிவுக்குழுவின் தலைவர் இராமலிங்கம் சந்திரசேகரன் நேற்றுக் காலை இந்த அறிக்கையை சபையில் சமர்ப்பித்தார்.

இதனைத் தொடர்ந்து அவர் நாடாளுமன்றக்குழு அறையில் ஊடகவியலாளர் சந்திப்பொன்றை நடத்தி அங்கு இது தொடர்பாகக் கூறியவை வருமாறு:-

25 வருடங்களாக இந்தியாவின் அகதிமுகாம்களில் வாழ்ந்துவரும் இலங்கை மக்களை இங்கு அழைத்து வந்து அவர்களுக்கு இலங்கையின் பிரஜா உரிமை வழங்குவது தொடர்பாக உருவாக்கப்பட்ட நாடாளுமன்றத் தெரிவுக்குழு அதன் கடமைகளை சரிவரச் செய்துவருகின்றது.

இந்தக் குழுவின் இடைக்கால அறிக்கையை இந்தக் குழுவின் தலைவரான நான் இப்போது நாடாளுமன்றில் சமர்ப்பித்துள்ளேன். இதனால் அம்மக்களை இலங்கைக்கு அழைத்துவந்து அவர்களுக்கு பிரஜா உரிமை வழங்குவதற்கு இருந்த தடைகள் நீக்கப்பட்டுள்ளன.

இலங்கையில் இடம்பெற்ற பல்வேறு சம்பவங்கள் காரணமாக சுமார் 95 ஆயிரம் இலங்கையர்கள் இந்தியாவுக்கு இடம் பெயர்ந்து அங்கு வாழ்ந்து வருகின்றனர்.

இவர்களுள் 28 ஆயிரத்து 489 பேர் இந்திய வம்சாவழிகளாவர். அவர்கள் பிரஜா உரிமைகள் இழந்து நாடற்ற பிரஜைகளாகவே வாழ்கின்றனர்.

இவர்களுக்கு பிரஜா உரிமை பெற்றுக்கொடுக்கும் நோக்கில் உருவாக்கப்பட்ட நாடாளுமன்றத் தெரிவுக்குழுவின் செயற்பாட்டுக்கு இப்போது வெற்றி கிடைத்துள்ளது.

தற்போது நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள இந்தத் தெரிவுக்குழுவின் அறிக்கைக்கு நாடாளுமன்ற அங்கீகாரம் கிடைக்கப் பெற்றுள்ளது. இதனையிட்டு நாம் மகிழ்ச்சியடைகின்றோம்.

இலங்கை அரசு இந்தியாவுடன் நட்புறவு கொண்டுள்ள நிலையில், மூன்று மாதங்களுக்குள் அங்குள்ள எமது மக்களை இங்கு அழைத்து வந்து அவர்களுக்கு பிரஜா உரிமை, தொழில்வாய்ப்பு உள்ளிட்ட அனைத்து வசதிகளையும் வழங்கவேண்டும் - என்றார். (அ-சி)

# யாழ்.நகரப் பாடசாலைகளுக்கு சென்ற கல்வி அமைச்சர் தேவைகள் குறித்து ஆராய்வு

யாழ்ப்பாணம், ஜூன் 25

யாழ்ப்பாணத்துக்கு ஒருநாள் விஜயம் மேற்கொண்ட கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜெயந்த யாழ். நகரப் பாடசாலைகளுக்குச் சென்று அங்குள்ள நிலைமைகளை ஆராய்ந்தார்.

அவருடன் சமூக சேவைகள் மற்றும் சமூகநலந்துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவும் சென்றிருந்தார்.

யாழ். மத்திய கல்லூரி, வேம்படி மகளிர் உயர்தர பாடசாலை ஆகியவற்றுக்கு விஜயம் செய்த அமைச்சர்கள் இருவரையும் அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவ மாணவிகள் அனைவரும் மகிழ்ச்சியுடன் வரவேற்றனர். தேசிய பாடசால்லகளை சுற்றிப் பார்வையிட்ட அமைச்சர்கள் பாடசாலை வளங்கள் மற்றும் ஏனைய காரணிகளை நேரடியாகப் பார்வையிட்டதுடன் தற்போது நிர்மாணிக்கப்பட்டு வரும் புதிய கட்டடங்களையும் பார்வையிட்டனர்.

இதனைத் தொடர்ந்து பாடசாலை அதிபர்களுடனான சந்திப்புக்களையும் மேற்கொண்டனர். ஒட்டு மொத்த யாழ். மாவட்ட பாடசாலைகளின் தேவைகள் மேற்படி இரு பாடசாலைகளின் விஜயத்தின்போதும் அதிபர்களுடனான சந்திப்புக்களின் போதும்கண்டறியக் கூடியதாக இருப்பதாக தெரிவித்த கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜெயந்த குடா நாட்டு பாடசாலைகளில் நிலவும் குறைபாடுகளை நிவர்த்தி செய்வது தொடர்பில் தான் விரைவில் நடவடிக்கை எடுக்கவுள்ளதாகவும் தெரிவித்தார்.

இவ் விஜயத்தின் போது யாழ்ப்பாணத்துக்கு வருகைதந்த சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை பிரதி அமைச்சர் லயனல் பிரேமசிறி அவர்களும் பங்கு கொண்டமை குறிப்பிடத்தக்கது. (அ-1)

# கடைசி பஸ் சேவைகள் 7.30 மணிக்கு நீடிப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 25

ஊரடங்குச்சட்டம் இரவு 11 மணிமுதல் நடைமுறைப்படுவதால் யாழ்.மத்திய பஸ் நிலையத்தில் இருந்து கடைசி பஸ் சேவைகள் இரவு 7.30 மணிக்கு நீடிக்கப்பட்டுள்ளது என்று போக்குவரத்துச் சபையின் பிரதான பிராந்திய முகாமையாளர் அறிவித்துள்ளார்.

இந்த நடைமுறை இன்று வியாழக்கிழமை அமுலுக்கு வருவதாகவும் அவர் தெரிவித்தார். (1)

# கண்ணீர் அஞ்சலி



எம்முடன் கல்வி பயிலும் சக மாணவி சோபனா அவர்களின் அன்புத் தந்தை

## அ.முத்துக்குமாரசுவாமி

அவர்களின் மறைவுச் செய்தி கேட்டு ஆழ்ந்த துயரடைகிறோம். அன்னாரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதோடு அவரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

19 ஆம் அணி (86535)

விவசாய பீடம், யாழ். பல்கலைக்கழகம்.

# மரண அறிவித்தல்கள்

## விபிதாஸ் பிரதிக்ஹன்

அளவெட்டி வடக்கைச் சேர்ந்த விபிதாஸ் பிரதிக்ஹன் நேற்று (24.06.2009) புதன்கிழமை காலமானார்.

அன்னார் விபிதாஸ் - நிமலனா தம்பதிகளின் அன்பு மகனும் திலக்ஷனா, லக்ஷலன் ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (24.06.2009) புதன்கிழமை பி.ப. 3.30 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் அளவெட்டி இந்து மயானத்தில் தகனம் செய்யப்பட்டது

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

அளவெட்டி வடக்கு,
அளவெட்டி

தகவல்
குடும்பத்தினர்.

## திருமதி செல்லத்துரை பாக்கியம்



நல்லூர், சட்டநாதர் கோயிலடி, இல.942, பருத்தித்துறை வீதியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி செல்லத்துரை பாக்கியம் நேற்று (24.06.2009) புதன்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஐயம்பிள்ளை - ஆச்சிப்பிள்ளை தம்பதியரின் மகளும் காலஞ்சென்றவர்களான பொன்னையா - சின்னப்பிள்ளை தம்பதியரின் மருமகளும் காலஞ்சென்ற பொன்னையா செல்லத்துரையின் அன்பு மனைவியும் விஜயதேவி (பொட்ஸ்வானா), காலஞ்சென்ற காங்கேயன் மற்றும் லலிதாதேவி (லண்டன்), விஜயராணி, நிற்கந்தா (காந்தி, இலங்கை செஞ்சிலுவைச் சங்கம்,யாழ்ப்பாணம்) ஆகியோரின் அன்புத் தாயும் பாலசிங்கம் (பொட்ஸ்வானா), தருமலிங்கம் (லண்டன்), விமலாதேவி (கடற்றொழில், நீரியல்வளதுறைத் திணைக்களம், யாழ்ப்பாணம்) ஆகியோரின் மாமியும் விஜயபாலா (கனடா), தேவபாலா (லண்டன்), ஜெயபாலா (லண்டன்), உமா (லண்டன்) உஷா (லண்டன்)ஆகியோரின் அருமைப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இல.621, பருத்தித்துறை வீதி, முத்திரைச் சந்தியிலுள்ள அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக இன்று( 25.06.2009)வியாழக் கிழமை முற்பகல் 10.30 மணியளவில் செம்மணி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல.621, பருத்தித்துறை வீதி,
முத்திரைச் சந்தி, நல்லூர். (86537)

தகவல்:
செ.நிற்கந்தா(காந்தி -மகன்).

## திருமதி சதாருபவதி பாலசுப்பிரமணியம்

(இளைப்பாறிய அதிபர், யா/சண்முகநாத மகாவித்தியாலயம் கரம்பன்)

கரம்பன் மேற்கு, ஊர்காவற்றுறையைப் பிறப்பிடமாகவும் கொள்ளுப்பிட்டியை வதிவிடமாகவும் கொண்ட திருமதி சதாரூபவதி பாலசுப்பிரமணியம் 23.06.2009 செவ்வாய்க்கிழமை கொழும்பில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற Dr.Y.ஏகாம்பரம் - அதிரூபவதி தம்பதிகளின் மகளும் காலஞ்சென்ற கணபதிப்பிள்ளை - பொன்னம்மா தம்பதியினரின் மருமகளும் க.பாலசுப்பிரமணியத்தின் (இளைப்பாறிய பிரதம கல்வி அதிகாரி) மனைவியும் Dr.பரமகுரு, Dr.பரமேஸ்வரன், பரஞ்சோதி, காலஞ்சென்ற பரமநாதன் மற்றும் பரமானந்தன், பரலோகசுந்தரம் ஆகியோரின் சகோதரியும் பாலரூபன், கலாவல்லி, சோபனா, உஷா, ஞானரூபன், தர்மினி, சாந்திரூபன் ஆகியோரின் தாயாரும் சகுந்தலா, தர்மகுணசிங்கம், பிரகதீஸ்வரன், மனோகரன், யசோ, பவானிஷங்கர், சாந்தகுமாரி ஆகியோரின் மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (25.06.2009) வியாழக்கிழமை பி.ப. 5.30 மணியளவில் கல்கிசை மஹிந்த மலர்ச்சாலையில் நடைபெற்று பூதவுடல் கல்கிசை மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல. 17/2, சென்.அன்ரனீஸ் மாவத்தை,
கொள்ளுப்பிட்டி.

தகவல்:
குடும்பத்தினர்.


# திறப்பு விழா அழைப்பு

இன்று (25.06.2009) வியாழக்கிழமை காலை 7.30-8.55 மணி வரையான சுபமுகூர்த்த வேளையில் எமது மூன்றாவது கிளையினை மானிப்பாயில் ஆரம்பிக்கின்றோம்.

இந்த நிகழ்வில் எமது அனைத்து வாடிக்கையாளர்களையும் கலந்து சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

யாழ்.வீதி,
மானிப்பாய்.

மூர்த்தி லேசர்
டிஜிற்றல் கலர் லாப்.


# 45ஆம் நாள் நினைவு அஞ்சலியும் வீட்டுக் கிருத்திய அழைப்பும்



கடந்த 12.05.2009 அன்று இறைபதம் அடைந்த எமது அன்புத் தெய்வம்

அமரர்

## சு.கந்தசாமி தர்மகுலசிங்கம்

(நிர்வாக அதிகாரி, சுகாதார வைத்திய பணிமனை, முல்லைத்தீவு)

பிறப்பு: 02.11.1948 இறப்பு: 12.05.2009

அவர்களின் வீட்டுக்கிருத்திய கிரியைகள்இன்று (25.06.2009) வியாழக்கிழமை மு.ப. 11 மணியளவில் அன்னாரின்இல்லத்தில் நடைபெறும். அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளும் வண்ணம்அன்புடன் அழைக்கின்றோம்.

வராகி கோயிலடி,
கொக்குவில் மேற்கு,
கொக்குவில். (86507)

இ.கிருபாகரன் (நோர்வே),
குடும்பத்தினர்.

# கண்ணீர் அஞ்சலி



எமது சக மாணவி செல்வி காயத்திரி அவர்களின் அன்புத் தந்தை

## இராசையா சண்முகநாதன்

அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

HNDA, 2ஆம் வருட மாணவர்கள்
(Evening) A.T.I., JAFFNA.

# சூட்டுக்காயங்களுடன் சடலம் ஒப்படைப்பு

யாழப்பாணம், ஜூன் 25

கொடிகாமம் பொலிஸாரால் சூட்டுக் காயங்களுடன் 30 வயது மதிக்கத்தக்க இளைஞன் ஒருவரின் சடலம் யாழ். ஆஸ்ப்பத்திரியில் நேற்றிரவு 7மணிக்கு ஒப்படைக்கப்பட்டுள்ளது.

அடையாளம் காணப்படாத நிலையில் சடலம் சவச்சாலையில் வைக்கப்பட்டுள்ளது. (1-25)

# ஆதரவற்ற 400 சிறுவர்களை பொறுப்பேற்கிறது எஸ்.ஓ.எஸ்.

கொழும்பு, ஜூன் 25

வவுனியா நலன்புரி நிலையங்களில் தங்கியுள்ள சிறுவர்களில் ஆதரவற்ற 400 சிறுவர்களை எஸ்.ஓ.எஸ். சிறுவர் பராமரிப்பு நிறுவனம் பராமரிக்கவிருக்கிறது என்று நுவரெலியா எஸ்.ஓ.எஸ். நிறுவன இயக்குநர் பி.எம்.குமார் தெரிவித்தார்.

செட்டிக்குளம் பகுதியில் இந்த நிறுவனத்தினரால் அமைக்கப்பட்டுவரும் தற்காலிக முகாம்களிலேயே இவர்கள் தங்க வைக்கப்பட்டுப் பராமரிக்கப்படவுள்ளனர். (7)


# குளிரூட்டிய வான் வாடகைக்கு

குளிரூட்டிய வான் வாடகைக்குண்டு. திருமண மற்றும் சுற்றுலா தேவைகளுக்கு உடன் தொடர்பு கொள்ளவும்.

சண்டெல் தொலைபேசியும் விற்பனைக்குண்டு.

தொடர்பு:
தொ.பே.இல.0773564245

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

# ஆபத்துக்குள்ளாகும் ஊடக சுதந்திரம்

நாட்டின் அரசமைப்பினால் எழுத்தில் உறுதிசெய்யப்பட்டிருக்கும் கருத்து வெளிப்பாட்டுச் சுதந்திரத்தில் பிரதானமானது ஊடக சுதந்திரம்.

இக்கட்டான நிலையில் நாடு சிக்கித் தவிக்கும் இன்றைய கட்டத்தில், நாட்டில் மிகவும் பாதிப்புக்குள்ளாகியுள்ள முக்கிய பிரிவாக ஊடகத் துறையே உள்ளது.

உலகில் ஊடகங்களுக்கு மிகவும் ஆபத்து நிறைந்த நாடுகளின் வரிசையில் முன்னிலை இடம் இலங்கைக்கு கிடைத்திருக்கிறது.

ஊடக சுதந்திரத்தைப் பொறுத்தவரை தொண்ணூறுகளின் ஆரம்பத்தில் காணப்பட்ட இருண்ட யுகமே இன்று நாட்டில் மீண்டும் ஏற்பட்டிருக்கின்றது என்பது வெளிப்படையானது.

கடந்த மூன்றரை ஆண்டுகால இந்த ஆட்சியில் ஊடகங்களுக்கு எதிராகக் கட்டவிழ்த்து விடப்பட்ட வன்முறைகள் மிகவும் மோசமானவை. இக்கொடூரங்களைப் புரிந்த குற்றவாளிகள் யாரும் சட்டத்தின் முன் நிறுத்தப்பட்டனர் எனத் தகவல் இல்லை. ஊடகங்களையும் ஊடகவியலாளர்களையும் தாக்கி வன்முறை அச்சுறுத்தலுக்கு உள்ளாக்குபவர்களுக்கு சட்ட விலக்களிக்கும் சிறப்புரிமை வழங்கப்பட்டுள்ள நாடு இதுவோ என உலகம் இலங்கையைப் பார்த்துப் பரிகசிக்கும் அளவுக்கு இங்கு ஊடக சுதந்திரம் கொடிகட்டிப் பறக்கின்றது(?).

இந்த நிலையில், இப்போது ஊடக சுதந்திரத்துக்கு இறுதி ஆப்பு வைக்கும் எத்தனத்தை அரசு எடுத்திருப்பதாகக் குற்றச்சாட்டு எழுந்திருக்கிறது.

ஊடக வெளியீட்டாளர்களுக்கும், ஊடகவியலாளர்களுக்கும், சிறை, அபராதம் போன்ற குற்றத் தண்டனைகளை விதிப்பதற்கு வழி செய்யும் பத்திரிகைப் பேரவைச் சட்டத்துக்கு (Press Council Law) மீள உயிர்கொடுத்து நடைமுறைக்குக் கொண்டு வருவதற்கு ஜனாதிபதி மஹிந்த ராஷபக்ஷ தலைமையிலான அரசு எடுத்திருக்கும் தீர்மானமே, இலங்கையில் ஊடக சுதந்திரத்தின் சவப்பெட்டிக்கு அறையப்படும் இறுதி ஆணியாகக் கருதப்படுகின்றது.

ஊடக சுதந்திரத்துக்கு நிரந்தர வேட்டு வைக்கும் விதத்தில் முன்னெடுக்கப்படும் இந்த முயற்சியை இலங்கைப் பத்திரிகை ஆசிரியர்கள் சங்கம், இலங்கை பத்திரிகைகள் சமூகம், உழைக்கும் பத்திரிகையாளர் சங்கம், தமிழ் ஊடகங்களின் கட்டமைப்பு, முஸ்லிம் ஊடக அமைப்பு, ஊடக ஊழியர் தொழிற்சங்கங்களின் கூட்டமைப்பு, தெற்காசிய சுயாதீன ஊடக அமைப்பு (இலங்கைப் பிரிவு), சுதந்திர ஊடக இயக்கம் ஆகிய இலங்கையில் உள்ள ஊடக அமைப்புகள் அனைத்தும் ஒன்று சேர்ந்து ஒரே குரலில் எதிர்த்துக்குரல் எழுப்பி இருக்கின்றன.

ஊடகங்களின் குரல்வளையை முற்றாக நசுக்கி அடக்கும் முயற்சியின் ஆரம்பமே இந்தச்சட்டத்திற்கு மீள உயிர் கொடுக்கும் அரசின் தற்போதைய எத்தனம் என விசனத்தோடு அவை சுட்டிக்காட்டியிருக்கின்றன.

மேற்படி அரசினால் மீள உயிர்கொடுக்கத் திட்டமிடப்படும் பத்திரிகைப் பேரவைச் சட்டத்தின் முன்னைய அனுபவம் மிக மோசமானது. ஊடக சுதந்திரத்தில் அது ஏற்படுத்திய பயங்கரப் பட்டறிவு மறக்கற்பாலானதல்ல.

இந்தப் பின்னணியிலேயே 1994 ஒக்ரோபரில் இந்த சட்டத்தை செயலிழக்கச்செய்யும் விதத்திலான புதிய ஏற்பாடு ஒன்றைக் கொண்டு வருவதற்கு அப்போதைய அமைச்சரவை தீர்மானம் ஒன்றை எடுத்தது.

ஊடகவியலாளர்களையும், வெளியீட்டாளர்களையும் நெறிமுறைப்படுத்துவதற்கு சிறைத்தண்டனை விதிக்கும் சட்டங்களை விட, ஊடகவியலாளர்களையும் ஏனைய ஊடகத்தரப்புக்களையும் கொண்ட சுயகட்டமைப்பு முறையே சிறந்தது என அமைச்சரவை அச்சமயம் கருதியதால் அத்தகைய முறைமைக்கு வழி செய்யப்பட்டது. இதனடிப்படையில் பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக்குழு (Press Complaints commission) நிறுவப்பட்டு, அது வெற்றிகரமாக செயற்பட்டும் வருகிறது.

இதேசமயம், முன்னைய - கொடூரமான போக்குடைய - பத்திரிகைப் பேரவை சட்டத்தை செயலிழக்கச் செய்து மாற்று ஏற்பாட்டை முன்மொழியும் 1994 ஆம் ஆண்டின் அமைச்சரவைத் தீர்மானம் எடுக்கப்பட்டபோது அந்த அமைச்சரவையில் தற்போதைய அரசுத்தலைவர் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவும் மூத்த அமைச்சராக விளங்கினார் என்பது குறிப்பிடத்தக்கது.

அதற்குப்பின்னர், 2002 ரணில் விக்கிரமசிங்க பிரதமராக இருந்தபோது, ஊடகவியலாளர்களுக்கு எதிரான அவமதிப்பு குற்றச்சாட்டுகளுக்காக அவர்களைக் கிரிமினல் குற்றப்பொறுப்பாக்கும் சட்டமுறைமை அடியோடு நீக்கப்பட்டு ஊடக சுதந்திரத்துக்கு மெருகூட்டும் நடவடிக்கை எடுக்கப்பட்டது.

ஊடகத்துறையினராலும், கருத்து வெளிப்பாட்டுச் சுதந்திரத்தில் ஈடுபாடு கொண்டுள்ள மனித உரிமை ஆர்வலர்களாலும் இந்த நடவடிக்கை விதந்துரைக்கப்பட்டு, வரவேற்கப்பட்டது.

இதற்கான சட்டத்திருத்தம் 2002 ஜூனில் நாடாளுமன்றத்துக்கு கொண்டு வரப்பட்டபோது அது அப்போதைய அரசு மற்றும் எதிர்க்கட்சிகள் தரப்பினால் ஏகமனதாக வரவேற்கப்பட்டு நிறைவேற்றப்பட்டது. அச்சமயம் எதிர்க்கட்சித்தலைவராக விளங்கி இந்த முயற்சிக்கு முழு ஒத்துழைப்பும் ஆதரவும் கொடுத்தவர் இப்போதைய ஆட்சித் தலைவர் மஹிந்த ராஜபக்ஷ தான்.

நிறைவேற்று அதிகார ஜனாதிபதி என்ற ஆதிக்கப் பதவியைக் கையில் எடுக்கும் வரை மனித உரிமைகளுக்காகவும் ஊடக சுதந்திரம் உட்பட்ட கருத்து வெளியிடும் சுதந்திரத்துக்காகவும் போராடிய 'மனித உரிமைப்போராளியாக' தன்னை உலகிற்கு இனங்காட்டிய இந்தத் தலைவரின், இப்போதைய நோக்கும் போக்கும் இப்போதுதான் மெல்லமெல்ல வெளிப்படுகின்றது போலும்....!

முன்னாள் மனித உரிமைப்போராளியின் ஆட்சி அதிகாரத்தில் இப்படி மனித உரிமைகள் சவக்குழிக்குள் போவது வெளியாருக்கு ஆச்சரியத்தைத் தருவதாக இருந்தாலும் ஏனையோருக்கு எதிர்பார்க்கப்பட்ட விடயம் தான். கட்டுமட்டில்லாத அதிகாரம் கைக்கு வருவது இத்தகைய நிலையை நோக்கித்தான் யாரையும் நகர்த்தும் என்பது ஊகிக்கத்தக்கதே.

# 394 யாழ்.மாவட்டத் தொண்டர் ஆசிரியர்களுக்கு இரண்டு வார காலத்துக்குள் நிரந்தர நியமனம்

## கல்வி அமைச்சர் சுசில் பிரேம ஜயந்த உறுதியளிப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 25

யாழ்.மாவட்டத்தில் நேர்முகப் பரீட்சைக்குத் தோற்றிய தொண்டர் ஆசிரியர்கள் இரண்டு வாரத்துக்குள் ஆசிரிய உதவியாளர்களாக நியமிக்கப்படுவார்கள்.

நேற்றுக் காலை யாழ்.வந்த கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தொண்டர் ஆசிரியர்களைச் சந்தித்து கலந்துரையாடிய பின்னர் இந்த உறுதிமொழிகளை வழங்கினார்.

இது தொடர்பாக அமைச்சர் மேலும் தெரிவித்தவை வருமாறு:

யாழ். மாவட்டத்தில் தொண்டர் ஆசிரியர்களாக கடமையாற்றுகின்றவர்களில் 374 பேருக்கு அண்மையில் நேர்முகப் பரீட்சை நடத்தப்பட்டது.

இவர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்குவது தொடர்பாக அமைச்சரவைப் பத்திரம் தாக்கல்செய்யப்பட்டது.

இவர்களை உடனடியாக ஆசிரிய உதவியாளர்களாக நியமனம் செய்யுமாறு மாகாணக் கல்விப் பணிப்பாளர்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

ஐந்து வருடங்கள் இவர்கள் ஆசிரிய உதவியாளர்களாகக் கடமையாற்றுவார்கள். அக்காலப் பகுதியில் இவர்களுக்கு ஆசிரிய பயிற்சிக் கலாசாலைகளில் பயிற்சி வழங்கப்படும். அதன் பின்னர் இவர்கள் ஆசிரியர்களாக நியமிக்கப்படுவார்கள்.

அத்துடன் தொண்டர் ஆசிரியர்கள் பட்டதாரிகளாகவோ அல்லது ஆசிரியப் பணி தொடர்பான பயிற்சிகள் ஏதும் பெற்றிருந்தால் அவர்களுக்கு நேரடியாக ஆசிரியர் நியமனம் வழங்கப்படும் என்றார் அமைச்சர்.

(50-9-111-236)

# குடாநாட்டுக் கல்வித்துறையில் நிலவும் குறைபாடுகளை உடனடியாக நிவர்த்தி செய்வதற்கு நடவடிக்கை

## வேலையற்ற பட்டதாரிகளுக்கும் விரைவில் நிரந்தர நியமனம்

யாழ்ப்பாணம், ஜூன்.25

யாழ்.குடாநாட்டுக் கல்வித்துறையில் காணப்படும் குறைபாடுகளை உடனடியாக நிவர்த்தி செய்வதற்கு உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படும் எனக் கல்வியமைச்சர் சுசில் பிரேம ஜயந்த நேற்றுத் தெரிவித்தார்.

யாழ்.செயலகத்தில் நேற்றுக் காலை நடைபெற்ற கல்வி அபிவிருத்தி மாநாட்டிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

வடக்கின் கல்வி அபிவிருத்தி தொடர்பான ஆய்வு மாநாடு ஒன்று யாழ்.செயலகக் கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா ஆகியோர் இதில் கலந்துகொண்டனர்.

நேற்று முற்பகல் 11.30 மணியளவில் யாழ்.செயலகத்திற்கு வருகை தந்த கல்வி அமைச்சரை அரச அதிபர் கே.கணேஷ் வரவேற்றார்.

யாழ்.செயலகக் கேட்போர் கூடத்தில் மாகாணக் கல்விப் பணிப்பாளர் வே.ரி.செல்வரத்தினம் தலைமையில் கல்வி அபிவிருத்தி தொடர்பான மாநாடு நடைபெற்றது.

இந்த மாநாட்டில் கல்வி அமைச்சர் சுசில் பிரேம ஜயந்த உரையாற்றுகையில் அறிவித்த தீர்மானங்கள் வருமாறு:

நேர்முகப் பரீட்சை நடத்தப்பட்டு இதுவரை நியமனம் வழங்கப்படாத பட்டதாரிகளுக்கு உடனடியாக நியமனம் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

வேம்படி மகளிர் கல்லூரியில் இடம் பெற்று வருகின்ற கட்டட வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டு கணனிகள் வழங்குவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

2010 ஆம் ஆண்டுக்கான பாடப் புத்தகங்கள் அச்சிடப்பட்டுள்ளன. இதில் வருட இறுதிக்குள் மாணவர்களுக்கு பாடப் புத்தகங்களையும் இலவச சீருடைகளையும் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

ஆசிரியர் பயிற்சி பெறுகின்றவர்களுக்குரிய கொடுப்பனவுகள் இரண்டு மடங்காக அதிகரிக்க அமைச்சரவைப் பத்திரம் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

வடமாகாணத்தில் 30 பாடசாலைகள் 'இசுறுபாய' திட்டத்தில் தெரிவு செய்யப்பட்டுள்ளன. அவற்றில் ஆறு பாடசாலைகள் யாழ்.மாவட்டத்திற்குள் உள்ளடங்குகிறது. தெரிவு செய்யப்பட்ட இசுறுபாய திட்டப் பாடசாலை அதிபர்களுக்கு பயிற்சிகள் நிறைவு பெற்றுள்ளது.

ஆசிரிய சேவையிலிருந்து ஓய்வு பெறுதல்,பதவி உயர்வு தொடர்பாக மாகாண கல்வி அலுவலகத்துடன் தொடர்புகொண்டு தேவையைப் பூர்த்திசெய்ய நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது.

சுமார் ஒரு மணி நேரம் நடைபெற்ற இந்தக் கல்வி அபிவிருத்தி தொடர்பான மாநாட்டில் யாழ்.பல்கலைக்கழக துணைவேந்தர் யாழ்.மாவட்டத்தில் உள்ள கல்விப் பணிப்பாளர்கள், வேலையற்ற பட்டதாரிகள் கல்வியியற் கல்லூரி ஆசிரியர்கள், மாணவர்கள் ஆசிரிய பயிற்சிக் கலாசாலை மாணவர்கள், பாடசாலை அதிபர்கள் எனப் பலர் கலந்துகொண்டனர்.(50-9-111)

# நலன்புரி நிலையங்களில் உள்ள சிறுவர்கள் பெரும் போசாக்குக் குறைபாட்டினால் பாதிப்பு

இடம்பெயர்ந்தோர் முகாம்களில் தங்கியுள்ள அதிக எண்ணிக்கையிலான சிறுவர் சிறுமியர் பெரும் போசாக்கு குறைபாட்டினால் பாதிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

வவுனியா மெனிக் பாம் இடம் பெயர்ந்தோர் முகாமில் பணியாற்றும் ஓர் தொண்டு நிறுவனம் இந்தத் தகவலை வழங்கியுள்ளது.

இடம்பெயர்ந்தோர் முகாம்களில் தங்கியிருக்கும் 5000த்திற்கும் மேற்பட்ட சிறுவர்கள் மந்த போசனையினால் அல்லலுறுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

மனிக் பாம் இடம்பெயர்ந்தோர் முகாமில் சுமார் 30000 முதல் 35000 வரையிலான சிறுவர்கள் தங்கியிருப்பதாக சர்வவோதய தொண்டு நிறுவனத்தின் பணிப்பாளர் டாக்டர் வின்யா ஆரியரட்ன தெரிவித்துள்ளார்.

அநேகமான சிறுவர்கள் நோய்களினால் பாதிக்கப்பட்டுள்ளதாகவும், மேலும் பலர் காயங்களுக்கு உள்ளாகியிருப்பதாகவும் தெரிவித்துள்ளார்.

இறுதிக் கட்ட யுத்தம் நடைபெற்ற காலத்தில் உரிய வகையில் உணவு உட்கொள்ளாத காரணத்தினால் அதிகளவு சிறுவர்கள் போசாக்குக் குறைபாட்டுக்கு உள்ளாகியுள்ளனர்.

சர்வோதய, யுனிசெப் ஆகிய தொண்டு நிறுவனங்களுடன் இணைந்து சுகாதார அமைச்சு போசாக்குக் குறைபாட்டை கட்டுப்படுத்த நடவடிக்கை மேற்கொண்டு வருவதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

கழிவறை வசதி, குடிநீர் வசதி என ஏனைய அடிப்படை வசதிகளின்றியும் சிறுவர்கள் பாதிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (50)

## நாளை

| | |
|---|---|
| ஆனி 12 | 26.06.2009 |
| | வெள்ளிகிழமை |
| திதி: | சதுர்த்தி |
| | மா. 4.40 வரை |
| நட்சத்திரம்: | ஆயிலியம் |
| | மு.இ. 06.40 வரை |
| சுபநேரம்: | 05.55 - 07.25 |
| ராகுகாலம்: | 10.25 - 11.55 |

# இலங்கை வங்கியில் பயிலுநர் விண்ணப்பம் கோரல்

கொழும்பு, ஜூன் 25

இலங்கை வங்கி, இளைஞர், யுவதிகளிடமிருந்து 'பயிற்சி பதவி நிலை உதவியாளர்' பயிலுநர்களைத் தெரிவு செய்வதற்கான விண்ணப்பங்களைக் கோரியுள்ளது.

விண்ணப்ப முடிவுத் திகதியன்று 24 வயதுக்கு குறைந்த இளைஞர் - யுவதிகள் இதற்கென விண்ணப்பிக்க முடியும்.

ஜி.சீ.ஈ. சாதாரணதர பரீட்சையில் ஒரே தடவையில் தாய் மொழி (தமிழ்/ சிங்களம்) கணிதம், ஆங்கிலம் ஆகிய பாடங்கள் உள்ளடங்கியதாக 5 பாடங்களில் திறமைச் சித்தி பெற்றிருப்பதுடன், ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சையில் ஒரே தடவையில் மூன்று பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

நிறுவனத்தின் இலக்குகளை அடைந்து கொள்வதற்கான ஆக்கபூர்வமான மனோபாவமும், அர்ப்பணிப்புணர்வும் கொண்டிருத்தல் வேண்டும்.

குழுவின் உறுப்பினராக இணைந்து பணி செய்வதற்கேற்ற திறமைகளைக் கொண்டிருத்தல் வேண்டும்.

சிறந்த பயனளிக்கத்தக்க தொடர்பாடல் திறமைகளுடன் அழுத்தங்கள் நிறைந்த சூழலிலும் உறுதியோடு பணியாற்றத்தக்க திறமை கொண்டிருக்க வேண்டும்.

இலங்கையில் எந்தப் பாகத்திலும் கடமை செய்வதற்கு விருப்பம் கொண்டவராக இருக்க வேண்டும்.

எழுத்து மூலம் போட்டிப் பரீட்சை, மற்றும் நேர்முகப் பரீட்சை என்பவற்றைத் தொடர்ந்து தெரிவுகள் மேற்கொள்ளப்படும்.

தெரிவு செய்யப்படும் விண்ணப்பதாரிகள் இரண்டு ஆண்டுகளுக்கு வங்கி தொழில் துறையின் அனைத்து அம்சங்களையும் உள்ளடக்கக்கூடிய விதத்தில் பயிற்சிகள் வழங்கப்படும். பயிற்சிக் காலத்தின் போது பயிற்சிக் கொடுப்பனவு ஒன்று வழங்கப்படும்.

பயிற்சிக் காலத்தின் நிறைவின் பின் வெற்றி பெறும் விண்ணப்பதாரிகள் வங்கியின் நிரந்தர பதவி நிலை உதவியாளர் பதவிகளுக்கு நியமிக்கப்படுவதோடு கவர்ச்சிகரமான சம்பளப் பொதியுடன் பல்வேறு பயன்களையும் பிரகாசமான தொழில்சார் நன்மைகளையும் பெறுவார்கள்.

அதற்கென வெளியிடப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பத்தைப் பயன்படுத்தி விண்ணப்பத்தைப் பூரணப்படுத்திக் கொள்வதோடு பிறப்புச் சான்றிதழ் மற்றும் கல்விச் சான்றிதழ்களின் பிரதிகளையும் இணைத்து (சான்றிதழ்களின் மூலம் பிரதிகளை இணைக்க வேண்டாம்)''பிரதான முகாமையாளர் (ஆட்சேர்ப்பு மற்றும் தொழில் அபிவிருத்தி) இலங்கை வங்கி, மனிதவளப் பிரிவு 26ஆம் மாடி, தலைமையகக் கட்டடம் கொழும்பு- 01 என்ற முகவரிக்கு எதிர்வரும் ஜூலை மாதம் 10 ஆம் திகதிக்கு முன் கிடைக்கக் கூடியதாக பதிவுத்தபாலில் அனுப்பி வைக்க வேண்டும்.''

கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் "Trainee staff assistant" எனக் குறிப்பிட்டு அனுப்புதல் அவசியமாகும். - என அறிவிக்கப்பட்டுள்ளது.

(50)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாராட்டி வாழ்த்துகின்றோம்



யா/மீசாலை வீரசிங்கம் மகா வித்தியாலயத்தின் அதிபராகப் பணியாற்றி பல சாதனைகள் நிலை நாட்டி தற்போது சாவகச்சேரி கோட்டக்கல்வி அலுவலராகப் பதவியுயர்வு பெற்றுள்ள

எங்கள் அன்புச் சித்தப்பா உயர்திரு. கு.சிவானந்தம்

அவர்கள் மேலும் பல சாதனைகள் புரிந்து மென்மேலும் பல பதவியுயர்வுகளைப் பெற்று பல்லாண்டு காலம் வாழ எல்லாம் வல்ல மீசாலை வெள்ளை மாவடிப் பிள்ளையாரை வேண்டி அகமகிழ்ந்து வாழ்த்துகின்றோம்.

இல.9, நவீன சந்தை, சாவகச்சேரி.

கு.இ.கோகிலன் (உரிமையாளர், அபிஷா ரெக்ஸ்).

(சி/559180).

# 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

தோற்றம்
30
★
12
★
1932



மறைவு
26
★
05
★
2009

## அமரர் விசுவலிங்கம் இராசநாயகம்பிள்ளை

கடந்த 26.05.2009 அன்று சிவப்பேறடைந்த எமது குடும்பத் தலைவரின் வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் இன்று (25.06.2009) வியாழக்கிழமை மு.ப. 10 மணிமுதல் எமது இல்லத்தில் நடைபெறும்.

இந்நிகழ்விற்கு வருகை தந்து, அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதிய போசன நிகழ்விலும் பங்கு கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கிறோம்.

கேலந்து அம்மன் கோயிலடி, மந்துவில் மேற்கு, கொடிகாமம். (சி/559173)

குடும்பத்தினர்.

# மரண அறிவித்தல்கள்

## கந்தசாமி ஐயர் சுப்பிரமணியம் (சுப்பு)



சங்கரத்தையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கந்தசாமிஐயர் சுப்பிரமணியம் நேற்று (24.06.2009) புதன்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தசாமி ஐயர் – கமலாம்பிகை அம்மாள் தம்பதியினரின் மகன் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (25.06.2009) வியாழக்கிழமை பி.ப. ஒரு மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கியைகளுக்காக சங்கரத்தை இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சங்கரத்தை, வட்டு. கிழக்கு.

தகவல்: வே.இராமலிங்கக் குருக்கள் (மைத்துனர், சங்கரத்தை ஐயா) (86534)

## இராசையா சண்முகநாதன்



மானிப்பாயைப் பிறப்பிடமாகவும் 29A, சந் தன மாதா கோவில் வீதி, சுண்டுக்குளியை வசிப்பிடமாகவும் கொண்ட இராசையா சண்முகநாதன் (ஓய்வுபெற்ற தபால் ஊழியர் - மன்னார்) நேற்று (24.06.2009) புதன்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற இராசையா மற்றும் செல்லம்மா தம்பதியரின் புதல்வனும் காலஞ்சென்றவர்களான சந்திரசேகரி- தயாநிதி தம்பதியரின் மருமகனும் சந்திரலீலாவின் அன்புக் கணவரும் முகுந்தன் (யாழ். தபாலகம், Civil Engineering 2nd Year, Technical College, Jaffna), சுகந்தன் (ஜேர்மனி), காயத்திரி (HNDA 2nd Year, Jaffna) ஆகியோரின் அன்புத் தந்தையும் திருநாவுக்கரசு, ஆனந்தன், சிவம்-சரோஜினி, கிருஷ்ணதேவி, ராசன், லோகேஸ்வரன், சந்திரன், விஜயன் ஆகியோரின் அன்புச் சகோதரனும் சந்திரகுமாரி, சந்திரபவானி, தனபாலசிங்கம், நாவேந்தன், தமிழ் வாணன், உதயவேந்தன், சுதாமதி, கலாமதி, பானுமதி ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (25.06.2009) வியாழக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்களுக்காக பிற்பகல் 2 மணிக்கு துண்டி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

29A, சந்தன மாதா கோவில் வீதி, சுண்டுக்குளி. (86540)

தகவல்: மனைவி, பிள்ளைகள்.

# பிறந்த நாள் வாழ்த்து



யாழ்ப்பாணம் நாவலர் வீதியை சேர்ந்த துஷிகரன் - பிரமிளா தம்பதிகளின் செல்வப்புதல்வன் து-ரிஷிகேசன் தனது இரண்டாவது பிறந்தநாளை 25.06.2009 வியாழக்கிழமை தனது இல்லத்தில் சிறப்பாக கொண்டாடுகிறார். இவரை அப்பா, அம்மா, அப்பப்பா, அப்பம்மா (கொழும்பு), அம்மப்பா, அம்மம்மா (கரவெட்டி), மாமா, மாமி, மச்சி (கொழும்பு), மாமா, மாமி, மச்சி (சிங்கப்பூர்), சித்தப்பா, சித்தி, தம்பி, (லண்டன்) ஆகியோர் சகல சௌபாக்கியமும், சிறந்த கல்வியும், நீண்ட ஆயுளும் பெற்று நலமுடன் வாழ வாழ்த்துகிறார்கள்.

சி. லோகேஸ்வரன் - அப்பப்பா (கொழும்பு)

# பிற்போடப்பட்டுள்ளது

எதிர்வரும் 28.06.2009 ஞாயிற்றுக் கிழமை நடைபெறவிருந்த எமது செல்வப் புதல்வி செல்வி சரணியா அவர்களின் பூப்புனித நீராட்டு விழா தவிர்க்க முடியாத காரணத்தால் பிற்போடப்பட்டுள்ளது என்பதை அழைப்பிதழ் வழங்கப்பட்ட அனைவருக்கும் அறியத் தருகிறோம்.

திரு. திருமதி அ.சுதர்சன் - சுகந்தினி
இல. 44, சிவப்பிரகாசம் வீதி,
வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்.

# காணி தேவை

கே.கே.எஸ். வீதியில் சுன்னாகம் OR மல்லாகம் OR கே.கே.எஸ். வீதியில் எவ்விடமாயினும் வீதி ஓரமாக காணி தேவை.

தொடர்பு: Ravi
தொ.பே: 0712827938

# வெளிநாட்டவர் இருவருக்கு கொழும்பில் பன்றிக்காய்ச்சல்!

கொழும்பு, ஜூன் 25

பன்றிக்காய்ச்சல் தொற்றுள்ள இரண்டு வெளிநாட்டவர்கள் இலங்கையில் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

பிலிப்பைன்ஸ் நாட்டைச் சேர்ந்த இரண்டு பெண்களுக்கே இந்த தொற்று இருந்தமை கண்டறியப்பட்டுள்ளது. குறித்த இரண்டு பெண்களும் மிகுந்த பாதுகாப்புடன் ஐ.டி.எச். வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

அங்கு மேற்கொள்ளப்பட்ட சோதனையின்போது அவர்கள் இருவருக்கும் எச்1 என்1 தொற்று இருப்பது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது என கொழும்பு வைத்திய பரிசோதனை பிரிவின் பணிப்பாளர் டாக்டர் கீதானி விக்ரமசிங்க தெரிவித்துள்ளார்.

# உலக உணவுத்திட்ட ஜூன் மாத நிவாரணம்

யாழ்ப்பாணம், ஜூன் 25

உலக உணவுத்திட்டத்தின் கீழ் தொழில் ரீதியாகப் பாதிக்கப்பட்டோர், 11.08.2006 இன் பின்னர் இடம்பெயர்ந்தோர் ஆகியோருக்கான ஜூன் மாத நிவாரணம் வழங்கப்படவிருக் கின்றது.

இந்த நிவாரணத்துக்கான வழங்கற் கட்டளைகள் இன்று முதல் செயலக உணவுத்திட்ட மாவட்ட முகாமைத்துவப் பிரிவில் சகல ப. நோ .கூ. சங்கங்களுக்கு வழங்கப்பட்டுள்ளன. வழங்கற் கட்டளைகளைப் பெற்று களஞ்சியத்தில் இருந்து உணவுப்பொருள்களைப் பெற்று உடன் விநியோகத்தை ஆரம்பிக்க வேண்டும் என்று திட்டப்பணிப்பாளர் ம.பிரதீபன் கேட்டுள்ளார். (1)

# சைக்கிளில் சமாந்தரமாகச் சென்றால் தண்டம்

யாழ்ப்பாணம், ஜூன் 25

சைக்கிளில் பயணம் செய்வோர் சமாந்தரமாகச் செல்லக்கூடாது. அவ்வாறு செல்லும் பட்சத்தில் தண்டப்பணம் அறவிடப்படும்.

இவ்வாறு யாழ். நகரில் போக்குவரத்தைக் கண்காணிக்கும் பொலிஸார் அறிவுறுத்திவருகின்றனர்.

சன நெரிசல் நிறைந்த பகுதியில் சைக்கிளில் பயணம் செய்யும் போது சமாந்தரமாச் செல்வதை தவிர்க்க வேண்டும்.

அதை மீறிச் செல்வோருக்கு எதிராக நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்றும் அறிவுறுத்தப்பட்டுள்ளது. (1-224)

# கண்ணீர் அஞ்சலி

எமது பிரதேச செயலகத்தில் சிறுவர் உரிமைகள் மேம்பாட்டு உதவியாளராகக் கடமையாற்றும் திருமதி மயூரன் மாதங்கி அவர்களின் அன்புத் தந்தை

## அய்யாத்துரை முத்துக்குமாரசுவாமி

அவர்கள் காலமானதையிட்டு ஆழ்ந்த கவலை அடைகிறோம். அன்னாரது பிரிவால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கும், உறவினர்களுக்கும் எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதுடன், அன்னாரது ஆத்மா சந்தியடைய வேண்டி எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

தென்மராட்சிப் பிரதேச செயலக ஊழியர் நலன்புரிச்சங்க அங்கத்தவர்கள்.

(சி/559181)

# மரண அறிவித்தல்கள்

## கதிர்காமதேவன் ஜெனிற்றோ நிரோஜன் (K.J)

(ஊழியர், பரந்தன் இரசாயனக் கூட்டுத்தாபனம்)



யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கதிர்காமதேவன் ஜெனிற்றோ நிரோஜன் 21.06.2009 ஞாயிற்றுக் கிழமை கொழும்பில் அகாலமரணமடைந்தார்.

அன்னார் வீமன்காமம் தெல்லிப்பழையைச் சேர்ந்த சுப்பிரமணியம் கதிர்காமதேவன் (Mercantile Security Service) - செல்விராணி (முன்னாள் ஊழியர், பரந்தன் இரசாயனக் கூட்டுத்தாபனம்) தம்பதியினரின் அன்பு மகனும் அனிற்றோ நீரஜா (Instructor, Dept. of Computer Science, University of Jaffna), லொயட் நிதர்சன் (புனித பத்திரிசியார் கல்லூரி) ஆகியோரின் பாசமிகு சகோதரனும், திரு.திருமதி சவிரிமுத்து, காலஞ்சென்ற திரு.திருமதி சுப்பிரமணியம் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்கம் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும். இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

100, வேம்படி லேன், யாழ்ப்பாணம். (86533)

தகவல்: சு.கதிர்காமதேவன் (தந்[illegible]).

## தம்பு வைத்தியநாதன்



மாரி அம்மன் வீதி, திருநெல்வேலியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட தம்பு வைத்தியநாதன் நேற்று (24.06.2009) புதன்கிழமை காலமாகி விட்டார்.

அன்னார் சோதியின் அன்புக் கணவரும், பவானி, பகீதரன் (லண்டன்) ஆகியோரின் அன்புத் தந்தையும், சிறிதரனின் அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (25.06.2009) வியாழக்கிழமை நண்பகல் 12 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கொக்குவில் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

மாரி அம்மன் வீதி, திருநெல்வேலி. (86530)

தகவல்: சிறிதரன் (தூர- மருமகன்).

## மகேந்திரன் சசீந்திரன்



31, கே.கே.எஸ்.வீதி, கொக்குவிலை வசிப்பிடமாகக் கொண்ட மகேந்திரன் சசீந்திரன் கடந்த (22.06.2009) திங்கட்கிழமை அகாலமரணமானார்.

அன்னார் மகேந்திரன் (சாருஜன் பென்சி உரிமையாளர்) -புவனேஸ்வரி தம்பதியினரின் அன்பு மகனும் கஜேந்திரன் (கஜன்), விஜேந்திரன் (விஜன்), நிலாந்தி (நிலா), சாருஜன் ஆகியோரின் பாசமிகு சகோதரனும் மகிழ்பரா, சுபாஜினி ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

31, கே.கே.எஸ்.வீதி, கொக்குவில் மேற்கு, கொக்குவில்.

தகவல்: கா.மகேந்திரன் (தந்தை).

## கதிரவேலு உமாபாலன்



கரம்பொன், ஊர்காவற்றுறையைப் பிறப்பிடமாகவும் சித்தன்கேணியை வசிப்பிடமாகவும் கொண்ட S.K.உமாபாலன் (சாயி அன்பன்) நேற்று (24.06.2009) புதன் கிழமை காலமானார்.

அன்னார் கதிரவேலு - கமலாம்பிகை தம்பதிகளின் கனிஷ்ட புதல்வனும் புனிதவதி (கந்தரோடை - நாகபூசணி அம்மன் ஆலயம்), காலஞ்சென்ற S.K.சிவபாலன் (முன்னாள் இசைப்பேராசிரியர்), சிவயோக ராணி (J.P) ஆகியோரின் அன்புச் சகோதரனும் துரைச்சாமியின் அன்பு மைத்துனரும் சிவசித்தன், சிவரஞ்சினி ஆகியோரின் அன்பு மாமனாரும் விஜயலக்ஷ்மி, பரமானந்தன் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (25.06.2009) வியாழக்கிழமை பி.ப. 3 மணியளவில் கந்தரோடையில் உள்ள அவரது சகோதரியின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக கந்தரோடை சங்கம்புலவு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

கந்தசாமி ஆசிரியர் வீதி, கந்தரோடை, சுன்னாகம். (86532)

தகவல்: குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ். வலயப் பாடசாலைகளில் இருந்து ஒலிம்பியாட் பயிற்சிக்கு 29 பேர் தெரிவு

யாழ்ப்பாணம், ஜூன்25

யாழ். கல்வி வலயப் பாடசாலைகளிடையே கடந்த மே மாதம் நடத்தப்பட்ட கணித, விஞ்ஞான ஒலிம்பியாட் போட்டிப் பரீட்சையில் தெரிவானவர்களின் விவரம் வெளியாகியுள்ளது.

தெரிவானோருக்கான பயிற்சிகள் நாளை மறுதினம் சனிக்கிழமை காலை 9 மணிக்கு யாழ். வலயக்கல்வி அலுவலகத் தில் ஆரம்பமாகவுள்ளன என்று வலயக் கல்விப் பணிப்பாளர் தெரிவித்துள்ளார்.

தெரிவு செய்யப்பட்டவர்களின் விவரம் வருமாறு.

கணிதப்பயிற்சி

ஜெயராஜன் போல் ஜென்ஸன்( சென். பற்றிஸ் கல்லூரி), ரவிக்குமார் விகானி (சாவச்சேரி இந்துக்கல்லூரி), சண்முகநாதன் சாஜிசுதன் ( யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி), டிலக்சஸ்வரன் நிர்மலேஸ் வரன் ( கொக்குவில் இந்துக் கல்லூரி), மோகன் சங்கீத்தனா ( வடமராட்சி மத் திய மகளிர் கல்லூரி), வத்சலன் மிகுந்தன் (யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி), சிவபாலன் சாரங்கன் (யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி), கணேசலிங்கம் தவனுகா (வேம்படி மகளிர் கல்லூரி).

நவரத்தினம் நிதுசன்( ஹாட்லிக் கல்லூரி), சுப்பிரமணியம் திலக்ஸன் (ஹாட்லிக் கல்லூரி), தவேந்திரன் அபிசேகா (நெல்லியடி ம.ம.வி.), சார்ள்ஸ் அன்ரனி பிரான்சிஸ் அருள்நாயகம் (யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி), திவ்வியா பாஸ்கரமூர்த்தி (வேம்படி மகளிர் கல்லூரி), இராஜேந்திரன் துளசிகா (சுண்டுக்குளி மகளிர் கல்லூரி), தனபாலசிங்கம் தக்சயன் (யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி), குகதாசன் பைரவி ( வேம்படி மகளிர் கல்லூரி), சுபசீலன் சுபநிலா (வேம்படி மகளிர் கல்லூரி), பரராசசிங்கம் மிசாந்த் (யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி), பத்மநாதன் கேனுஜா (வேம்படி மகளிர் கல்லூரி), கதிரவேலு மாதுரி (வேம்படி மகளிர் கல்லூரி), கனகராஜா சிறீதுசான் (யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி).

விஞ்ஞானப்பயிற்சி

மகேஸ்வரன் பிருந்தினி(வேம்படி மகளிர் கல்லூரி), காருண்ஜன் சத்தியகுமார் (சென்ஜோன்ஸ் கல்லூரி), மலர்வண்ணன் கோகுலன் (யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி), மகிழ்ரூபன் கிருபராஜா (சென். ஜோன்ஸ் கல்லூரி), தயாளன் தயாரூபன் (ஹாட்லிக் கல்லூரி), வினோதராஜா வினோயா (றிடிபேர்க் கல்லூரி சாவகச்சேரி), வேணுகாந்தன் சாஜிகா (வேம்படி மகளிர் கல்லூரி), சொலமன் மிதுன் (சென்.பற்றிக்ஸ் கல்லூரி).

# நலன்புரி நிலைய மக்களுக்கு ஆயுள்வேத வைத்திய சேவை

வண்ணை,ஜூன்25

வன்னியில் இருந்து இடம்பெயர்ந்து வந்து நலன்புரி நிலையங்களில் தங்கியுள்ளோருக்கு ஆயுள்வேத மருத்துவ முகாமினை கைதடி, அரச சித்த ஆயுள்வேத போதனா வைத்தியசாலை மேற்கொண்டு வருவதாக மேற்படி வைத்தியசாலைப் பொறுப்பதிகாரி திருமதி. பிரேமா சிவசண்முகராசா தெரிவித்தார்.

வைத்தியசாலை உத்தியோகத்தர், ஆயுள்வேத பொது சுகாதார வைத்திய உத் தியோகத்தர்கள் ஆகியோரின் ஒருங்கிணைந்த சேவையைப் பெற்று மேற்படி சேவைகளை அனைத்து நலன்புரி நிலையங்களுக்கும் விஸ்தரிக்கும் நோக்குடன் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

அதற்கான அனுமதி கிடைத்தவுடன் கோப்பாய், மிருசுவில், நாவலடி, இராமாவில் போன்ற இடங்களில் அமைந்துள்ள நலன்புரி நிலையங்களிலும் வாரத்தில் ஒருநாள் வைத்திய சேவைகள் நடத்தப்படும் என்று அவர் மேலும் கூறினார். (203- 160)

## போதைப்பொருள் எதிர்ப்பு தினம்

சங்கானை, ஜூன்25

வடபிரதேச நல்லொழுக்க சம்மேளனத்தின் ஏற்பாட்டில் சர்வதேச போதைப்பொருள் எதிர்ப்பு தினம் நாளை வெள்ளிக்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு வட்டு இந்துக் கல்லூரி மண்டபத்தில் சம்மேளனத் தலைவர் க.புஸ்பராசா தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.மாவட்ட மேலதிக அரச அதிபர் திருமதி ரூபினி வரதலிங்கம் கலந்துகொள்வார். சிறப்பு விருந்தினர்களாக சங்கானை பிரதேச செயலர் திருமதி தே.பாபு, கரித்தாஸ் - கியூடெக் இயக்குநர் அருட்பணி சி.ஜி. ஜெயக்குமார், மார்புநோய் சிகிச்சை நிபுணர் வைத்திய கலாநிதி எஸ்.யமுனானந்தா ஆகியோர்கலந்துகொள்வர். (201-29)

## கருத்தரங்குத் தொடர்

யாழ்ப்பாணம், ஜூன் 25

யாழ்.பல்கலைக்கழக அரசறிவியல் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் ''வாழ்க்கையில் வெல்வதா? வாழ்க்கையை வெல்வதா?'' என்னும் தலைப்பிலமைந்த கருத்தரங்குத் தொடர் நாளை வெள்ளிக்கிழமை நண்பகல் 12 மணிக்கு அரசறிவியல் விரிவுரை மண்டபம்-308இல் நடைபெறவுள்ளது.

இந்தக் கருத்தரங்குத் தொடரில் யாழ். போதனா வைத்தியசாலை உளவளத் துணையாளர் நா.நவராஜ் கருத்துரை வழங் குவார். (201)



மானிப்பாய் வட்ட லயன்ஸ் கழகத்தின் கலாசார குழுவில் பங்காற்றிவரும் மாணவிகள் ஜி.சீ.ஈ சாதாரண பரீட்சையில் சித்தி அடைந்தமையைப் பாராட்டி மானிப்பாய் வட்ட லயன்ஸ் கழகத் தலைவர் லயன் எஸ்.எல்.ஜெயராஜ் தலைமையில் நடை பெற்ற நிகழ்வில் வடமாகாண உதவிப் பொருளாளர் லயன் எஸ்.எஸ். தங்கராஜா மாணவி ஒருவருக்குப் பரிசில் வழங்கிய போது எடுக்கப்பட்ட படம். (படம்: நேசன்)

# வலிகாமம் வலய ஆங்கில நாடகப்போட்டி உடுவில் மகளிர் நான்கு போட்டிகளிலும் முதலிடம்

வலி.வடக்கு, ஜூன்25

வலிகாமம் கல்வி வலயப் பாடசாலை அணிகளுக்கு இடையே நடைபெற்ற ஆங்கில நாடகப் போட்டியில் உடுவில் மகளிர் கல்லூரி நான்கு போட்டிகளிலும் முதல் இடங்களைப் பெற்றுச் சாதனை புரிந்துள்ளது.

வலிகாமம் கல்வி வலயப் பாடசாலை அணிகளுக்கு இடையே இடம்பெற்ற ஆரம்பப் பிரிவுப் போட்டியில் உடுவில் மகளிர் கல்லூரியின் 'த மிறக்கல் சொப்' (THE MIRACLE SHOP) என்னும் நாடகம் முதலாம் இடத்தைப் பெற்றது. மானிப்பாய் இந்துக் கல்லூரி 2ஆம் இடத்தையும் வட்டுக் கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி 3ஆம் இடத்தையும் பெற்றுள்ளன.

கனிஷ்ட பிரிவுப் போட்டியில் கெய்டி (HEIDY) என்னும் உடுவில் மகளிர் கல்லூரியின் நாடகம் முதல் இடத்தைப் பெற்றது. மானிப்பாய் மகளிர் கல்லூரி 2ஆம் இடத்தையும் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி 3ஆம் இடத்தையும் பெற்றன.

மேற்பிரிவில் 'டயலொக்' போட்டியில் உடுவில் மகளிர் கல்லூரியின் 'த நோபல்' சைல்ட் (THE NOBLE CHILD) என்னும் நாடகம் முதல் இடத்தைப் பெற்றது. சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி 2ஆம் இடத்தையும் பண்டத்தரிப்பு பெண்கள் உயர்தரப் பாடசாலை 3ஆம் இடத்தையும் பெற்றன.

மேற்பிரிவில் பொயிற்றிக் (POETRIC) போட்டியில் உடுவில் மகளிர் கல்லூரியின் 'ஆஸ் யூ லய்க் இற்' (AS YOU LIKE IT) என்னும் நாடகம் முதல் இடத்தைப் பெற்றது. விக்ரோறியாக் கல்லூரி 2ஆம் இடத்தைப் பெற்றது.

போட்டிகள் யாவும் உடுவில் மகளிர் கல்லூரியில் நடைபெற்றன. (203-86)

## படையினர் பயன் படுத்திய வீடுகள் உரிமையாளர்களிடம் கையளிப்பு

சுழிபுரம், ஜூன் 25

மூளாய் கூட்டுறவு வைத்தியசாலைக்கு அருகில் இருந்த இரண்டு வீடுகள் கடற்படை அதிகாரிகளால் வீட்டுச் சொந்தக்காரர்களிடம் கையளிக்கப்பட்டுள்ளன. மூளாய் அரசடிச் சந்தியில் காவலரணில் இருந்த கடற்படையினர் இந்த வீடுகளைத் தங்கள் தேவைக்குப் பயன்படுத்தி வந்தனர். தற்போது காவலரணை விட்டு கடற்படையினர் முற்றாகச் செல்லாது படையினர் தொகையைக் குறைத்துள்ளனர். மூளாய் ஐக்கிய சங்க கூட்டுறவு வைத்தியசாலைக்கு சொந்தமான வெளிநிலத்தை யும் கடற்படையினர் வைத்தியசாலை நிர்வாகத்திடம் ஒப்படைப்பதாகத் தெரிவித்துள்ளனர். (203-28)

## மாணிக்கவாசகர் குருபூசை தினம்

யாழ்ப்பாணம்,ஜூன்25

யாழ். சைவ பரிபாலனசபையின் ஏற்பாட்டில் மாணிக்கவாசக சுவாமிகளின் குருபூசை நாளை மறுதினம் சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு நீராவியடி நாவலர்ஆச்சிரம மண்டபத்தில் நடைபெறும். (201)

* * *

சுழிபுரம், ஜூன்25

தொல்புரம் சிதம்பரம் மானா முதலியார் மடத்தினரின் ஏற்பாட்டில் அராலி லிங்கேஸ்வரர் ஆலயத்தில் மாணிக்கவாசகர் சுவாமிகள் குருபூசை நாளை மறுதினம் சனிக்கிழமை நடைபெறவுள்ளது. புராணபடனம், திருவாசகம் ஓதல், பூசை வழிபாடுகள் நடைபெற்று மகேஸ்வர பூசையும் இடம்பெறும். (201- 28)

# கூட்டுறவாளர் சிதம்பரப்பிள்ளை நேற்று முன்தினம் காலமானார்

யாழ்ப்பாணம்,ஜூன்25



கட்டைவேலி - நெல்லியடி பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் தலைவரும் சிறந்த சமூக சேவையாளருமான தம்பையா சிதம்பரப்பிள்ளை நேற்றுமுன்தினம் காலமானார்.

இறக்கும் போது அவருக்கு வயது 78. இவர் மேற்படி சங்கத்தின் தலைவராக நீண்டகாலம் பணியாற்றியதுடன் கூட்டுறவுப் பெருமன்றம் என்ற அமைப்பையும் செயற்படுத்தியவர்.

'சிறந்த கூட்டுறவாளர்' எனப் பலராலும் புகழப்பட்ட இவர் தனது சங்கத்தில் நூல் நிலையம் ஒன்றை நடத்தியதுடன் 'சங்கம் செய்தி' மாதாந்தப் பத்திரிகை ஒன்றையும் வெளியிட்டு வந்தார்.

சிறிதுகாலம் நோய்வாய்ப்பட்டிருந்த அவர் நேற்று முன்தினம் காலமானார். அன்னாரின் இறுதிக் கிரியைகள் நேற்று நடைபெற்றன. (50- 224)

குடாநாட்டின் பிரதேசச் செய்திகள்

# கைதடி முதியோர் இல்லத்திற்கு பொருள்கள் அன்பளிப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 25

கைதடி முதியோர் இல்லத்திற்கு ஒரு தொகுதி பொருள்களை யாழ். போதனா வைத்தியசாலை அன்பளிப்பாக வழங்கியுள்ளது.

நுளம்பு வலைகள், தலையணைகள், குளிருக்குப் பயன்படுத்தும் போர்வைகள், மெத்தைகள் உட்பட மற்றும் சில பொருள்கள் வழங்கப்பட்டதாக கைதடி அரச முதியோர் இல்ல அத்தியட்சகர் தெரிவித்தார்.

இல்லத்தில் தங்கியிருக்கும் முதியவர்களின் வசதிகருதியே வைத்தியசாலை நிர்வாகம் இப்பொருள்களை வழங்கியுள்ளது. (203-224)


# நலன்புரி நிலைய மக்களுக்கு சவர்க்காரம் விநியோகம்

யாழ்ப்பாணம், ஜூன் 25

கைதடி நலன்புரி நிலையங்களில் தங்கியிருக்கும் மக்களுக்கு 51ஆயிரம் ரூபா பெறுமதியான சவர்க்கார வகைகள் வழங்கப்பட்டுள்ளன.

கைதடி தென்னை பனை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம் மற்றும் சிறுவர் பராமரிப்பு நிலையம் போன்றவற்றில் தங்கியிருக்கும் சுமார் 450இற்கும் மேற்பட்ட குடும்பங்களுக்கு சவர்க்காரங்கள் வழங்கப்பட்டுள்ளன.

கைதடி தெற்கைச் சேர்ந்தவரும் தற்போது ஹொலண்ட் நாட்டில் வசிப்பவருமாகிய இன்பராஜா தவமணி என்பவரே இவற்றை வழங்கியுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (203-224)



வன்னியில் இருந்து இடம்பெயர்ந்து வந்து நலன்புரி நிலையங்களில் தங்கியுள்ள மக்களை சமூக சேவைகள் மற்றும் சமூகநலத்துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா கடந்த திங்கட்கிழமை நேரில் சென்று பார்வையிட்டார். மக்களின் தேவைகளை அவர் கேட்டறிந்தபோது எடுக்கப்பட்ட படம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்



## அமரர் சுப்பிரமணியம் நாகராஜா

(Retired MSO, Jaffna Post Office,

(முனீஸ்வரன் வீதி, முனீஸ்வரன் கபே- முன்னாள் உரிமையாளர்)

நல்லூரைப் பிறப்பிடமாகவும் கந்தர்மடம், பலாலி வீதியை வதிவிடமாகவும் கொழும்பு, வெள்ளவத்தையை தற்காலிக வதிவிடமாகவும் கொண்ட சுப்பிரமணியம் நாகராஜா (21.06.2009) ஞாயிற்றுக்கிழமை கொழும்பில் காலமானார்.

இவர் காலஞ்சென்ற திரு.திருமதி சுப்பிரமணியம்-நாகம்மாவின் சிரேஷ்ட புதல்வனும் காலஞ்சென்ற அருளம்பலம்-சொர்ணம் தம்பதியரின் மருமகனும் மங்கையர்க்கரசியின் அன்புக் கணவரும் கனகமணியின் பெறாமகனும் காலஞ்சென்ற நகுலேஸ்வரி, அன்னலச்சுமி, மகேஸ்வரி ஆகியோரின் அண்ணனும் காலஞ்சென்ற அரசரட்ணம், பத்மநாதன், உலகநாதன் ஆகியோரின் மைத்துனரும் மகேசன் (பிரான்ஸ்), சகுந்தலா (நோர்வே), சுபத்திரா (கனடா), சூரியகுமார் (நோர்வே), வத்சலா (கனடா), வாசுகி (நோர்வே), உதயகுமார் (சுவிஸ்), விஜயகுமார் (சுவிஸ்) ஆகியோரின் பாசமிகு தந்தையும் நர்த்தலி (பிரான்ஸ்), செல்வராசா (நோர்வே), மோகன் (கனடா), கதிர்ச்செல்வன் (கனடா), ஜெரால்ரின் (நோர்வே), ரமேஸ் (நோர்வே), நிருபா (சுவிஸ்), சுகன்னியா (சுவிஸ்) ஆகியோரின் அன்பு மாமனாரும் நிசாந்தி (நோர்வே), லியா (பிரான்ஸ்), விதுசா (கனடா), விதுசன் (கனடா), சுகிர்தன் (கனடா), தாட்சாயினி (கனடா), நிரோஜன் (நோர்வே), பிருந்தா (நோர்வே), திறிஷாந் (நோர்வே), சஞ்ஜே (நோர்வே), அஜே (நோர்வே), தீபிகா (சுவிஸ்), வினுஸ் (சுவிஸ்), அங்கணி (சுவிஸ்) ஆகியோரின் அருமைப் பேரனும் மகேந்திரன், சிறீஸ்கந்தராசா, விக்னேஸ்வரன், செல்வன், சிவஞானசோதி, சசிக்குமார், செந்தமிழ்ச்செல்வி, திருநிறைச்செல்வி, அருந்தவச்செல்வன், பிறேமச்சந்திரன், ஜெயச்செல்வன், செங்கதிர்ச்செல்வி, ரஞ்சன், பாலன், மாலதி, கந்தசாமி, சரஸ்வதி, பிறேமன், உரித்திரன், சிவலிங்கம், கருணா, பிறேமச்சந்திரன், பப்பி, யசோ, பாலன், வாசுகி, விஜித்தா, ரமேஸ், செல்வன், ராஜீவன், தீபன் ஆகியோரின் தாய்மாமனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (25.06.2009) வியாழக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு இல.591, காலி வீதியில் உள்ள மகிந்தமலர்ச்சாலையில் நடைபெற்று பூதவுடல் நல்லடக்கத்துக்காக கல்கிசை பொதுமயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்: மனைவி, பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

தொடர்புகளுக்கு: 0094776540641

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஊவா மாகாண சபைத் தேர்தல் பிரதான கட்சிகள் மனுத்தாக்கல்

பசறை, ஜூன் 25

ஊவா மாகாணசபைத் தேர்தலுக்கு பிரதான கட்சிகள் நேற்று முன்தினம் தமது வேட்பு மனுக்களை பதுளை மாவட்டதேர்தல் அத்தியட்சரும் மாவட்ட அரச அதிபருமான ரோஹன திஸாநாயக்காவிடம் கையளித்தன.

இதன்படி ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அதன் வேட்பு மனுவை அதன் செயலாளர் நாயகம் அமைச்சர் சுசில்பிரேம ஜயந்த தலைமையில் நேற்று முன்தினம் காலை பதுளை செயலகத்தில் கையளித்தது. ஐ.தே. கட்சி சார்பில் அதன் குழுத் தலைவரும் முன்னாள் ஊவா மாகாண எதிர்க்கட்சி தலைவருமான உபாலி சமரவீர மற்றும் முன்னாள் மாகாண சபை உறுப்பினர் கே.வேலாயுதம் ஆகியோர் அதன் வேட்பு மனுக்களை தாக்கல் செய்துள்ளனர்.

பதுளை மாவட்டக் கூட்டமைப்பு பட்டியலில் இ.தொ.கா. சார்பாக மூன்று பேரும், பெருந்தோட்டத் தொழிலாளர் காங்கிரஸ் சார்பாக இரண்டு பேருமாக ஐந்து தமிழ் வேட்பாளர்களும் ஒரு முஸ்லிம் வேட்பாளரும் அடங்குவர்.

ஐ.தே.கட்சியுடன் தொழிலாளர் தேசிய சங்கம், ஜனநாயக மக்கள் முன்னணி, இலங்கை தொழிலாளர் ஐக்கிய முன்னணி ஆகியன இணைந்து யானைச் சின்னத்தில் போட்டியிடுகின்றன. (சி)

## மக்கள் வங்கியின் கொடிகாமக் கிளை அடுத்த மாதம் மீண்டும் திறப்பு

யாழ்ப்பாணம், ஜூன்25

சாவகச்சேரி மக்கள் வங்கியின் கொடிகாமம் நகரக் கிளை அலுவலகம் மீளவும் அடுத்தமாதம் திறக்கப்படவுள்ளது.

சாவகச்சேரி மக்கள் வங்கியின் கொடிகாமம் கிளை அலுவலகம் 2006ஆம் ஆண்டுக்கு முன்னர் மக்களுக்கான சேவையை வழங்கி வந்தது.

பின்னர் இப்பகுதியில் இடம்பெற்ற அசாதாரண சூழ்நிலையால் இந்த அலுவலகம் மூடப்பட்டது.

இதனால் தென்மராட்சி கிழக்குப் பகுதியைச் சேர்ந்த வாடிக்கையாளர்கள், வர்த்தகர்கள், அரச திணைக்களத்தினர் பெரிதும் பாதிக்கப்பட்டனர்.

தற்பொழுது இயல்புநிலை திரும்பியுள்ளதால் மீளவும் மக்கள் வங்கியின் கிளை அலுவலகம் திறக்கப்படவுள்ளது என அதன் உயர் அதிகாரியொருவர் தெரிவித்தார்.

இந்தக் கிளை அலுவலகம் கொடிகாமம் தென்மராட்சி கிழக்கு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் கட்டடத்தில் இயங்கி வந்தமை குறிப்பிடத்தக்கது. (203-131)

# வன்னி மக்கள் துயர்துடைப்புப் பணிக்கு தேசவள விவசாயிகள் சம்மேளனம் உதவி

யாழ்ப்பாணம், ஜூன்25

வன்னி மக்கள் துயர்துடைப்புப் பணிகளுக்கென யாழ்.தேசவள விவசாயிகள் சம்மேளனத்தின் சார்பில் மூன்று லட்சம் ரூபா சம்மேளனத்தின் தலைவர் சி.பொ.ம.க. முதலியாரால் சமூக நலத்துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவிடம் கையளிக்கப்பட்டுள்ளது.

சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சின் ஊடகப்பிரிவு வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் மேற்கண்ட தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்தச் செய்திக் குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

இந்த வன்னி மக்கள் துயர் துடைப்புப் பணிக்கு பொதுமக்கள், பொது அமைப்புக்கள், மத அமைப்புக்கள், வர்த்தகப் பெருமக்கள், அரச திணைக்கள மற்றும் நிறுவனப் பணியாளர்கள், அரச சார்பற்ற அமைப்புக்கள் போன்ற பல்வேறு தரப்பினரிடமிருந்தும் பேருதவிகள் கிடைத்து வருகின்றன.

வன்னி மக்கள் துயர் துடைப்புப் பணிக்கென யாழ்.தேசவள விவசாயிகள் சம்மேளனத்தின் சார்பில் மூன்று லட்சம் ரூபா நிதி, சம்மேளனத்தின் தலைவர் முதலியாரால் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவிடம் நேரில் கையளிக்கப்பட்டது.

இந்நிதி உதவியை அமைச்சர் 'வன்னி மக்கள் துயர்துடைப்புச் செயற்பாட்டுக் குழு'வின் முக்கியஸ்தர்களிடம் கையளித்தார்.

அமைச்சரின் யாழ்.பணிமனையில் இடம்பெற்ற மேற்படி நிதி கையளிப்பு நிகழ்வின் போது சம்மேளனத்தின் செயலாளர் உட்படப் பிரதிநிதிகள் பலர் கலந்து கொண்டனர்.

வன்னியில் இருந்து இடம்பெயர்ந்த நிலையில் வாழ்ந்து வரும் உறவுகளுக்கு உதவவேண்டும் என்ற நிலையில் இவ்வுதவியை வழங்கிய சம்மேளனத்தின் தலைவர் உட்பட அனைத்து உறுப்பினர்களினது எண்ணத்திற்கும் முயற்சிக்கும் இடம்பெயர்ந்த நிலையில் வாழ்ந்து வரும் மக்கள் சார்பாக தனது நின்றிகளை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தமை குறிப்பிடத்தக்கது- என்றுள்ளது. (203)

# இந்துப் பூசகர்களுக்கு பயிற்சிகள்; தமிழகத்தில் இருந்து விரிவுரையாளர்கள்

கொழும்பு,ஜூன் 25

இந்துப் பூசகர்களுக்குப் பயிற்சிகள் வழங்குவதற்கென தமிழக விரிவுரையாளர்கள் இலங்கைக்கு வருகை தரவுள்ளனர்.

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம் அடுத்த மாதம் பிற்பகுதியில் இந்துப் பூசகர்களுக்குப் பயிற்சிநெறி ஒன்றை நடத்தவுள்ளது.

தமிழ்நாடு விஷ்வ ஹிந்து பரிசத்தின் கிராம ஆலய பூசகர்களின் பேரவையைச் சேர்ந்த ஏ.கே.சௌந்தரராஜன், ஆலய வழிபாட்டு முறைப் பயிற்சிகளின் பிரதான ஆச்சாரியார் எஸ்.சுவாமிநாதசர்மா, தேவார திருவாசக இசைப்பாடகர் ஏ.ஜீவநாதன், எஸ்.சிவராசன் ஆகிய நால்வரும் இப்பயிற்சிநெறியில் கலந்து கொண்டு பயிற்சிகளை வழங்கவுள்ளனர்.

இப்பயிற்சிநெறி தொடர்பாக ஆலய அறங்காவலர்கள், பூசகர்களுக்கு அறிவிப்புகள் வழங்கப்பட்டுள்ளதாகவும் இதுவரை விண்ணப்பங்களை அனுப்பி வைக்காதவர்களை அனுப்பி வைக்குமாறும் இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களப் பணிப்பாளர் சாந்தி திருநாவுக்கரசன் தெரிவித்துள்ளார். (203)

## வாராந்த சொற்பொழிவு

வடமராட்சி வல்லிபுர ஆழ்வார் ஆலயத்தின் வடக்கு வீதியில் அமைந்துள்ள பெரியாழ்வார் ஆச்சிரமத்தில் பிரதி ஞாயிற்றுக்கிழமை தோறும் நடைபெற்றுவரும் வாராந்த நிகழ்வில் எதிர்வரும் 28ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை ''பெரியபுராணம்'' என்னும் தலைப்பில் சொற்பொழிவு இடம்பெறவுள்ளது.

இந்தச் சொற்பொழிவினை பருத்தித்துறை மெ.மி.த.க. பாடசாலையின் ஆசிரியர் ம.பங்கயன் அவர்கள் நிகழ்த்தவுள்ளார். (203-78)

# சகல மாவட்டங்களிலும் டெங்கு நோயைக் கட்டுப்படுத்த உரிய அதிகாரிகள் திட்டங்களை முன் வைக்க வேண்டும்

## உள்ளூராட்சி அமைச்சின் செயலாளர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 25

டெங்கு நோயை சகல மாவட்டங்களிலும் உடன் கட்டுப்பாட்டிற்கு கொண்டுவர உள்ளூராட்சி சபைகளும் சுகாதார வைத்திய அதிகாரி பணிமனைகளும் இணைந்து திட்டங்களை முன் வைத்து செயற்படுத்த வேண்டும் என்று மாகாண சபைகள் உள்ளூராட்சி அமைச்சு செயலாளர் எச்.பி. கெஷியன் ஹேரத் கேட்டுள்ளார்.

நாடளாவிய ரீதியில் டெங்கு நோயை ஒழிப்பதற்கான துரித வேலைத்திட்டம் ஒன்றை அமுல்படுத்தல் என்ற தலைப்பில் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் இவ்வாறு கேட்கப்பட்டுள்ளது.

நாட்டின் சகல மாகாணங்களிலும் தற்போது ஏற்பட்டுள்ள டெங்கு நோய் பரவும் அச்சுறுத்தலை ஒழிக்கும் பொருட்டு அனைத்து மாகாண சபைகளும்- உள்ளூராட்சி மன்றங்களும் துரித வேலைத்திட்டமொன்றை உடன் அமுல்படுத்த வேண்டும்.

இதற்குச் சகல நிறுவனங்களின் தலையீட்டுடன் பாதுகாப்புப் பிரிவினர், சுகாதாரத் துறை அதிகாரிகள், பொதுமக்களுடன் இணைந்து டெங்கு ஒழிப்பு செயற்றிட்டத்தை நடைமுறைப்படுத்த வேண்டும்.

எடுக்கப்பட்ட நடவடிக்கை தொடர்பில் அதற்கான ஆதாரங்களை உள்ளூராட்சி அமைச்சின் செயலாளருக்கு அனுப்பி வைக்க வேண்டும் எனவும் கோரிக்கை விடப்பட்டுள்ளது. (203)

# தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடத்திய பரீட்சையில் தெரிவானோர் விவரம்

யாழ்ப்பாணம், ஜூன்25

தொண்டைமானாறு வெளிக்கள நிலையத்தால் உயிரியல், கணிதம், வர்த்தகப் பிரிவு மாணவர்களுக்கு நடத்தப்பட்ட பரீட்சையில் ஒவ்வொரு பிரிவிலும் இருந்து புள்ளி அடிப்படையில் 25பேர் வீதம் தெரிவு செய்யப்பட்டனர்.

அவர்களின் பெயர் விவரம் வருமாறு:

### க.பொ.த. உயர்தரம்-13
### 2009 கணிதப் பிரிவு

ஏ.ஜோன்நிராஜ் (ஹாட்லிக் கல்லூரி), எஸ்.பிரசாந் (ஹாட்லிக் கல்லூரி), எல். எழில்வேல் (யாழ்.இந்துக் கல்லூரி), சி. சஞ்சே (உடுப்பிட்டி மகளிர் கல்லூரி), எஸ்.தமயந்தி (கொக்குவில் இந்துக் கல்லூரி), ரி.ஜெயந்தன் (ஹாட்லிக் கல்லூரி).

ஆர்.முரளீதரன் (மகாஜனக் கல்லூரி), எஸ்.கோகுல் (ஹாட்லிக் கல்லூரி), எஸ். தனஞ்செயன் (ஹாட்லிக் கல்லூரி), எஸ். ரகுலகீதன் (ஹாட்லிக் கல்லூரி), ஜி.தர்ஷன் (ஹாட்லிக் கல்லூரி), என்.சுபேசன் (கொக்குவில் இந்துக் கல்லூரி), எல்.நரேஸ்குமார் (கொக்குவில் இந்துக் கல்லூரி), ஜே.லடோஸ்லொஸ் (சென்.பற்றிக்ஸ் கல்லூரி).

ஆர். செந்தூரன் (ஹாட்லிக் கல்லூரி), பி.பிருந்தன் (யாழ்.இந்துக் கல்லூரி), எஸ்.சிவரூபன் (வட்டு. இந்துக்கல்லூரி), ஆர்.தனுசன் (மகாஜனக் கல்லூரி),ஏ. கஜந்தன் (சென்.ஜோன்ஸ் கல்லூரி), ஜே.பிரகதீஸ் (ஹாட்லிக் கல்லூரி), எஸ். கயூகரன் (ஹாட்லிக் கல்லூரி), வி.அன்ரனி சகாயராசா (ஹாட்லிக் கல்லூரி), யூ.தனுஷா (வேம்படி மகளிர் கல்லூரி),எம்.அன்ரனி கிளைன் (சென்.பற்றிக்ஸ் கல்லூரி), எஸ்.தவநீஸ் (இடைக்காடு ம.வி).

### க.பொ.த. உயர்தரம்-13
### 2009 உயிரியல் பிரிவு

எஸ்.ரகுவரன் (நெல்லியடி ம.ம.வி.), ஏ.எஸ்.பிரசாந் (விக்ரோரியாக் கல்லூரி), பி.பிரகாஸ் (சென்.பற்றிக்ஸ் கல்லூரி), எஸ்.யதுகுலன் (இந்துக் கல்லூரி), கே. நிரோஜி (உடுப்பிட்டி மகளிர் கல்லூரி), ஜே.ஜோன்சல்ரன் (சென்.பற்றிக்ஸ் கல்லூரி), எஸ்.சங்கர் (ஹாட்லிக் கல்லூரி).

கே.லாவண்ஜா (யாழ்ப்பாணக் கல்லூரி), பி.ஞானசேகர் (யாழ்.இந்துக் கல்லூரி), எஸ்.சூரியதாட்சாயினி (கரவெட்டி விக்னேஸ்வராக் கல்லூரி), பி.கார்த்தீபன் (சென்.ஜோன்ஸ் கல்லூரி), பி.சுவர்ணா (வேம்படி மகளிர் கல்லூரி), ஜே.ஜெனனி (வேம்படி மகளிர் கல்லூரி), வி.சுயந்தன் (சென். ஜோன்ஸ் கல்லூரி), வி.சித்திராங்கன் (சென். ஜோன்ஸ் கல்லூரி), வி.சிந்துஜன் (சென். ஜோன்ஸ் கல்லூரி).

பி.கஜநாத் (யாழ்.இந்துக் கல்லூரி), கே.வினார்த்தன் (விக்ரோரியாக் கல்லூரி), கே.கரினா (வேம்படி மகளிர் கல்லூரி), ஜே. பி.மேர்சி சில்விஜா (யாழ்ப்பாணக் கல்லூரி), ஜி.மெனிசா (வேம்படி மகளிர் கல்லூரி), ரி.சயந்தன் (யாழ்.இந்துக் கல்லூரி), வி.அன்ரனிசெரான் (சென்.பற்றிக்ஸ் கல்லூரி), ஆர்.விஸ்ணுபிரியா சுண்டுக்குளி மகளிர் கல்லூரி), எஸ்.அபிராமி (மெதடிஸ்த மகளிர் கல்லூரி).

### க.பொ.த. உயர்தரம்
### 2010 கணிதப் பிரிவு

ரி.பிரணவன் (ஹாட்லிக் கல்லூரி), ஏ. ஹரிகாலன் (ஹாட்லிக் கல்லூரி), எஸ்.சுமங்கலி (வேம்படி மகளிர் கல்லூரி), பி.விஷ்ணுசாந் (கொக்குவில் இந்துக் கல்லூரி), ஏ. சஜீவன் (உடுப்பிட்டி அ.மி. கல்லூரி), என். நிலுசியா (மெதடிஸ்த மகளிர் கல்லூரி), எஸ்.சிவராம் (ஹாட்லிக் கல்லூரி), எஸ்.ரஜீபவன் (ஹாட்லிக் கல்லூரி), கே.மயூரேசன் (உடுப்பிட்டி அ.மி.கல்லூரி).

கே.டர்சன் (யாழ்பாணக் கல்லூரி), எஸ். கௌசல்ஜன் (சென்.ஜோன்ஸ் கல்லூரி), கே.ஸ்ரீகுமார் (ஹாட்லிக் கல்லூரி), ஏ.அனற்நிசாந்தா (வேம்படி மகளிர் கல்லூரி), கே. உபமன்யு (சென்.ஜோன்ஸ் கல்லூரி), எஸ். ஜெயராம் (ஹாட்லிக் கல்லூரி), ஆர்.செல்வபவிதா (கரவெட்டி விக்னேஸ்வராக் கல்லூரி), வி.நிரூபன் (உடுப்பிட்டி அ.மி.கல்லூரி).

எஸ்.வசந் (கொக்குவில் இந்துக் கல்லூரி), எஸ்.அபாணா (உடுப்பிட்டி அ.மி.கல்லூரி), ரி.ஆரன்ஜா (நெல்லியடி ம.வி.), எஸ்.கௌதமன் (சென்.ஜோன்ஸ் கல்லூரி), பி.கீர்த்தனன் (மானிப்பாய் இந்துக் கல்லூரி), கே.பிந்துஜா (கொக்குவில் இந்துக் கல்லூரி), எஸ்.அருளினி நெல்லியடி ம.வி.), என்.பவீந்திரன் (கரவெட்டி விக்னேஸ்வராக் கல்லூரி).

### க.பொ.த உயர்தரம்
### (2010 உயிரியல் பிரிவு)

பி.கோகுலன் (ஹாட்லிக் கல்லூரி), ஏ. நிதர்சன் (கரவெட்டி விக்னேஸ்வராக் கல்லூரி), எஸ்.விதுரன் (ஹாட்லிக் கல்லூரி), எஸ்.கஜனன் (கொக்குவில் இந்துக் கல்லூரி), வி.அரவிந்தன் (நெல்லியடி ம.வி.), பி.துஷ்யந்தன் சென்.ஜோன்ஸ் கல்லூரி), எஸ்.சஜிதா (இந்து மகளிர் கல்லூரி), வி. நிசாந்திகா (வேம்படி மகளிர் கல்லூரி), எம்.கோபிகா (உடுப்பிட்டி அ.மி. கல்லூரி).

ஏ.பகீரதி (வேம்படி மகளிர் கல்லூரி), ஆர்.ஹம்சத்வனி (வேம்படி மகளிர் கல்லூரி), எம்.பார்த்தீபன் (ஹாட்லிக் கல்லூரி), எல். ஸ்ரீநிகேதன் (கொக்குவில் இந்துக் கல்லூரி), ரி.சுதாசினி (யாழ்.இந்துக் கல்லூரி), எஸ். றுக்சிகா (வேம்படி மகளிர் கல்லூரி), கே.சிவசுதன் (ஹாட்லிக் கல்லூரி), எஸ். கேனகா (யாழ்.இந்துமகளிர் கல்லூரி), ஜி. அனுசியா (உடுப்பிட்டி அ.மி. கல்லூரி).

ரி.ஜயந்தன் (உடுப்பிட்டி அ.மி. கல்லூரி), ஆர்.துவாரகா (வேம்படி மகளிர் கல்லூரி), எஸ்.யசோதரா (வேம்படி மகளிர் கல்லூரி), ரி.கிருஷ்ணப்பிரியா (யாழ்.இந்து மகளிர் கல்லூரி), ஏ.கோகுலரூபன் (கொக்குவில் இந்துக் கல்லூரி), யூ.நிவேதிகா (வேம்படி மகளிர் கல்லூரி), ரி.கௌசிகா (வேம்படி மகளிர் கல்லூரி).

### க.பொ.த. உயர்தரம்-13
### (2009 வர்த்தகப் பிரிவு)

ஆர். நிதர்சன் (சென்.ஜோன்ஸ் கல்லூரி), கே. சக்திநாயகி (சுண்டிக்குளி மகளிர் கல்லூரி), ரீ. சோபிதா (உடுப்பிட்டி மகளிர் கல்லூரி), கே. குபேந்திரன் (உடுப்பிட்டி அ.மி. கல்லூரி), எஸ். சிந்துஜா ( வேம்படி மகளிர் கல்லூரி), எஸ்.சிவகாமி (உடுப்பிட்டி மகளிர் கல்லூரி), எஸ்.சுபினா (கனகரத்தினம் ம.வி), என. லக்சனா (யூனியன் கல்லூரி).

ஏ.அன்ரனி ஜோன்ஸன் (ஹாட்லிக் கல்லூரி), ஆர்.வருணன் (ஹாட்லிக் கல்லூரி), கே. நகோபி ( வட்டு. இந்துக் கல்லூரி), எஸ். பிரகணன் (யாழ். இந்துக் கல்லூரி), ரி. கீதாஞ்சன் (சென்.ஜோன்ஸ் கல்லூரி), எஸ். தேவகி(சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி), எஸ்.கவிதா (பண்ணாகம் மெய்கண்டான் ம.வி.), வி. அர்ச்சனா (உடுப்பிட்டி மகளிர் கல்லூரி), வி. பிரியங்கா (வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரி), ஜே.ஜெஸ்லி (சென். பற்றிக்ஸ் கல்லூரி), என். கீர்த்திகா (யூனியன் கல்லூரி), எஸ். சோபிகா (யாழ்.இந் து மகளிர் கல்லூரி), ஜே. லேகா (யாழ். இந்து மகளிர் கல்லூரி), அய். ரி.எமிர்சன் (சென்.பற்றிக்ஸ் கல்லூரி), ஜீ. அனுசியா (சுண்டுக்குளி மகளிர் கல்லூரி), எஸ்.துவாரகா (வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரி), எஸ். ஜெயபிரபாகரன் (மகாஜனக் கல்லூரி).

### க.பொ.த. உயர்தரம்
### (2010 வர்த்தகப் பிரிவு)

ஏ. தர்சினி (அருணோதயாக் கல்லூரி), பி. ராஜராம் (ஹாட்லிக் கல்லூரி), ஆர். ஜீவகி (வட. இந்து மகளிர் கல்லூரி), வை. சரணியா (வட இந்து மகளிர் கல்லூரி), என். வினோஜா (வட.இந்து மகளிர் கல்லூரி), கே. சுயாதா (கொக்குவில் இந்துக் கல்லூரி), ஆர். தர்சினி (இளவாலை கன்னியர் மடம் ம.வி.), வி. தர்சிகன் (ஹாட்லிக் கல்லூரி), ஏ. அகல்யா ( வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரி), எஸ். கிரிதரன் (யா/ கொக்குவில் இந்துக் கல்லூரி).

எம். பிரியங்கா (உடுப்பிட்டி மகளிர் கல்லூரி), வி. விஜிதா (வட. இந்து மகளிர் கல்லூரி), ஜே.ஜே.கொலின்டன் (சென். ஜோன்ஸ் கல்லூரி), என். கிரிசாந்தி (வட்டு. இந்துக் கல்லூரி),ஏ. கோகுலன் (நெல்லியடி ம.வி.), பீ.கஸ்தூரி (உடுப்பிட்டி அ.மி. கல்லூரி), என். டிலக்ஸி(கொக்குவில் இந்துக் கல்லூரி), ரி.மோகலன் (யாழ்ப்பாணக் கல்லூரி), ஆர். பவித்திரா (யாழ். இந்து மகளிர் கல்லூரி), ஏ. நர்மதா (உடுப்பிட்டி மகளிர் கல்லூரி), வி. பிரியங்கா (கரவெட்டி விக்னேஸ்வராக் கல்லூரி), ஆர். ஜீவகி (யாழ். இந்து மகளிர் கல்லூரி), ரி.தனசாந்தி (உடுப்பிட்டி மகளிர் கல்லூரி), ரி. திலாஜிகி (உடுப்பிட்டி மகளிர் கல்லூரி).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## தரம் - 05 புலமைப் பரிசில் மாணவர்களுக்கான தயார்ப்படுத்தல் பார்ட்சைத்தொடர் - 2009

**வினாத்தாள் - II** நேரம்: 1 மணி 15 நிமிடங்கள்

01. பின்வரும் உரைப்பகுதியை நன்கு வாசித்து வினாக்களுக்கு விடையளிக்குக.

"சின்னஞ்சிறு தோட்டத்தில்" காணப்படும் செடியில் அரும்பாக இருந்து மொட்டாக வந்து நேற்றுக்காலை கதிரவனின் வரவுகண்டு கமகம எனும் நறுமணத்துடன் எனது கமலமுகம் மலர்ந்தது. எனது சுகந்தம்,கவர்ச்சி, அழகு எல்லாம் எல்லோருடைய மனதையும் கவர்ந்தது. தேனீக்கள் என்னிடம் தேனைப் பெறுவதற்காக சுற்றிச்சுற்றி வந்து ரீங்காரம் செய்தன. உச்சிப் பொழுதானதும் அந்தக் கதிரவனின் பொற்கதிர்கள் என் முகத்தை வாட்டி வதைக்கத் தொடங்கிவிட்டன. இவ்வளவு குறுகிய நேரத்தில் என்னழகு அவலட்சணம் அடையுமென நான் எதிர்பார்க்கவில்லை. நேற்று மாலை தாய்ச்செடியில் இருந்து உதிர்ந்து விட்டேன்.

01) மேலுள்ள பந்தியில் கூறப்படும் சுயசரிதை எதைப்பற்றியது? ..............................
02) இன்று ஞாயிற்றுக்கிழமை எனின், பூ மலர்ந்த கிழமை யாது? ..............................
03) பந்தியில் உள்ள இணைமொழியை எழுதுக. ..............................
04) பந்தியில் உள்ள அடுக்குமொழியை எழுதுக. ..............................
05) பந்தியில் உள்ள இரட்டைக் கிளவியை எழுதுக. ..............................
06) பந்தியில் உள்ள அடுக்கிடுக்கு மொழியை எழுதுக. ..............................
07) முகம என்பதன் ஒத்த கருத்துச் சொல் ..............................
08) அவலட்சணம என்பதன் எதிர்க்கருத்துச் சொல் ..............................
09) பந்தியிலுள்ள காலப்பெயர்ச் சொல் ..............................
10) பந்தியிலுள்ள அடைமொழிச் சொல் ..............................
11) பந்தியிலுள்ள பலர்பாற் பெயர்ச்சொல் ..............................
12) மலர்ந்தது என்பதை எதிர்காலத்தில் எழுதுக. ..............................

02. பின்வரும் எல்லாச் சொற்களையும் பயன்படுத்தி கருத்துள்ள வாக்கியம் எழுதுங்கள்.
1) ஆறிய வைத்து பின் கொதிக்க குடிப்பது சிறப்பானது நன்கு நீரை
..............................................................................................
2) நகங்களை வைத்துக்கொள்ள சுத்தமாக எமது வேண்டும் வெட்டிச்
..............................................................................................

03. எழுத்துப்பிழையற்ற சொல்லைத் தெரிந்து அதன் கீழ்க் கோடிடுக.
1) தொளைக்காச்சி 2. தொலைக்காட்சி 3. தொலைக்காட்ச்சி 4. தொளைக்காட்சி
2) இலைப்பாறினான் 2. இழைப்பாரினான் 3. இளைப்பாரினான் 4. இளைப்பாறினான்

04. கீழே கொடுக்கப்பட்ட தொடர்கள் ஒவ்வொன்றையும் குறிக்கும் ஒவ்வொரு தனிச்சொல்லை வெற்றிடங்களில் எழுதுக.
1) விபத்துக்களில் சிக்கியவர்களுக்கு உடனடியாக அளிக்கப்படும் சிகிச்சை
..............................
2) தாய், தந்தை, ஆசான், அண்ணன், அரசன் என்போர்
..............................

05. வெற்றிடத்தில் வரவேண்டிய விடையை எழுதுக.
1) நாய் குரைக்கும அது போல வண்டு..............................
2) கோழியின் ஆண் சேவல் அது போல குரங்கின் ஆண்..............................

06. மரபுத் தொடரின் கருத்தை எழுதுக.
1) வாய் காட்டுதல்- ..............................................................................................
2) அள்ளிக்குவித்தல் -..............................................................................................


07. பின்வரும் ஆங்கிலச் சொற்களின் தமிழ்க்கருத்தை எழுதுக.
1) Clap your hands - ..................................................
2) Shall we stop now?- ..................................................
3) Months - ..................................................

08. பின்வரும் தமிழ்ச் சொற்களுக்குரிய ஆங்கிலச் சொல்லை எழுதுக.
1) நூலகம் - ..................................................
2) துவிச்சக்கரவண்டி - ..................................................
3) மஞ்சள் - ..................................................


09. பின்வரும் தமிழ்ச் சொற்களின் சிங்களக் கருத்தின் கீழ்க்கீறிடுக.
1) நானும் நல்ல சுகம்
1) அ(ப்)பி ஹொ(ந்)தின் இன்னவா. 2) சப சனீப்ப கொஹொமத.
3) மமத் ஹொ(ந்)தின் இன்னவா.

2) எனக்குப் பால் தாருங்கள்
1) ம(ட்)ட தே (dh)தென்ன. 2) ம(ட்)ட கிரி (dh)தென்ன.
3) ம(ட்)ட பழ(dh)துறு (dh)தென்ன.

10. கீழுள்ள இலைகள் எத்தாவரங்களுடையது என்பதை தரப்பட்டுள்ள விடைகளிலிருந்து தெரிந்து அதன் இலக்கத்தை எழுதுக.
1 - நெல்லி 2 - தூதுவளை 3 - பாகல் 4 - அரசு 5 - ரோஜா 6 - வேம்பு
1) 2) 3) 4)




11. சரியான விடையின் கீழ்க் கோடிடுக.
1) தகடுகளை வெட்டப் பயன்படும் உபகரணம் எது?
1) 2) 3) 4)




2) SLS எதனுடன் சம்பந்தப்பட்டது?
1) பொருளின் நிறை 2) பொருளின் விலை 3) பொருளின் தரம் 4) பொருளின் அளவு

3) காற்று வீசும் திசையை அறியப் பயன்படும் உபகரணம் எது?
1) 2) 3) 4)



4) நீரினால் பரவும் வித்து பின்வருவனவற்றில் எது?
1) 2) 3). 4)



5) படத்தில் மீனவன் பாவிக்கும் உபகரணத்தின் பெயர் யாது?
1) வீச்சுவலை 2) கரைவலை 3) தூண்டில் 4) கெவுள் வலை



6)




தரப்பட்ட உருவத்தினால் உணர்த்தப்படும் கருத்து யாது?
1) சமாதானம் 2) பக்கச் சார்பற்ற நீதி
3) வியாபாரத்தில் நட்டம் 4) பெண்களுக்கு நீதி

7) தான் உண்ணும் உணவின் மீது சமிபாட்டுச்சாற்றைச் சுரந்து உணவைக் கரைத்தபின்னர், அதனை உறிஞ்சிக் குடிக்கும் பிராணி எது?
1) சிலந்தி 2) அணில் 3) ஆந்தை 4) தவளை


8) தேசப்படத்தில் ┼┼┼┼┼┼┼┼┼┼ என்ற குறியீடு பாதை ஒன்றைக் காட்ட பயன்படுத்தப்பட்டுள்ளது. அப்பாதை எது?
1) பெருந்தெரு 2) புகையிரதப்பாதை 3) வண்டிப்பாதை 4) நடைபாதை

12. பின்வரும் வீதிக் குறியீடுகளின் பெயர்களை புள்ளிக்கோட்டில் எழுதுக.
1) 2)




.............................. ..............................

13. குறிப்பிட்ட ஆரம்பப் பாடசாலை ஒன்றில் தரம்-1முதல் தரம்-5 வரை உள்ள வகுப்புக்களில் கற்கும் மாணவர்களின் எண்ணிக்கையையும் ஒரு திங்கடகிழமை பாடசாலைக்கு வருகைதந்த மாணவர்களின் எண்ணிக்கையையும் வரைபு காட்டுகிறது.




1) குறிப்பிட்ட பாடசாலையில் கற்கும் மாணவர்களின் மொத்த எண்ணிக்கை யாது? ..............................
2) சமதொகையான மாணவர்கள் கற்கும் வகுப்புக்கள் இரண்டும் எவை?
.............................. , ..............................
3) வகுப்பில் உள்ள எல்லா மாணவர்களும் வருகைதந்திருந்த தரம எது? ..............................
4) பாடசாலை இல்ல விளையாட்டுப் போட்டிக்கென தரம்-4 இல் உள்ள மாணவர்கள் ஒவ்வொருவரிடமிருந்தும் ரூபா 15 வீதமும், தரம்-5 மாணவர்கள் ஒவ்வொருவரிடமிருந்தும் ரூபா 20 வீதமும் பணம் அறவிடப்பட்டன. எனின், இரு வகுப்புக்களிலும் இருந்து அறவிடப்பட்ட மொத்தப்பணம் எவ்வளவு? ..............................
5) தரம்-1, தரம்-2, தரம்-3 ஆகிய மூன்று வகுப்புக்களிலும் உள்ள மாணவர்கள் ஒவ்வொருவரிடமும் இருந்து சமதொகையான பணம் அறவிடப்பட்டது. இம்மூன்று வகுப்புக்களிலும் இருந்து கிடைக்கப்பெற்ற மொத்தப் பணம் ரூபா 1200 எனின், ஒரு பிள்ளையிடமிருந்து அறவிடப்பட்ட பணம் எவ்வளவு? ...............ரூபா........சதம்

14. சரியான விடையைப் புள்ளிக்கோட்டில் எழுதுக.
1) ஒரு கட்டடத்தின் திட்டப்படம் பின்வரும் உருவில் காணப்படுகின்றது.





இங்கு காட்டப்பட்டுள்ள அளவிடைக்கு ஏற்ப அறை B யின் நீளம் யாது? ..............................

2) சில நகரங்களுக்கு இடையில் உள்ள தூரங்கள் கிலோமீற்றரில் காட்டப்பட்டுள்ளன.
புத்தளத்திலிருந்து மட்டக்களப்பு, அம்பாந்தோட்டை ஊடாக யாழ்ப்பாணத்திற்குள்ள தூரம் எவ்வளவு?
..............................

| | | | |
|---|---|---|---|
| | | | யாழ்ப்பாணம் |
| | | அம்பாந்தோட்டை | 542 |
| | மட்டக்களப்பு | 259 | |
| புத்தளம் | 269 | | |

3) 1l 200ml நீரை வெளியேற்றுவதற்கு 150 ml கொள்ளும் கோப்பையினால் எத்தனை தடவைகள் நீர் எடுத்து வெளி யேற்ற வேண்டும்? ..............................

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




4) இவ்வுருவின் சுற்றளவைக் காணுங்கள்

.............................

5) பிரதிசெய்து மிகப்பெரிய பின்னத்தைச்சுற்றி வட்டமிடுக. $\frac{5}{6}$ , $\frac{2}{3}$

6) இனிப்புப்பானப் போத்தலொன்றில் 1*l* 500*ml* அளவு அடங்கியுள்ளது. 5 மாணவர்களிடையே சமனாகப் பகிரப்பட்டதெனின், ஒருவருக்குக் கிடைத்த அளவு எவ்வளவு?

.............................

7) விலைப்பட்டியலுக்கேற்ப பின்வரும் பொருள்களை விலைக்கு வாங்குவதற்கான செலவைக் காணுங்கள்.

1kg சீனி, 500g பருப்பு, 100g தேயிலை ஆகியவற்றை விலைக்கு வாங்குவதற்குத் தேவையான பணத்தைக் காணுங்கள்.


.............................

| விலைப்பட்டியல் | | | |
|---|---|---|---|
| பருப்பு | 1kg | ரூ. | 68.00 |
| சீனி | 1kg | ரூ. | 33.00 |
| தேயிலை | 500g | ரூ. | 100.00 |

8) கூட்டுங்கள். $\frac{2}{3} + \frac{1}{4} =$ .............................

9) இரு புள்ளிகளுக்கு இடைப்பட்ட தூரம் 1cm ஆகும். தரப்பட்டுள்ள உருவின் பரப்பளவு யாது?

.............................



10) 428 பயிற்சிப் புத்தகங்கள் நான்கு வகுப்புக்களுக்குச் சமனாகப் பங்கிடப்பட்டன. ஒரு வகுப்புக்கு எத்தனை புத்தகங்கள் கிடைத்தன? .............................

15. பின்வரும் பாடல்கள் எதைப்பற்றிக் கூறுகின்றன என எழுதுக.

1) வானமீ தெழுவேன் - அங்கே வட்டம் சுற்றிடுவேன்
கான மலையெல்லாம் - யானோர் கணத்தில் தாண்டிடுவேன்

.............................

2) மலை மேலே ஏறி நீ வருவாய் என்றே எண்ணினோம்
மல்லிகைப் பூக்கொண்டு நீ தருவாய் என்றும் பாடினோம்

.............................

16. நான் சனக்கூட்டம் நிறைந்த புத்தாண்டு விளையாட்டு நிகழ்வொன்றிற்குச் சென்றேன். அங்கு பெற்றோரைத் தவறவிட்ட குழந்தையொன்றைக் கண்டேன்.......

என்னும் சம்பவத்தைத் தொடர்ந்து ஆக்கபூர்வமான ஆறு வாக்கியங்கள் எழுதுக. (ஒவ்வொரு வாக்கியமும் நான்கு சொற்களுக்குக் குறையாமல் இருத்தல் வேண்டும். எழுவாய், பயனிலை தொடர்பு திருத்தமானதாக இருத்தல் வேண்டும்.)

1. .............................

2) .............................

3) .............................

4) .............................

5) .............................

6) .............................

இவ்வினாத்தாளின் விடைக்குறிப்புக்களும் வினாத்தாள் 16 இன் பகுதி 1 உம் அடுத்தவாரம் வெளிவரும்......

| தயார்படுத்தல் பரீட்சை -15, பகுதி-1 இன் விடைக்குறிப்புகள் | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 01-2 | 02-1 | 03-6 | 04-5 | 05-கமலன் | | 06-மஞ்சள் | | 07-அப்பா |
| 08-1 | 09-2 | 10-23 | 11-2 | 12-3 | 13-3 | 14-d | 15-c | 16-c |
| 17-a | 18-c | 19-48 | 20-21 | 21-1/2 | 22-3/8 | 23-C | 24-2 | 25-3 |
| 26-4 | 27-3 | 28-4 | 29-2 | 30-2 | 31-1 | 32-1 | 33-2 | 34-3 |
| 35-3 | 36-3 | 37-2 | 38-2 | 39-4 | 40-3 | | | |

**எதிர்வரும் வியாழக்கிழமை கண்டி மாவட்ட பிரபல ஆசிரியர் திரு.சண்.சுதர்சன் அவர்கள் தொகுத்துவழங்கும் வினாத்தாள்-16 இன் பகுதி 1 வெளிவரும் என்பதை மாணவர்களுக்கு கல்விச் சுடர் அறியத்தருகின்றது.**

**ஆக்கம்:-ஆசிரியர் திரு.வே.அன்பழகன்.**
**யாழ்ப்பாணம்.**

**கல்விச்சுடர் தொடர்பான**
**விமர்சனங்களுக்கும் கருத்துக்களுக்கும் பின்வரும் தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்பு கொள்க.**
**021-2229944 / 071-6850005 / 071-4273035.**



கைதடி விக்னேஸ்வரா வித்தியாலயத்தில் 'நிக்கொட்' நிறுவனத்தினரால் நிர்மாணிக்கப்பட்ட இரு மாடிக் கட்டடம் அண்மையில் திறந்து வைக்கப்பட்டது.

யாழ்.அரச அதிபர் க.கணேஷ் கட்டடத்தினை நாடாவெட்டித் திறந்து வைப்பதையும் அருகில் தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் கு.பிறேமகாந்தன், ஈ.பி.டி.பி.யின் மானிப்பாய் பிரதேச அமைப்பாளர் நிர்மல், வித்தியாலய அதிபர் ச.ஞானலிங்கம், உப அதிபர் திருமதி பி.ஜெயரத்தினராசா ஆகியோர் நிற்பதையும் படத்தில் காணலாம். (50-207)




சித்தங்கேணி சுப்றா கல்வி நிறுவனத்தின் வருடாந்த பரிசளிப்பு விழாவில் எடுக்கப்பட்ட படம்.

இவ்விழாவில் கலந்துகொண்ட ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமா[illegible] அன்ரனி எஸ்.சிறிராஜ், ந.விஜயசுந்தரம், ச.கைலாசநாதன், [illegible] சந்திரமூர்த்தி, திருக்குமார் ஆகியோர் மேடையில் இருப்பதைப் படத்தில் காணலாம். (28)





காரை. மத்தி மேம்பாட்டுக் கழகம் கடந்த ஆண்டு தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த காரைநகர் பாடசாலை மாணவர்களைக் கௌரவிக்கும் நிகழ்வை அண்மையில் காரைநகர் சுப்பிரமணிய வித்தியாசாலையில் நடத்தியபோது எடுக்கப்பட்ட படங்கள்.

கலாநிதி ஆ.தியாகராசா ம.ம.வித்தியாலய அதிபர் ஆ.குமரேசமூர்த்தி உரையாற்றுவதை முதலாவது படத்திலும் தீவக வலயக் கல்விப் பணிப்பாளர் வ.இராதாகிருஷ்ணன் புலமைப் [illegible] சித்தியடைந்த மாணவி ஒருவருக்குப் பரிசில் வழங்குவதை இரண்[illegible]த்திலும் காணலாம். ஏனைய விருந்தினர்களும் மேடையில் காணப்படுகின்றனர். (250)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**தேவை**

போட்டோ கொப்பி, கணனி இயக்கத் தெரிந்த பெண்பிள்ளைகள் தேவை.
தொடர்பு: 45A, ஆடியபாதம் வீதி, திருநெல்வேலியில் உள்ள மல்ரி சென்ரரில் நேரில் தொடர்பு கொள்ளவும்.
(85488) தொலைபேசி இல.: 0778064054



உங்களின் தோல் சுருக்கமடைகிறதா?
இதோ பாவியுங்கள்...
**சந்தனாலேப்ப ஸ்கிரப் கிறீம்**

காய்ந்து இறந்த தோலை நன்கு நீக்கி தூய்மையாக்கும் தோலுக்கு மருத்துவ போசாக்கை அளித்து சருமத்தை நோயற்றதாக்கி பொன்னிறமேற்றி அழகிய இளமைத்தோற்றத்தைப் பெற்றுத்தரும்.

சந்தனாலேப்ப ஸ்கிரப் கிறீம்
Chandanalepa Scrub Cream

100% herbal

'சிவா நறுமணப் பூங்கா'
288, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
யாழ்ப்பாணம் 1 வ.வீதிவோபண்டி
(சகல பார்மசிகளிலும் பெற்றுக்கொள்ளலாம்).
MANUFACTURED BY: SAN JEEWAKA AYURVEDIC PRODUCTS
VEYANGODA, SRI LANKA. AYY PRO NO: REG NO. A/L 250.

## 5ஆம் ஆண்டின் அழிவிலா நினைவுகள்

ஏந்திழையே! எங்குற்றாய்!



| மண்ணில் | விண்ணில் |
|---|---|
| 13.01.1964 | 20.06.2004 |

**திருமதி சிவபாலசுப்பிரமணியம் வசந்தராணி**

திதி: திருதியை (25.06.2009)

உயிரிற் கலந்து- உணர்வில் நிறைந்து
எம் உயிரிற் பதிந்த உறவே- உம்மை
அந்தரத்தில் விடுத்து!
அகன்றிரே தனிவழியே!
ஆனாலும் ஆறுகின்றோம்- நீங்கள்
ஆண்டவனுடன் கலந்து விட்டீர்கள்- என்று
ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

மாதகல் வடக்கு,
மாதகல்.
(86512)

என்றும் நினைவுடன்...
குடும்பத்தினர்.

## ஐ.தே.க. அமைப்பாளர் பதவியிலிருந்து ஜோசப் மைக்கல் பெரேரா விலகினார்

கொழும்பு, ஜூன்25

ஐக்கிய தேசியக் கட்சியின் எம்.பியும் எதிர்க்கட்சியின் பிரதம கொறடாவுமான ஜோஸப் மைக்கல் பெரேரா, தாம் வகித்து வந்த ஐக்கிய தேசியக் கட்சியின் நீர்கொழும்பு மாவட்ட அமைப்பாளர் பதவியில் இருந்து விலகியுள்ளார்.

தனிப்பட்ட காரணத்துக்காகவே இந்த முடிவு எடுக்கப்பட்டது என்றும், எனினும் இந்த முடிவுக்கான உண்மைக்காரணம் பின்பு தெரிவிக்கப்படும் என்றும் ஜோஸப் மைக்கல் பெரேரா கூறினார்.

நேற்று முன்தினம் பிற்பகல் அவர் நாடாளுமன்றில் உள்ள அவரது அறையில் வைத்து ஊடகவியலாளர்களைச் சந்தித்து இதைக் கூறினார்.

தாம் இப்பதவியில் இருந்து விலகுகின்றமை தொடர்பான இராஜிநாமாக் கடிதத்தை அவர் எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவிடம் கையளித்துள்ளார் என்றும் அவர் சொன்னார்.

இது தொடர்பில் கட்சியுடன் எதுவித பிரச்சினையுமில்லை என்றும் ஜோஸப் மைக்கல் பெரேரா கூறினார். சுமார் ஏழு வருடங்களாக அவர் ஐக்கிய தேசியக் கட்சியின் நீர்கொழும்பு மாவட்ட அமைப்பாளராகச் செயற்பட்டார் என்பது குறிப்பிடத்தக்கது.
(சி)

### வீதியின் குறுக்கே ஓடிய குழந்தை மோ:சைக்கிள் மோதிக் காயம்

வீதியின் குறுக்கே ஓடிய இரண்டரை வயது குழந்தையை வேகமாக வந்த மோட்டார் சைக்கிள் மோதிக் காயப்படுத்தியது.

இச்சம்பவம் மீசாலையில் இடம்பெற்றது.

வெளிக் கதவினைத் திறந்து குழந்தை வெளியே ஓடியபோதே இச்சம்பவம் இடம் பெற்றதாகத் தெரிவிக்கப்பட்டது.

காயங்களுக்கு இலக்கான ஆர்.டிலான் (வயது- 2½) என்னும் குழந்தை சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளது. (203-207)

### தவறிவிட்டது

இல.03, முதலாம் குறுக்குத் தெரு, பாற்பண்ணை வீதி, திருநெல்வேலி எனும் முகவரியுடைய இ.ஜனார்த்தன் என்பவரது பல்கலைக்கழக நூலக அட்டை அடங்கிய பேர்ஸ் 19.06.2009 அன்று பரமேஸ்வராச் சந்திக்கும் யாழ்ப்பாணத்திற்குமிடையே தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் மேற்படி முகவரியிலோ அல்லது பின்வரும் தொலைபேசி இலக்கத்துடனோ தொடர்பு கொள்ளவும்.
தொ.பே. இல.: 0217900244, 0772487018

## துயர் பகிர்கின்றோம்

சக்களாவத்தை வைரவர் ஆலயம், வதிரி கனகசிங்க விநாயகர் ஆலயம் ஆகியவற்றின் பிரதம குரு பிரம்மஸ்ரீ ராதாகிருஷ்ணக் குருக்களின் பாசமிகு மருமகன்

**பிரம்மஸ்ரீ சோ.மதுசூதனக் குருக்கள்**

அவர்களின் திடீர் மறைவுச் செய்தி கேட்டு ஆழ்ந்த கவலையடைகின்றோம்.

அன்னாரின் ஆத்மா சாந்தியடையவும் அன்னாரின் பிரிவால் ஆற்றொணாத் துயரத்தில் ஆழ்ந்திருக்கும் அவர்தம் உறவுகளுக்கு ஆறுதல் அளிக்க வேண்டியும் எல்லாம் வல்ல விநாயகப் பெருமானின் திருவருளை இறைஞ்சுகின்றோம்.

(86497)
வதிரி கனகசிங்க விநாயகர் அடியார்கள்.

## நீங்கா நினைவலைகள் 45ஆம் நாள்



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 16.12.1941 | 13.05.2009 |

**அமரர் வல்லிபுரம் கந்தையா பாலசுப்பிரமணியம்**

அல்வாயில் பிறந்து சாவகச்சேரியில் வளர்ந்து திருநெல்வேலியில் வாழ்ந்து யாழ்.மத்திய கல்லூரி, யாழ்.கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலயம், யாழ்.இந்துக் கல்லூரி ஆகிய பாடசாலைகளில் ஆசிரியராக இருந்து, பின் யாழ்.கல்வித் திணைக்களத்தில் வர்த்தகக் கல்வி ஆலோசகராகவும் ஓய்வுபெறும் போது தென்மராட்சிக் கல்வித் திணைக்களத்தில் உதவிக் கல்விப் பணிப்பாளராகவும் இருந்து அளப்பரும் சேவையாற்றிய அணையா ஜோதியே!

"நெருநல் உளனொருவன் இன்றில்லை என்னும்
பெருமையுடைத்து இவ்வுலகு"

உங்களது ஆத்மா சாந்திபெற இறைவனை வேண்டுகின்றோம்.

கந்தர்மடம், யாழ்ப்பாணம்.
(86506)
குடும்பத்தினர்.

# மரண அறிவித்தல்

## திருமதி நடராசா தனலட்சுமி



கட்டப்பிராயைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட நடராசா தனலட்சுமி நேற்று (24.06.2009) புதன்கிழமை காலமாகி விட்டார்.

அன்னார் காலஞ்சென்ற நடராசாவின் அன்பு மனைவியும் சந்திரபோஸ் (ஜேர்மனி), ஜீவா, ஜிக்கிநிமல் (ஜேர்மனி), தயாநிதி (ஜேர்மனி), யோககீதா ஆகியோரின் அன்புத் தாயும் புஸ்பமாலா (ஜேர்மனி), தர்மலிங்கம், காலஞ்சென்ற கணேஷ் (ஜேர்மனி) மற்றும் ஆனந்தன் (ஜேர்மனி), சுகுமார் ஆகியோரின் அன்பு மாமியும் காலஞ்சென்றவர்களான கந்தசாமி, இராசலட்சுமி மற்றும் சண்முகநாதன் ஆகியோரின் அன்புச் சகோதரியும் கபில்ராஜ், தர்சிகா, கீர்த்திகா, சுபத்திகா, டினேஷ், அனுஷன், கமல்ராஜ், கஜனா, சௌமியா ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (25.06.2009) வியாழக்கிழமை முற்பகல் 11 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் செம்மணி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கட்டப்பிராய்,
கோப்பாய் தெற்கு,
கோப்பாய்.

தகவல்:
**சி.சுகுமார் (மருமகன்),**
உரிமையாளர், இரட்டைச் சங்கு மார்க் அப்பளக் கொம்பனி.
(88324)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இது எப்படி ?

**01.** நீங்கள் வலது கையை உபயோகிக்கும் பழக்கம் உடையவராக இருந்தால் சாப் பிடும்போது வாயின் வலது பக்கத்தில் தான் உணவை சுவைத்துச் சாப்பிடுவீர் கள். அதே நேரம் இடது கைப்பழக்கம் உள்ளவர்கள் சாப்பிடும் போது வாயின் இடது புறத்தைப்பயன்படுத்தி உணவைச் சுவைப்பது வழமை ஆகும்.

**02.** வாய்விட்டுச் சிரித்தால் நோய் விட் டுப் போகும் என்று கூறி உள்ளனர். நன் றாகச் சிரிக்கும்போது உடலில் உள்ளே சுரக்கும் ஹோர்மோன்கள் மூலம் நோய் எதிர்ப்பு சக்தி அதிகரிக்கிறது என்று ஆய்வுகள் மூலம் தெரியவந்துள்ளது. ஆனால் மனிதர்கள் பெரும்பாலும் சிரிப்பதை மறந்துவிட்டார்கள். ஆனால் குழந்தைகள் அப்படி அல்ல. குழந்தைகள் எப்போதும் சிரித்துக் கொண்டும் மகிழ்ச் சியாகவும் இருப்பார்கள். சராசரி யாக 6வயதுடைய குழந்தைகள் நாள் ஒன்றுக்கு 300 முறை சிரிக்கின்றார்கள். அதே நேரம் பெரியவர்கள் 15 முதல் 100 முறைதான் சிரிக் கிறார்கள். அதனால் தான் குழந்தைகளுக்கு மன அழுத்தம் மற்றும் அது தொடர்பான வியாதிகள் எதுவும் வருவதில்லை.

**03.** இரத்தத்தில் உள்ள சிவப்பு அணுக்கள் உடலைமுழுவதும்சுற்றிவர20நிமிடங்கள் ஆகும்.

**04.** வெங்காயத்தை உரிக்கும் போது யாராலும் கண்ணீர் விடாமல் இருக்க முடியாது. காரணம் வெங்காயத்தில் உள்ள அமிலத் தன்மை. வெங்காயத்தின் தோல் பகுதியை உரிக்கும் போது வெளிப் படும் அமிலம் காற்றில் கரைந்து வெங் காயம் உரிப்பவர் மற்றும் அருகில் இருப் பவர் கண்களில் கண்ணீரை வரவழைத்து விடும். இதனை தவிர்க்க ஒரு சுலபமான வழி இருக்கிறது. அதாவது வெங்காயத்தை வெட்டும் போது அந்த நபர் சுவிங்கம் மென்றால் கண்ணில் இருந்து நீர் வராது.

**05.** உங்கள் நாக்கு இளம் சிவப்பு நிறத்தில் இருந்தால் உங்கள் நாக்கு பக்ரீரியா தொல் லையில் இருந்து விடுபட்டு சுத்தமாக இருக் கிறதுஎனஅர்த்தம். அதேநேரம்நாக்கு வெண்மை நிறத்தில் இருந்தால் உங்கள் நாக்கில் பக்ரீ ரியாத் தொல்லை உள்ளது என்று அர்த்தம்.

**06.** வியப்பில் அவள் விழி விரிகிறது என்று கவிஞர்கள், கதாசிரியர்கள் கூறுவ துண்டு. விஞ்ஞானரீதியில் இது நிஜம் தான். அதாவது ஒரு மனிதன் மகிழ்ச்சி யான ஒன்றை அல்லது ஆச்சரியமான ஒன்றைப் பார்க்கும் போது அவனது கரு விழி 45 சதவீதம் விரிவடைகின்றது என் கிறார்கள் விஞ்ஞானிகள்.

**07.** பாரிஸ் நகரத்தில் உள்ள இபில் டவரின் உச்சியை அடைய நீங்கள் 1,792 படிக்கட்டுகளை கடக்க வேண்டும்.

**08.** ஆண்கள் அணியும் சேட்டின் பட்டின்கள் வலது புறமும் பெண்கள் அணியும் சட்டையின் பட்டின்கள் இடதுபுறமும் இருக்கும்.

**09.** ரைற்ரானிக் கப்பல் தயாரிக்க மொத்தமாக ஆன செலவு 7மில்லியன் டொலர் ஆகும். ரைற்றானிக் திரைப்படம் எடுக்க மொத்தமாக 200 மில்லியன் டொலர் செலவானது.

**10.** கடலில் கிடைக்கும் சங்கை காதில் வைக்கும் போது அதில் இருந்து அலை ஓசைச்சத்தம் கேட்பது போல காதுகளில் கேட்கும். இதை சிலர் கடல் அலையின் ஓசை என நினைத்துக் கொள்வதுண்டு. ஆனால் உண்மையில் அது கடல் அலை ஓசை அல்ல. உங்கள் காதுகளில் உள்ள இரத்தக்குழாயில் இரத்தம் பாய்ந்து செல் லும் சத்தம் தான் உங்களுக்குக் கடல் அலை ஓசையாகக் கேட்கிறது.

**11.** குகையில் இருந்து வெளியேறும் வௌவால்கள் எப்போதும் இடது புறமே வெளியேறுகின்றன.

**12.** ஆண்கள் ஒருமுறை கண்சிமிட்டும் நேரத்தில் பெண்கள் இரண்டு முறை கண் சிமிட்டுகிறார்கள்.

**13.** சேவலின் கழுத்து விரிவடைவதால் மட்டுமே கூவமுடிகிறது.

**14.** ஒவ்வொரு நாளும் 22 மில்லியன் மக்கள் காதல் கொள்கிறார்கள் 4 லட்சம் குழந்தைகள் பிறக்கின்றன. 1 லட்சத்து 40 ஆயிரம் பேர் இறக்கின்றனர்.

★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★

**பிரணவன், கலட்டி.**

## இளவல்கள் வட்டம்

YOUTH

## சிந்தனைத் துளிகள்

★ உண்மையான அறிவாளி தன் இரகசியத்தைத் தானே வைத்துக் கொள்வான்.
★ பழிகூறா வண்ணம் வாழ்தலே தலை சிறந்தது.
★ சிறந்த நண்பனுடன் உரையாடுவது உரக்கச் சிந்திப்பதற்குச் சமம்.
★ உண்மையின் தன்மை உணர்ந்தவன் உலகில் விலைமதிக்க முடியாத மனிதனாவான்.
★ தெளிவான பேச்சு தூய்மையான உள்ளத்தின் எதிரொலி
★ அறிவால் ஒருவனை அறிந்து கொள். இல்லையேல் அனுபவித்தாவது புரிந்து கொள்.
★ அன்பின் மூலமாக செயற்படும் ஒவ்வொரு காரியமும் ஆனந்தத் தையே கொண்டுவரும்.
★ அழகை எதிர்பார்க்கும் ஆடவன் விட்டில் பூச்சியைப் போன்றவன்.

**சு. அபிராமி, தரம்- 7, யா/நாவற்குழி ம.வி.**

## சோகராகம்




எல்லைகளற்ற வானில்
சிறகடித்துப் பறக்க நினைத்த
புள்ளினம் நான்.......
எனது உரிமை மறுக்கப்பட்டதால்,
கூடுதான் வீடென ஆகி
உடைக்க முடியாத
விலங்கு சுமந்தபடி என்வாழ்க்கை!
எனக்கு,
ஏனிந்தக் கோலம்?
கண்ணீர் நிறையும் விழிகளுடன்
காலத்தை எண்ணுகிறேன்!

- குணலரூன்.

## வரலாற்றில் இந்த வாரம்

**ஜூன் - 19**



முதலாவது உலக மகா யுத்தத்தில் ஸெப்ளின் என்ற ராட்சத ஆகாயக் கப்பல்களில் வந்து ஜேர்மனியர்கள் குண்டு வீசினார்கள். ஸெப்ளின் விமானம் 1910 ஆம் ஆண்டு ஜூன் 19 ஆம் திகதிதான் முதன் முதலாகப் பறக்க விடப்பட்டது.

**ஜூன் - 20**

இங்கிலாந்தினை ஒரு பெரும் சாம்ராஜ்ஜியமாக மாற்றிய விக்ரோறியா மகாராணி 1837 ஆம் ஆண்டு ஜூன் 20 இல் தான் மகாராணியாக முடி சூடினார்.



**ஜூன் - 21**



கட்டடக்கலையில் மிகச் சிறந்த நிபுணராகக் கருதப்பட்ட இங்கிலாந்து நாட்டைச் சேர்ந்த இனிகோ ஜோன்ஸ் என்ற கலைஞர் 1652 ஆம் ஆண்டு ஜூன் 21 இல் இறந்தார்.

**ஜூன் - 22**

'சிங் சொலமன் மைன்' என்ற புகழ்பெற்ற நாவலை உருவாக்கியவர் 'சேர் ஹென்றி ரைடர் ஹெக்கார்ட்' இவர் 22 ஆம் திகதி ஜூன் மாதம் 1856 ஆம் ஆண்டு பிறந்தார்.



**ஜூன் - 23**



புதிய கடற்பாதை கள் பலவற்றைக் கண்டறிந்தவர் ஹென்றி ஹட்சன் என்ற மாலுமி. 1611 ஆம் ஆண்டு ஜூன் 23 ஆம் திகதி இவருக்கு எதிராகக் கப்பலில் புரட்சி வெடித்தது. இறுதி யில் ஹட்சனும் அவரது மகனும் ஏழு தோழர்களும் ஒரு படகில் நடுக்கட லில் விடப்பட்டனர். இவர்களின் கதி இதுவரை தெரிய வில்லை.

**ஜூன் - 24**

அர்த்தம் பொதிந்த தமிழ்த்திரைப் படப் பாடல் களை எழுதிப் புகழ்பெற்ற கவியரசு கண்ண தாசன் 1917 ஆம் ஆண்டு ஜூன் 24 ஆம் திகதி தான் பிறந்தார்.



**ஜூன் - 25**



அமெரிக்காவின் பூர்வீகக் குடிகளான செவ்விந்தியரை அழித்துத் தமது இருப்பை அமெரிக் கர்கள் நிறுவினர். எனினும் 1876 ஆம் ஆண்டு ஜூன் 25 இல் நிகழ்ந்தப் போர் ஒன்றில் 'கஸ்ரர்' என்ற படைத்தளபதி உட்பட 226 குதிரை வீரர்களை செவ்விந் தியர் கொன்று வென்றனர்.

## கேள்விக்கு என்ன பதில்? -29

ஒரு மரத்தில் 8 பறவைகள் உட்கார்ந்திருந்தன. அவை ஒவ்வொன்றும் ஒவ்வொரு திசை நோக்கிப் பார்த்தபடி இருந்தன. மரத்தின் கீழே ஒரு பழ வியாபாரி அன்னாசி, தோடை, மாம்பழம் ஆகிய பழங்களைப் பரப்பி வைத்தான். பழங்களின் வாசனை பறவைகளுக்கு எட்டியது. பறவைகளின் கண் இப்போது எதில் இருக்கும்.
(சரியான விடையை 03.07.2009 இற்கு முன்னர் அனுப்பிவைக்கவும்)

### கேள்விக்கு என்ன பதில்? 27இன் சரியான விடை

**நீர் வெளியேறாது**

### கேள்விக்கு என்ன பதில்? - 27- பரிசு பெறுவோர்

முதலாம் பரிசு - மு.கலைச்செல்வி, மட்டுவில் தெற்கு, சாவகச்சேரி.
இரண்டாம் பரிசு - இ.வேணுகுமாரன், கரப்பிட்டி பிள்ளையார் கோயிலடி, அராலி தெற்கு, அராலி.
மூன்றாம் பரிசு - திருமதடி என்.கே.சர்மா, நாச்சிமார் கோயில், கே.கே.எஸ்.வீதி.

### பாராட்டுப் பெறுவோர்:

1. ச.கீதசபா, மே/பா.சடாட்சரன் (ஜெகன்) நெசவுசாலை ஒழுங்கை, இருபாலை வீதி, கோண்டாவில்.
2. பி.தினுஷா, தரம் 9 C, வேம்படி மகளிர் உயர்தர பாடசாலை.

## உள்ளத்தில் ஊற்றெடுத்த உன்னதமானவை

- உன் உணர்வுகளுக்குப் பிறர் மதிப்பளிக்க வேண்டுமென நீ எதிர்பார்ப்பது போல், மற்றவர் உணர்வுக்கும் நீ மதிப்பளிக்க வேண்டும்!
- உன் எண்ணத்தில் எழும் தீய எண்ணங்களை அடக்கிவிடு. தூய்மையான எண்ணங்களையும், செயற்பாடுகளையும் வளர்த்துக் கொள்ள முயற்சி செய்!
- உன் உள்ளம் புண்படும் வகையில் எவனொருவன் உனக்கு அவமதிப்பு ஏற்படுத்தும் போது உனக்கேற்படும் துயரத்தை எண்ணிப்பார்த்து மற்றவன் மனதைப் புண்படுத்த முயலாதே!
- உன் உள்ளத்தில் எழும் நல்ல கருத்துக்களை உன் உள்ளத்தில் மட்டும் வைத்துப் புதைத்துவிடாதே. அவற்றை மற்றவனுக்கும் வெளிப்படுத்தி நல்வழிப்படுத்தப் பின் நிற்காதே.
- உன் செயற்பாடுகளையிட்டு உன் மனதைக் கேட்டுப்பார். உன் செயல்கள் தவறானது என மனச்சாட்சி சொல்லுமாயின் செயற்பாட்டுத் தவறுகளைத் திருத்திக் கொள், சுயநலனுக்காகப் பொதுநலத்தைக் குழிதோண்டிப் புதைக்காதே!
- உன் எண்ணங்கள் உன்னதமானதாக இருக்கலாம் நோக்கங்கள் நல்லனவாக இருக்கலாம், ஆனால் அடக்கு முறைகொண்டு மற்றவனிடம் உன் எண ணத்தை, நோக்கங்களைத் திணிக்க முயலாதே!
- உன் செய்கையில் உண்மையைக் காட்டு, உன் கொள்கையில் உறுதியைக் காட்டு, மற்றவர்களுக்கு நல்ல வழியைக்கட்டு!
- உன் தீய குணங்களை கடமையில் காட்டுவதைத் தவிர்த்துக் விடு. உன் இயல் பான, கூடாத குணங்களை உன் சேவையை நாடிவரும் மக்களிடம் காட்டி விடாதே, கடமையைச் செய்! கண்ணியம் பேண்!
- உன் நாவில் இருந்து வரும் கெட்ட வார்த்தைகளைத் தவிர்த்து விடு அன் பான, கனிவான, பண்பான வார்த்தை களைப் பேசி, மற்றவர் மனங்களை வெல்லத் தவறாதே!
- உன் எதிரியையும் பழிவாங்க நினைக் காதே! அவன் வெட்கித் தலைகுனிய. நல்ல காரியங்களைச் செய்து காட்டி நல்ல பெயரை தட்டிக் கொள்ளத் தவறாதே!

**[illegible] J.P., [illegible]**

## அன்பு



நீடிய சாந்தமும் தயவுமுள்ளது
பொறாமையில்லை
தன்னைப் புகழாது
இறுமாப்பாயிராது
அயோக்கியமானதைச்
செய்யாது
தற்பொழிவை நாடாது
சினமடையாது
தீங்கு நினையாது
அநியாயத்தில் சந்தோஷப்படாமல்
சத்தியத்தில் சந்தோஷப்படும்
சகலத்தையும் தாங்கும்
சகலத்தையும் விசுவாசிக்கும்
சகலத்தையும் நம்பும்
சகலத்தையும் சகிக்கும்
அன்பு ஒருபோதும் ஒழியாது
பாஷைகள் ஒய்ந்துபோம்
அறிவானாலும் ஒழிந்துபோம்
நிறைவானது வரும்போது
குறைவானது ஒழிந்துபோம்
அன்புதான் எப்போதும்
விலையேறப்பெற்றது.

**கோ.கீர்த்தனா, கலைப்பிரிவு 2011, யா/பேரியபுலம் மகா வித்தி.**

## இளைஞர், யுவதிகளே!

உங்களின் திறமைகளை வெளிக்கொணரவும், பிரச்சினைகள் பற்றிப் பேசவும், தேடல்களுக்குத் தீனி போடவும் 'இளவல்கள் வட்டம்' என்ற இந்தப் பகுதி மலர்ந்துள்ளது. இப்பகுதிக்கான உங்கள் படைப்புகளையும், விமர்சனங்களையும் கீழேயுள்ள படிவத்தோடு இணைத்து அனுப்பிவையுங்கள்.

பெயர் :-...............................................
முகவரி:-...............................................
:-...............................................
.......................... ..............................
திகதி கையொப்பம்

'இளவல்கள் வட்டம்',
'உதயன்',
361, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கண்ணீர் அஞ்சலி



**தம்பையா சிதம்பரப்பிள்ளை**

(தலைவர், கட்டைவேலி-நெல்லியடி ப .நோ.கூ சங்கம்)

அந்தரித்த வேளையில் அணைத்துதவி செய்தவனே
பரிதவித்த பொழுதினிலே பாசமழை பொழிந்தவனே
நிலைகுலைந்த சூழ்நிலையில் நேசக்கரம் நீட்டியவனே
கதிகலங்கித் தவித்த போது கைகொடுத்த பெருமகனே
கூட்டுறவின் பண்புக்கோர் இலக்கணமாய் திகழ்ந்தவனே

அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

சாவகச்சேரி ப.நோ.கூ.சங்கம், கண்டி வீதி, சாவகச்சேரி. (சி/559158) தலைவர், பணிப்பாளர்கள், பணியாளர்கள்.



## அபிவிருத்தி அதிர்ஷ்டம்

உத்தியோகபூர்வ முடிவுகள்

1098 நீலம்

வெற்றி இலக்கங்கள்

கடகம் 08 24 44 51

23-06-2009

ஜக்பொட் பரிசு ரூபா. 2,867,600/- வெல்லப்படவில்லை

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் எண்ணிக்கை | பரிசுத் தொகை | மொத்தம் |
|---|---|---|---|
| 1 இலக்கம் | 203,340 | 20/- | 4,066,800/- |
| 2 இலக்கங்கள் | 18,696 | 40/- | 747,840/- |
| 1 இல. + லக்கினம் | 18,444 | 60/- | 1,106,640/- |
| 2 இல. + லக்கினம் | 1,681 | 200/- | 336,200/- |
| 3 இலக்கங்கள் | 491 | 1000/- | 491,000/- |
| 3 இல. + லக்கினம் | 53 | 10,000/- | 530,000/- |
| 4 இலக்கங்கள் | 3 | 200,000/- | 600,000/- |
| 4 இல. + லக்கினம் | - | 2,867,600/- | - |
| மொத்தம் | | | 7,878,480/- |
| வெற்றிபெறாத டிக்கட்டுகளுக்கான பரிசு | 5 | 100,000/- | 500,000/- |
| வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை | 242,713 | | 8,378,480/- |

இந்த வெள்ளிக்கிழமை சுப்பர் பரிசுத் தொகை ரூபா 3,776,300/-

2009 ஜூன் 26 ஆம் திகதி வெள்ளிக்கிழமை சிவப்பு நிற டிக்கட்டுக்கள் சீட்டிழுப்புக்குச் செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்குச் செல்லுபடியாகும்.

வளமான வாழ்விற்கு அபிவிருத்தி லொத்தர்

அபிவிருத்தி லொத்தர் சபை


அபிவிருத்தி அதிர்ஷ்டம் சீட்டிழுப்பில் வெற்றி பெறாத டிக்கட்டுகளில் இருந்து ரூபா 100,000/- பரிசு பெறும் சீட்டுக்கள்.

| | |
|---|---|
| பதுளை | 400262657-8-06 |
| கொழும்பு | 400269521-7-17 |
| இரத்தினபுரி | 400262283-9-39 |
| காலி | 400267677-8-18 |
| களுத்துறை | 400268378-0-39 |



## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

தாயின் மடியில் 29 ✱ 03 ✱ 1937



ஆண்டவன் அடியில் 27 ✱ 05 ✱ 2009

**அமரர் செல்வவிநாயகம் இராசநாயகம்**

கடந்த 27.05.2009 அன்று இறைவனடி சேர்ந்த எமது குடும்ப விளக்கின் மறைவுச் செய்தி அறிந்து நேரில் வந்தும், தொலைபேசி மூலம் ஆறுதல் கூறியவர்களுக்கும், அன்னாரின் இறுதிக் கிரியைகளில் கலந்து கொண்டோருக்கும் எமது மனமார்ந்த நன்றியினைத் தெரிவிப்பதுடன் நாளை (26.06.2009) வெள்ளிக்கிழமை மு.ப. 11 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறும் அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும், அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதிய போசனத்திலும் பங்கு கொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

பன்னையம்பதி, பருத்தித்துறை. குடும்பத்தினர்.

## தவறிவிட்டது

இல.97, கோயில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம் என்னும் முகவரியுடைய சிவகலா சோமசுந்தரம் என்பவரது தே.அ.அ. (816702968V) யாழ்.நகருக்குள் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தந்து தவவும்.

தொடர்பு: சிவகலா சோமசுந்தரம், இல.639/6, நாவலர் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம். தொ.பே: 021 222 5682, 071 8561623 (86518)

## காவலாளி தேவை

நல்லூர் முன்னணி நிறுவனத்திற்கு முழு நேர காவலாளி தேவை. இருப்பிட வசதி செய்து தரப்படும். 10.07.2009இற்கு முன்னர் விண்ணப்பிக்கவும். வயது 40 - 60

உதயன் விளம்பர இல: 3912 (சி/559162)

## சமய சந்நிதிகளில்

யாழ்ப்பாணம், ஜூன் 25

கோப்பாய் வெள்ளெருவைப் பிள்ளையார் ஆலய வருடாந்தப் பெருந்திருவிழா எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து பதினொரு நாள்கள் நடைபெறும்.

எதிர்வரும் 6ஆம் திகதி தேர்த்திருவிழாவும் மறுநாள் செவ்வாய்க்கிழமை தீர்த்தத்திருவிழாவும் இடம்பெறும். தேர்த் திருவிழாவன்று காலை 8.30 மணிக்கும் தீர்த்தத்திருவிழா அன்று முற்பகல் 10 மணிக்கும் வசந்தமண்டபப் பூசை இடம் பெறும். (201)

✱ ✱ ✱

யாழ்ப்பாணம், ஜூன் 25

சாவகச்சேரி இலக்கியாரணியம் (மண்டுவில் சோலையம்மன்) ஆலய வருடாந்தப் பெருந்திருவிழா நாளை மறுதினம் சனிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து பத்துத்தினங்கள் நடைபெறவுள்ளது.

எதிர்வரும் 5ஆம் திகதி காலை 9 மணிக்கு தேர்த்திருவிழாவும் மறுநாள் திங்கட்கிழமை காலை 9 மணிக்குத் தீர்த்தத் திருவிழாவும் நடைபெறும். (201-131)

✱ ✱ ✱

யாழ்ப்பாணம், ஜூன் 25

நவாலி, அட்டகிரி கந்தசுவாமி ஆலய வருடாந்த பெருந்திருவிழா நாளை மறுதினம் சனிக்கிழமை முற்பகல் 11 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து நடைபெறவுள்ளது.

எதிர்வரும் 6ஆம் திகதி காலை 8 மணிக்கு வசந்த மண்டபப் பூசையைத் தொடர்ந்து முற்பகல் 10.30 மணிக்கு தேர்த்திருவிழாவும் மறுநாள் செவ்வாய்க் கிழமை தீர்த்தத்திருவிழாவும் இடம்பெறும். (201)

✱ ✱ ✱

யாழ்ப்பாணம், ஜூன் 25

வல்வெட்டித்துறை மீனாட்சி அம்மன் ஆலய வருடாந்த அபிஷேகம் இன்று வியாழக்கிழமை ஆரம்பமாகி தொடர்ந்து பத்துத் தினங்கள் நடைபெறும்.

எதிர்வரும் 4ஆம் திகதி முற்பகல் 10 மணிக்கு 108 சங்காபிஷேகம் இடம் பெறும். (201)

✱ ✱ ✱

யாழ்ப்பாணம், ஜூன் 25

அரியாலை வெட்டுக்குளம் புவனேஸ்வரி அம்பாள் ஆலய வருடாந்த பெருந் திருவிழா இன்று வியாழக்கிழமை முற்பகல் 11 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து பத்துத் தினங்கள் நடைபெறும்.

எதிர்வரும் 3ஆம் திகதி முற்பகல் 10 மணிக்கு தேர்த் திருவிழாவும் மறு நாள் சனிக் கிழமை முற்பகல் 11.30 மணிக்கு தீர்த்தத் திருவிழாவும் இடம் பெறும். (201)

✱ ✱ ✱

யாழ்ப்பாணம், ஜூன் 25

கொக்குவில் மேற்கு - சொர்ண வடலி சொர்ண சித்தி விநாயகர் ஆலய வருடாந்தப் பெருந்திருவிழா நாளை வெள்ளிக் கிழமை முற்பகல் 10 மணிக்கு கொடி யேற்றத்துடன் ஆரம் பமாகி தொடர்ந்து பன்னிரண்டு தினங் கள் நடைபெற வுள்ளது. (201)

## கணக்கீட்டுக் கற்கைகள் குழாம்

**G.A.S Group of Accounting studies - G.A.S**

(உயர்கல்விக்கான தனியார் நிறுவனம்)

**கல்வியாண்டு - 2009**

யாழ்.குடாவின் கணக்கியல் முகாமைத்துவ மற்றும் வணிகக் கல்வியில் உயர் தொழில்சார் கற்கைகளை (Professional Studies) பயின்றுவரும் உயர்கல்வி மற்றும் பட்டப்பயில், க.பொ.த. (உ/த) - வர்த்தகப் பிரிவு மாணவர்களுக்கான அரிய வாய்ப்பு!

மீண்டும் இரண்டாவது தொகுதி (புதிய) கல்வியாண்டுக்கான விரிவுரைகள் ஜூலை 04 இல் ஆரம்பமாகின்றன.

இடம் : இலங்கை மின்சார சபை அலுவலகம் அருகாமை, கே.கே.எஸ்.வீதி, குளப்பிட்டி, கொக்குவில்.

மாணவர் பதிவு : 2009 ஜூலை 03 வரையான சனி, ஞாயிறு தினங்களில் மு.ப. 9 முதல் - பி.ப.4 வரை

மாணவர் எண்ணிக்கை: வள மட்டுப்பாடு காரணமாக இம்முறை ஒவ்வொரு பாடத்துறைக்கும் தலா 40 பேர் மட்டுமே! (முன்னைய நடைமுறைக்கு முற்றிலும் மாறுபட்டது)

விரிவுரைகள்: 1.நிதி முகாமைத்துவம் 2.முகாமைக்கணக்கீடு 3.கிரயக் கணக்கீடு 4.நிதி/உயர் நிதிக்கணக்கீடும் அறிக்கையிடலும் 5.பொருளியல் 6.வணிகக் கல்வி

விரிவுரையாளர்கள் : கணக்கீட்டு/ முகாமைத்துவ வல்லுநர்களும் உயர் தேசிய டிப்ளோமாதாரிகளும்

குறிப்பு: தமிழ்/ ஆங்கில மூலமான விரிவுரைகள் தனித்தனியாக நடைபெறுகின்றன. (சனி, ஞாயிறு, தினங்களும் வார நாள்களில் பிற்பகலிலும்)

மேலதிக விவரங்களுக்கு அலுவலகத்தில் தொடர்பு கொள்க.

"உங்கள் நிறைவே எமது இலட்சியம்"

(86519) இணைப்பாளரும் பங்காளர்களும், G.A.S

## பதவி வெற்றிடங்கள்

எமது நிறுவன செயற்பாடுகளை விஸ்தரிக்கும் நோக்குடன் விற்பனை மற்றும் சந்தைப்படுத்தும் துறையில் ஆர்வமும் பொருத்தமான தகைமைகளும் உள்ளவர்களிடம் இருந்து கீழ் குறிப்பிடப்படும் பதவிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**01. விற்பனை முகாமையாளர்**

- கல்விப் பொதுத் தராதரப் பரீட்சை (சாதாரணம் / உயர்தரம்) சித்தி பெற்றிருக்க வேண்டும்.
- வயதெல்லை 30-50 வயது.
- சந்தைப்படுத்தலில் தகைமை பெற்றோருக்கும், சந்தைப்படுத்தல் துறையில் 3 வருட அனுபவம் கொண்டவர்களுக்கும் முன்னுரிமை வழங்கப்படும்.

**02. சந்தைப்படுத்தல் உத்தியோகத்தர்**

- கல்விப் பொதுத் தராதரம் ( சதாரண தரம்) பரீட்சையில் சித்தி பெற்றிருக்க வேண்டும்.
- வயதெல்லை 18-30 வயது.
- சந்தைப்படுத்தல் துறையில் 2-3 வருட அனுபவம் உள்ளவராக இருத்தல் வேண்டும்.

நீங்கள் இத் தகைமைகளைப் பூர்த்தி செய்பவராயின் உங்களது சுயவிவரத் தரவுகளைக் கொண்ட விண்ணப்பத்தை கீழ் குறிப்பிடும் விலாசத்திற்கு விளம்பரத்திகதியில் இருந்து 10 நாள்களுக்குள் அனுப்பி வைக்கவும்.

- மும்மொழி ஆற்றல் உள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.
- சம்பளம் பேசித் தீர்க்கப்படும்.

866, பருத்தித்துறை வீதி, நல்லூர், யாழ்ப்பாணம். (சி/559159)

மனிதவள முகாமையாளர், யூரோவில் இன்வெஸ்ற்மன்ற் (பிறைவேற்) லிமிட்டட்.

## கண்ணீர் அஞ்சலி



**தம்பையா சிதம்பரப்பிள்ளை**

(தலைவர், கட்டைவேலி-நெல்லியடி, ப.நோ.கூ சங்கம்)

அவர்களின் மறைவுச் செய்தி கேட்டு மிகுந்த அதிர்ச்சி அடைகின்றோம்.

அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் அவரின் குடும்பத்தினர் மற்றும் சங்கத்தினருடன் நாமும் எமது துயரைப் பகிர்ந்து கொள்கிறோம்.

சிவசண்முகராசா அன் கோ, இல. 45, 4ஆம் குறுக்குத் தெரு, கொழும்பு-11.

அன்னை நாகா பூட்சிற்றி, கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம். (சி/559160)

உரிமையாளரும், பணியாளர்களும்.

## 11ஆவது பிறந்த தினமும் 22ஆவது மாத நினைவஞ்சலியும்



செல்வன் **கண்ணதாசன் ரஜந்தன்** (அன்பு)

(தரம் 4 மாணவன், இணுவில் இந்துக் கல்லூரி)

அன்னை மடியில்: 25.06.1998

பரமன் அடியில்: 30.08.2007

எம் அருமை அன்பிற்கு
அகவை இன்று பதினொன்று
மனதால் உனை நினைத்து, நினைத்து
வேதனையில் வாடுகின்றோம்.
உன் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும்

[illegible] கிழக்கு, இணுவில். (86508) குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈரானில் ஆர்ப்பாட்டக்காரர்களுக்கு எதிரான அரச வன்முறைகளுக்கு ஒபாமா கண்டனம்

## சமாதான வழியில் தீர்வுகாணுமாறும் வலியுறுத்து

வாஷிங்ரன், ஜூன் 25

ஈரானிய ஜனாதிபதித் தேர்தல் முடிவுகளுக்கு எதிராக ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டு வருவோர் மீது கட்டவிழ்க்கப்பட்டுள்ள அரச வன்முறைகளுக்கு அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமா கடும் கண்டனம் தெரிவித்துள்ளார். இவை நீதிக்குப் புறம்பான நடவடிக்கைகள் என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

வெள்ளை மாளிகையில் இடம்பெற்ற வாராந்த பத்திரிகையாளர் மாநாட்டில் பராக் ஒபாமா உரையாற்றினார். இதில் ஈரான் விவகாரம் முக்கிய இடம் வகித்தது. ஈரானிய ஆர்ப்பாட்டக்காரர்களுக்கு எதிராகக் கட்டவிழ்க்கப்பட்டுள்ள வன்முறைகளை பராக் ஒபாமா கடுமையாகச் சாடினார்.

''ஈரானிய ஆர்ப்பாட்டக்காரர்கள் தாக்கப்படுகிறார்கள். சிறையில் அடைக்கப்படுகிறார்கள். அவர்களுக்கு எதிராக மிரட்டல் விடுக்கப்படுகிறது. இந்த அரச வன்முறைகள் நீடிக்குமானால், பின்விளைவுகளுக்கு ஈரானிய தலைவர்கள் முகங்கொடுக்க நேரிடும்'' என்றும் அவர் அழுத்தமாகக் குறிப்பிட்டார்.

''ஈரானில் பரவலாக தலைதூக்கியுள்ள இவ் விவகாரத் துக்குத் தீர்வு எட்டப்படவேண்டும். எவ்வாறு இது எட்டப்படும் என்பதை நாம் அறியோம். ஈரானில் ஸ்திரப்பாடு, சட்டபூர்வமான உரிமைகள் ஆகியவை நிலைநாட்டப்படவேண்டும். மக்களின் சுபீட்சத்துக்கு வழி சமைக்கவேண்டும்'' என்றும் அவர் சுட்டிக் காட்டினார்.

''இந்த உன்னத நிலைப்பாடுகளை அடைவதற்கு சமாதான மார்க்கமுண்டு. ஈரானிய அரசு இந்த வழியை - அணுகுமுறையை அங்கீகரிக்க வேண்டும். இதற்குக் காலம் கடந்துவிடவில்லை. இவ்வழிமுறைகள் மூலமாக விவகாரத்துக்குப் பரிகாரம் கண்டுவிடலாம். இவ்வழியை அது பின்பற்றுமென நாம் நம்புகின்றோம்'' என்றும் அவர் குறிப்பிட்டார்.

தெஹ்ரான் வீதியில், நடா அஹா சொல்ட்டான் என்னும் 26 வயது பெண் பகிரங்கமாகச் சுட்டுக்கொல்லப்பட்ட சம்பவத்தை வெளிப்படுத்தும் ஒளிநாடா குறித்தும் ஒபாமா சூறிப்பிட்டார். உலகமெங்கணும் இந்த ஒளிநாடா பதிவுகள் விநியோகிக்கப்பட்டுள்ளன. ஈரானிய ஆர்ப்பாட்டக்காரர்களும், இந்த ஒளிநாடாவை ஆர்ப்பாட்டப் போராட்டத்துக்கு ஒரு முக்கிய கருவியாகக் கையாளத் தொடங்கியுள்ளார்கள்.

பராக் ஒபாமா தொடர்ந்து பேசுகையில், ''ஈரானிய மனித உரிமைகள் முற்றும் முழுதாக மீறப்பட்டுள்ளன. நீதிக்கான அமைதி ஆர்ப்பாட்டங்களை இரும்புக் கரத்தால் உலகின் பார்வையிலிருந்து மறைத்துவிட முடியாது. நீதிக்காக நிமிர்ந்து நிற்பவர்களே எப்போதும் வரலாற்றின் சரியான பகுதியில் இடம்பெறுவார்கள். ஏனையோர் கறைபடிந்த அத்தியாயங்களுக்குள் தள்ளப்பட்டு விடுவார்கள்'' என்றும் சுட்டிக்காட்டினார்.

''ஈரானில் கடந்த சில தினங்களாக இடம்பெற்றுவரும் அச்சுறுத்தல்கள், தாக்குதல்கள், சிறைவைப்பு ஆகியவற்றால் அமெரிக்காவும் சர்வதேச சமூகமும் அதிர்ச்சிக்குள்ளாகி வருகின்றன. இந்த அநீதியான செயல்களை நான் வன்மையாகக் கண்டிக்கிறேன். உயிரிழப்புக்குள்ளான ஒவ்வோர் அப்பாவிக்காகவும் துக்கம் அனுஷ்டிக்கும் அமெரிக்க மக்களுடன் நானும் இணைந்து இரங்கலைப் பகிர்ந்து கொள்கின்றேன்'' என்றும் அவர் கூறினார்.

''ஈரானிய இஸ்லாமியக் குடியரசின் இறையாண்மையை அமெரிக்கா பெரிதும் மதிக்கின்றது. அதன் விவகாரங்களில் ஒருபோதும் தலையிடுவதில்லை. அதேவேளை, ஈரானிய மக்களின் மனோதிடத்தையும், கௌரவத்தையும் நாம் கருத்திற்கொள்ள வேண்டும்'' என்றும் அவர் குறிப்பிட்டார்.

''ஈரானிய விவகாரம் அமெரிக்கா சம்பந்தப்பட்டதல்ல. அதுபோல மேற்குலகுக்குரியதொன்றல்ல. ஈரானிய குடிமக்கள் சம்பந்தப்பட்டது. அவர்களின் எதிர்காலத்தை ஒட்டிய ஒரு விவகாரம். அவர்களே தங்களுக்கான எதிர்காலத்தை நிர்ணயித்துக்கொள்ள வேண்டும். சுதந்திரம் மதிக்கப்பட வேண்டும்'' என்றும் அவர் கேட்டுக்கொண்டார்.

# இரு ஈரானிய இராஜதந்திரிகளுக்கு பிரி. அரசு வெளியேற்ற உத்தரவு

## ஈரானின் நடவடிக்கைக்குப் பதிலடி

லண்டன், ஜூன் 25

ஈரானிய அரசின் நடவடிக்கைக்குப் பதிலடி கொடுக்கும் பொருட்டு, பிரிட்டனிலுள்ள இரு ஈரானிய இராஜதந்திரிகளை உடனடியாக நாட்டை விட்டு வெளியேறி விடுமாறு பிரிட்டிஷ் அரசு உத்தரவிட்டுள்ளது.

உள்நாட்டு விவகாரங்களில் தலையிடுகிறார்கள் என்ற குற்றச்சாட்டின் பேரில், ஈரானிலுள்ள இரு பிரிட்டிஷ் இராஜதந்திரிகளை வெளியேறுமாறு ஈரானிய அரசு உத்தரவிட்டுள்ளமைக்குப் பதில் நடவடிக்கையாகவே, பிரிட்டிஷ் அரசும் வெளியேற்ற உத்தரவைப் பிறப்பித்துள்ளது.

ஈரானின் தலை நகரான தெஹ்ரானில் இடம்பெற்றுவரும் ஆர்ப்பாட்டங்களுக்குப் பிரிட்டனே சூத்திரதாரியாக உள்ளது என்றும் ஈரான் குற்றஞ்சாட்டியுள்ளது. இரு பிரிட்டிஷ் இராஜதந்திரிகளும் தங்கள் பதவிக்கு அப்பாற்பட்ட நடவடிக்கைகளில் ஈடுபட்டு வந்துள்ளார்கள் என்றும் அது குறிப்பிட்டுள்ளது. ஈரானின் குற்றச்சாட்டுகள் பிரிட்டனால் நிராகரிக்கப்பட்டுள்ளன.

பிரிட்டிஷ் பிரதமர் கோர்டன் பிறவுண் நாடாளுமன்றத்தில் பேசுகையில், ''இரு பிரிட்டிஷ் இராஜதந்திரிகளை வெளியேற்றுவதற்கு ஈரானால் எடுக்கப்பட்டுள்ள முடிவு அநீதியானது. அதன் குற்றச்சாட்டுகள் ஆதாரமற்றவை. நொண்டிச் சாட்டுகளைக் கொண்டவை'' என்றார்.

''ஈரானின் நடவடிக்கைக்கு நாம் பதில் நடவடிக்கை எடுத்துள்ளோம். லண்டனிலுள்ள ஈரானிய தூதரகத்தைச் சேர்ந்த இரு இராஜதந்திரிகள் வெளியேறி விட வேண்டுமென நாம் பணித்துள்ளோம். ஈரானிய தூதருக்கும் அறிவிக்கப்பட்டு விட்டது'' என்றும் அவர் குறிப்பிட்டார்.

'' தேர்தலின் வெளிப்பாடுகள் மக்களின் அபிலாஷையையும், தெரிவையும் பிரதிபலிக்கக் கூடியவையாக இருக்கவேண்டும். சமீபத்திய தேர்தல்கள் நம்பகத் தன்மையைக் கொண்டிருக்குமானால், அதை மக்களுக்கு ஊர்ஜிதப்படுத்த வேண்டிய பொறுப்பு ஈரானுக்கு உண்டு. இதை உணர்ந்து அரசு செயற்பட வேண்டும்'' என்றும் அவர் கேட்டுக் கொண்டார்.

''ஈரானில் இந் நியதிக்கு மாறாக ஒடுக்குமுறை தலை தூக்கியுள்ளது. ஜனநாயக உரிமைகள் வெகுவாகக் குறைக்கப்பட்டுள்ளன. கடந்த சில தினங்களாக இடம்பெற்றுவரும் சம்பவங்கள் இவற்றையே பிரதிபலிக்கின்றன. இந்நிலை நீடிக்கக்கூடாது'' என்றும் அவர் குறிப்பிட்டார்.

# ஆளில்லா அமெ. விமானங்கள் தாக்குதல்: பாகிஸ்தானில் ஐம்பதுக்கு மேற்பட்டோர் பலி!

பாகிஸ்தானின் தென் வசீரிஸ்தானிலுள்ள தலிபான் இலக்குகள் மீது செவ்வாய்க்கிழமை மாலை ஆளில்லா அமெரிக்க விமானங்கள் மேற்கொண்ட ஏவுகணைத் தாக்குதல்களில் ஐம்பதுக்கு மேற்பட்டோர் கொல்லப்பட்டனர். அநேகர் காயமடைந்தனர் என அதிகாரிகள் தெரிவித்தார்கள்.

இதற்கு முன்னர் இடம்பெற்ற ஆளில்லா அமெரிக்க விமானத் தாக்குதலில் தலிபான் கொமாண்டர் நியாஸி வாலி கொல்லப்பட்டார். அவரது மரணச் சடங்கில் பங்குபற்றி விட்டுத் திரும்பியவர்களில் பெருந்தொகையானோரே இத்தாக்குதலில் பலியாகியுள்ளனர் என்றும் அவர்கள் குறிப்பிட்டார்கள்.

பாகிஸ்தான் தலிபான் தலைவர் பைத்துல்லா மெஹ்சூட்டின் பேச்சாளர் மௌலானா நூர் செயித் இது குறித்து பி.பி.ஸிக்குத் தெரிவிக்கையில், ''செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற ஏவுகணைத் தாக்குதலில் ஐந்து தீவிரவாதிகள் உட்பட 43 பேர் கொல்லப்பட்டுள்ளனர். 26 பேர் காயமடைந்துள்ளனர். இத்தாக்குதலில் சிரேஷ்ட தலிபான் உறுப்பினர்கள் எவரும் கொல்லப்படவில்லை'' என்றார்.

''முன்னைய ஏவுகணைத் தாக்குதலில் நியாஸி வாலி கொல்லப்பட்டார். செவ்வாய்க்கிழமை மரணச்சடங்கு இடம்பெற்றது. இதில் பங்குபற்றிவிட்டு மக்கள் கலைந்து சென்று கொண்டிருந்தனர். அப்போது ஆளில்லா விமானங்கள் மூன்று ஏவுகணைத் தாக்குதல்களை மேற்கொண்டன'' என புலனாய்வுத்துறை அதிகாரியொருவர் ரொய்ட்டருக்குத் தெரிவித்தார்.

''கடந்த ஒகஸ்ட் முதல் அமெரிக்க ஆளில்லா விமானங்கள் 35 இற்கு மேற்பட்ட ஏவுகணைத் தாக்குதல்களை நடத்தியுள்ளன. இவற்றில் 340 இற்கு மேற்பட்டோர் கொல்லப்பட்டுள்ளனர். வடக்கு, தெற்கு வசீரிஸ்தான் பிராந்தியங்களிலேயே இத்தாக்குதல்கள் நடத்தப்பட்டுள்ளன. இவை பழங்குடியின மக்கள் செறிந்து வாழும் பிராந்தியங்கள். ஆப்கான் எல்லையோடு ஒட்டியவை'' என அதிகாரிகள் குறிப்பிட்டார்கள்.

பாகிஸ்தான் தலிபான் தலைவர் பைத்துல்லா மெஹ்சூட்டின் முக்கிய கோட்டையாக தென் வசீரிஸ்தான் இருந்து வருகிறது. பாகிஸ்தான் இராணுவம் தென் வசீரிஸ்தானில் பாரிய தாக்குதலை மேற்கொள்வதற்கான ஏற்பாடுகளில் ஈடுபட்டுவரும் இத்தருணத்தில் இந்த ஏவுகணைத் தாக்குதல்கள் நடத்தப்பட்டுள்ளன.

# அடுத்தடுத்து கிரகணங்கள் ஏற்படுவதால் பேரழிவு நிகழும் என்பது மூடநம்பிக்கை

## வானவியல் நிபுணர் விளக்கம்

அடுத்தடுத்து கிரகணங்கள் ஏற்படுவதால் உலகப் போர் மூளும், பேரழிவு ஏற்படும் என்று நினைப்பது எல்லாம் மூடநம்பிக்கை - என்று வானவியல் நிபுணரும், தமிழ்நாடு வானவியல் சங்கத் தலைவருமான பேராசிரியர் தேவதாஸ் விளக்கமளித்தார்.

அடுத்த மாதம் (ஜூலை) 22ஆம் திகதி முழு சூரிய கிரகணம் நிகழவுள்ளது. சூரியனுக்கும், பூமிக்கும் இடையில் சந்திரன் வரும்போது சூரியனின் கதிர்களை சந்திரன் மறைப்பதால் சூரிய கிரகணம் நிகழ்கிறது.

இந்த நிலையில், சூரிய கிரகணம் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்துவதற்காக மத்திய அறிவியல் மற்றும் தொழில்நுட்பத்துறையும், சென்னை, கிண்டியிலுள்ள தமிழ்நாடு அறிவியல் தொழில்நுட்ப மையமும் இணைந்து 3 நாள் பயிலரங்கை நடத்துகின்றன.

இந்தப் பயிலரங்கை தேசிய தொழில்நுட்ப ஆசிரியர் பயிற்சி நிறுவன இயக்குநர் எஸ்.மோகன் நேற்றுமுன்தினம் தொடங்கி வைத்தார்.

பின்னர் சூரிய கிரகண நிகழ்வு குறித்து வானவியல் நிபுணர் தேவதாஸ் செய்தியாளர்களிடம் பேட்டியளித்தபோதே மேற்கண்டவாறு கூறினார். மேலும் அவர் கூறியவை வருமாறு-

சூரிய கிரகணம், சந்திர கிரகணம் என்பவை வானில் இயற்கையாக நடைபெறும் நிகழ்வுகள். அவை அடுத்தடுத்து நிகழ்வதால் உலகில் போர் மூளும், பேரழிவு ஏற்படும் என்று மக்கள் மத்தியில் தவறான கருத்துகள் நிலவுகின்றன. இவை எல்லாம் மூடநம்பிக் கைகள்.

இதுகுறித்து விழிப்புணர்வு ஏற்படுத்துவதற்காகத்தான் இதுபோன்று பயிலரங்குகள் நடத்தப்படுகின்றன. அடுத்த மாதம் 22ஆம் திகதி நிகழவிருக்க முழு சூரிய கிரகணத்தை அதிகாலையில் 5.50 மணிக்குப் பாதுகாப்பான முறையில் பார்க்கலாம்.

இந்தியாவைப் பொறுத்தவரை இது பகுதி சூரிய கிரகணம்தான். முழு சூரிய கிரகணத்தை நேபாளத்திலும், சீனாவிலும் பார்க்கலாம். இதற்கு முன்பு 1995ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் 24ஆம் திகதி முழு சூரியகணம் ஏற்பட்டது - என்றார்.

# மதிவதனிக்கு கடவுச்சீட்டு திருச்சியில் வழங்கப்பட்டதா?



திருச்சி, ஜூன்25

பிரபாகரனின் மனைவி மதிவதனி தமிழகம் வந்து விமானம் மூலம் வெளிநாட்டுக்குத் தப்பிச் சென்றுள்ளார் என்றும், இதற்கான கடவுச் சீட்டு திருச்சி மண்டல அலுவலகத்தில் பெறப்பட்டது என்றும் இந்திய நாளேட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் அதில் தெரிவிக்கப்பட்டிருப்பவை வருமாறு -

இக் கடவுச்சீட்டு வசந்தி, க.பெ.மாரிமுத்து, ஜெகதாப்பட்டினம், ஆவுடையார் கோவில் தாலுகா புதுக்கோட்டை மாவட்டம் என்ற பெயர் மற்றும் முகவரியில் எடுக்கப்பட்டமை தெரியவந்துள்ளது.

மேலும், இதுதொடர்பாக டில்லி உளவுத்துறை அதிகாரிகள் திருச்சி மண்டல கடவுச்சீட்டு அலுவலகத்தில் நேரில் வந்து விசாரணை நடத்தினர். மதிவதனிக்கு வழங்கப்பட்ட கடவுச்சீட்டு தொடர்பான ஆவணங்களை அவர்கள் எடுத்துச் சென்றனர்.

இதுதொடர்பான விசாரணைக்காக கடந்த வாரம் திருச்சி கடவுச்சீட்டு அலுவலக அலுவலர் பாலசந்திரன் டில்லி சென்று வந்தார் என்று தெரிவிக்கப்படுகிறது.

இந்நிலையில், இதுபற்றி பாலச்சந்திரனிடம் கேட்டபோது அவர் கூறியவை வருமாறு -

திருச்சி மண்டல கடவுச்சீட்டு அலுவலகம் மூலம் தினமும் 500 கடவுச்சீட்டுகள் வழங்கப்படுகின்றன. கடவுச்சீட்டு கேட்டு விண்ணப்பம் செய்பவர்களின் 15 ஆவணங்கள் உண்மையாக உள்ளனவா என்பதைச் சரிபார்த்த பின்னர் கடவுச்சீட்டு வழங்கப்படும். அதே போன்று சம்பந்தப்பட்ட நபர் நேரில் வந்தால் தான் கடவுச்சீட்டு வழங்கப்படும்.

மதிவதினிக்கு வசந்தி என்ற பெயரில் கடவுச்சீட்டு வழங்கப்பட்டது என்று கூறப்படுவது உண்மையில்லை. நான் டில்லி சென்றது எனது பதவி உயர்வு தொடர்பாகத் தான். எதற்காக இந்தப் புரளியை பரபரப்புகிறார்கள் என்பது தெரியவில்லை - என்றார்.

இருப்பினும் இந்த விடயத்தில் பல கேள்விகள் எழுந்துள்ளன. மதிவதனிக்காக வசந்தி என்ற பெயரில் போலி கடவுச்சீட்டைத் தயாரித்துக் கொடுத்தது திருச்சியைச் சேர்ந்த ஒரு முகவர் என்று தெரியவந்துள்ளது.

இந்தப் போலிக் கடவுச்சீட்டின் உதவியால் மதிவதனி எளிதாகத் தப்பிச்சென்றார் எனக் கூறப்படுகிறது. தற்போது அந்த முகவருக்கு வலை வீசப்பட்டுள்ளது.

# தி.மு.க. ஆட்சியில் உயர் கல்வியின் தரம் தாழ்ந்துவிட்டது; அ.தி.மு.க. குற்றச்சாட்டு

சென்னை, ஜூன் 25

தி.மு.கவின் ஆட்சியில் கல்லூரிகளின் எண்ணிக்கை அதிகரித்துள்ளபோதிலும், உயர்கல்வியின் தரம் தாழ்ந்துவிட்டது - என்று அ.தி.மு.க. உறுப்பினர் சி.வி.சண்முகம் கூறி னார்.

பேரவையில் செவ்வாய்க்கிழமை நடைபெற்ற உயர்கல்வி மானியம் தொடர்பான விவாதத்தில் பேசுகையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார். மேலும் அவர் கூறியவை வருமாறு -

நாட்டிலேயே [illegible] உயர் கல்வியில் முன்னோடியாக உள்ளது என்பதை ஒத்துக் கொண்டால், இதற்கு அடிப்படையாக இருந்தவர்கள் முன்னாள் முதல்வர்கள் எம்.ஜி.ஆர்., ஜெயலலிதா ஆகியோர்தான்.

தொழில்நுட்பக் கல்வியில் மாணவர்கள் அதிக எண்ணிக்கையில் சேர வேண்டும் என்ற நல்ல நோக்கத்தின் அடிப்படையில், சுயநிதி பொறியியல் கல்லூரிகளுக்கு முன்னாள் முதல்வர் எம்.ஜி.ஆர். அனுமதியளித்தார்.

தி.மு.க. ஆட்சியில் கல்வி நிறுவனங்களின் எண்ணிக்கை உயர்ந்துள்ளது. ஆனால் [illegible] தாழ்ந்துள்ளது. கல்லூரிகளில் தகுதி [illegible] ஆசிரியர்கள் நியமிக்கப்படவில்லை. இதனால் கல்வியின் தரம் தாழ்ந்துள்ளது - என்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பெயர் மாற்ற அறிவித்தல்

விபுலானந்தர் வீதி, மாதகலை வசிப்பிடமாகக் கொண்ட சேதுராசா வயிரவனாதி ஆகிய நான் இன்று (25.06.2009) இல் இருந்து எனது பெயரை சேதுராசா வயிரவநாதன் என பெயர் மாற்றம் செய்கின்றேன் என்று இத்தால் இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசுக்கும், மக்களுக்கும் அறியத் தருகின்றேன். இனி சகல ஆவணங்களிலும் எனது பெயரை சேதுராசா வயிரவநாதன் என பாவிப்பேன் என்று இத்தால் அனைவருக்கும் அறியத் தருகின்றேன்.

(86521) சேதுராசா வயிரவநாதன்.

## கண்ணீர் அஞ்சலி

யாழ்.தொழில்நுட்பக் கல்லூரியின் குடிசார் இயந்திரவியல் 3ஆம் வருட மாணவனான சண்முகநாதன் முகுந்தன் அவர்களின் அன்புத் தந்தை

### திரு.இராசையா சண்முகநாதன்

அவர்களின் மறைவுச் செய்தி கேட்டு ஆழ்ந்த துயர் அடைகின்றோம். அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினரின் துயரில் நாமும் பங்கு கொள்வதுடன் அவரது ஆத்மா சாந்தியடையவும் பிரார்த்திக்கின்றோம்.

நண்பர்கள், குடிசார் இயந்திரவியல் 3ஆம் வருடம்,
யாழ்.தொழில்நுட்பக் கல்லூரி.

## கண்ணீர் அஞ்சலி

எமது கல்லூரி ஆசிரியை
திருமதி கலாவல்லி தர்மகுணசிங்கம் அவர்களின் அன்புத் தாய்

### திருமதி சதாருபவதி பாலசுப்பிரமணியம்

அவர்களின் மறைவுச் செய்தி கேட்டு துயரடைகின்றோம். அன்னாரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதோடு அவரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்,
யா/இந்து மகளிர் கல்லூரி. (86524) கல்விசாரா ஊழியர்கள்.

## மரண அறிவித்தல்கள்

### திருமதி துரைசிங்கம் கமலேஸ்வரி



யாழ்ப்பாணம், பிறவுண் வீதி, 5ஆம் ஒழுங்கையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி துரைசிங்கம் கமலேஸ்வரி நேற்று (24.06.2009) புதன்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற துரைசிங்கத்தின் அன்பு மனைவியும், சுபாஷினி, சயந்தன், நிரஞ்சன், சுயந்தன் ஆகியோரின் அன்புத் தாயும், காலஞ்சென்றவர்களான பொ.மார்க்கண்டு- சின்னத்தங்கம் தம்பதியினரின் மகளும், கமலநாதன் (வவா), காலஞ்சென்ற காணிக்கை பரமேஸ்வரி ஆகியோரின் சகோதரியும், தயபாலசிங்கம், தக்சிகா ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை இன்று (25.06.2009) வியாழக்கிழமை முற்பகல் 10 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தாவடி கல்வாரி சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*66/10, 5ஆம் ஒழுங்கை, பிறவுண் வீதி,*
*யாழ்ப்பாணம்.*

தகவல்:
குடும்பத்தினர்.

### முத்துக்குமாரு நடராசா

(முன்னாள் கொள்வனவாளர், சுன்னாகம் ப.நோ.கூ.சங்கம்)

கருகம்பனையைப் பிறப்பிடமாகவும் அன்னை வேளாங்கண்ணி வீதி, மயிலங்கூடலை தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட முத்துக்குமாரு நடராசா நேற்று (24.06.2009) புதன்கிழமை அதிகாலை காலமானார்.

அன்னார் முத்துக்குமாரு - முத்துப்பிள்ளையின் அன்பு மகனும் காலஞ்சென்ற மனோன்மணி, காலஞ்சென்ற சண்முகநாதன் (முன்னாள் ரயில் நிலையக் கட்டுப்பாட்டு அதிகாரி), செல்வலட்சுமி ஆகியோரின் அன்புச் சகோதரனும் யுவனேஸ்வரி (உபபீடாதிபதி, கல்வியியற் கல்லூரி, மட்டக்களப்பு), சிவகுமார் ஆகியோரின் அன்பு மாமனாரும் சோமசுந்தரம், கேதாரகௌரி, சிவசக்திசுந்தரம், சுவர்ணகௌரி ஆகியோரின் அன்புச் சிறிய தந்தையும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் நேற்று (24.06.2009) புதன்கிழமை இளவாலை, முள்ளானை இந்துமயானத்தில் தகனம் செய்யப் பட்டது. இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இளவாலை.

தகவல்:
குமார் (மருமகன்).

## 'பென்டோர்ச் பற்றரி' விலை இறங்கவில்லை

குடாநாட்டுக்கு ஏ-9 பாதையூடாகப் பொருள்கள் எடுத்துவரப்பட்ட போதிலும் 'பென்டோர்ச்' பற்றரிகளுக்கான தட்டுப்பாடு இன்னும் நீங்கவில்லை என்று தெரிவிக்கப்படுகிறது.

இதனால் அவற்றின் விலைகளும் அதிகரித்தே காணப்படுகின்றன. யாழ். நகரில் உள்ள வர்த்தக நிலையங்களில் இந்த பற்றி ஒரு சோடி 160 ரூபா தொடக்கம் 180 ரூபா வரை விற்பனை செய்யப்பட்டு வருகின்றது. (203-224)

## கிரிக்கெட் போட்டி

பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டுக் கழகம் பொன் விழாவை முன்னிட்டு விளையாட்டுக் கழகங்களுக்கிடையில் நடத்தி வந்த 20-இருபது சுற்றுப் போட்டியின் காலிறுதி ஆட்டங்களில் இன்று வியாழக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு மாலி சந்தி மைக்கல் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டுக் கழகம் மோதவுள்ளது. (78)

## இவ்வுலகில் மிகப் பெரியது என்ன?

அக்பர் சக்கரவர்த்தி ஒரு சமயம் தன் சபையில் இவ்வுலகில் மிகப் பெரியது என்ன? என்று கேட்டார். அங்கிருப்பவர் ஒவ்வொருவரும் ஏதோவொன்றைக் குறிப்பிட்டனர். ஆனால் அங்கு வந்த பீர்பால் சொன்னார் அரசே இவ்வுலகில் வாக்குத்தான் பெரியது ஏனெனில் இறைவன் எல்லா இடத்திலும் அனுஸ்வரூபமாக நிறைந்திருப்பதால் வாக்கிலும் அவரே நிறைந்திருக்கிறார். அதனால் பேசும் வார்த்தைகளை இதமாகப் பேச வேண்டும். அதனால்தான்.

வார்த்தைகளை உபயோகிக்கும் போது கவனமாக இருக்க வேண்டும். இன்பமோ, துன்பமோ உங்களது பேச்சில் தான் இருக்கிறது. அரசாள்வதும், அரசை வீழ்த்துவதும் சக்திவாய்ந்த சொற்களில் தான் இருக்கிறது.

அதனால் தான் பேசுவதற்கு முக்கிய தேவையான பொறுமையை வளர்த்துக் கொள்ள வேண்டும். எல்லாவற்றையும் ஏற்றுத் தாங்கிக்கொள்ளும் சுபாவம் மிகவும் அவசியமானது. பொறுமை இன்றிப் போனதால் சரிந்த சாம்ராஜ்யங்கள் அநேகம்.

பொறுமையில்லாத காரணத்தால் உயர்ந்த மகரிஷிகளும் கூடத் தங்கள் தவ வலிமையை இழந்து விட்டனர். படித்தவர்களும் கூட தங்கள் மதிப்பை இழந்ததற்குக் காரணம் பொறுமையின்மைதான். பொறுமைக்குணம் புத்தகங்களில் படித்து அறிவதல்ல. ஆசிரியர்கள் கற்றுத் தருவதல்ல. கடைத் தெருவில் விற்பதல்ல. நம் இதயத்தில் உருவாகி வெளிப்படுவதே பொறுமை. பொறுமையே சத்தியம். அதுவே வேதம். அதுவே தர்மம். அதுவே அஹிம்சை. அதுவே எல்லாமும். அதுவே யக்ஞம். எல்லா உலகத்திலும் பொறுமை என்கிற குணத்திற்கு மதிப்பு அதிகம். நமக்கு அத்தகைய பொறுமை அவசியம்.

எத்தனையோ பேர் உங்களைத் தூற்றினாலும் சகித்துக்கொள்ளுகின்ற மனப்பாங்கு வேண்டும். யார் திட்டினால் என்ன? எமக்கு என்ன நஷ்டம்? அதை விட்டுவிட்டு பொறுமையின்றிப் போனால் தான் நமக்கு நஷ்டம். திட்டினால் திட்டிவிட்டுப் போகட்டும் என்று பொறுமையாக இருந்து விட வேண்டும். யார் உன்னை விமர்சித்தாலும் நீ அதற்காகப் பதற்றப் படக்கூடாது. பல வருடங்களாக சேர்த்து வைத்திருந்த குணங்களெல்லாம் பொறுமையின்றிப் போனதால் அழிந்து போய்விடுகிறது. சகிப்புத் தன்மை இல்லையெனில் நீங்கள் எதையெல்லாம் இழந்து விடுவீர்கள் என்று உங்களுக்குத் தெரியாது.

மனதாலும் உடலாலும் பலவீனமாகி விடுவீர்கள். உங்களிடம் எல்லாவித சக்தியும் குறைந்து விடும். பொறுமையுள்ளவன் எல்லாவித சக்திகளையும் நிச்சயம் அடைவான்.

இதற்கு சாயியே சிறந்த உதாரணம். எத்தனையோ பேர் எவ்வளவோ தூஷணைகளையும், விமர்சனங்களையும் அள்ளிவீசுகின்றனர். பகவான் எதையும் பொருட்டாக எடுத்துக் கொள்வதில்லை. அது அவர்கள் புத்தி. அதை ஏன் நான் அக்கறை எடுத்துக் கொள்வதில்லை. அது அவர்கள் புத்தி. அதை ஏன் நான் அக்கறை எடுத்துக் கவனிக்க வேண்டும்?



அல்லாமல் அவனது அடிமையாகிப் போய்விடுவேன். அதனால் எவரது புத்தியையும் நான் பின்பற்றாது எது நல்லதென்று நான் தீர்மானிக்கின்றேனோ அதையே செய்கிறேன்.

(நன்றி: உண்மையின் உண்மை)

### சாயி சிந்தனை

## கடலுணவு பாதுகாப்பு நூல் வெளியீடு

யாழ்ப்பாணம், ஜூன் 25

கடலுணவுகளைப் பாதுகாத்தலும் பதனிடலும் நூல் வெளியீட்டு விழா நாளை வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு யாழ்.மாவட்ட கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்க சமாசங்களின் சம்மேளனத்தில் மேற்படி சம்மேளனத் தலைவர் அ.எமியாம்பிள்ளை தலைமையில் நடைபெறும்.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். பல்கலைக்கழக கடல்வள அபிவிருத்தி நிலைய முன்னாள் பணிப்பாளர் பேராசிரியர் கா.சித்திரவடிவேலு கலந்துகொள்வார். கௌரவ விருந்தினராக யாழ்.பல்கலைக்கழக கடல்வள அபிவிருத்தி நிலைய இணைப்பாளரும் விலங்கியல்துறை சிரேஷ்ட விரிவுரையாளருமான கலாநிதி திருமதி சிவசாந்தினி குகதாசன் கலந்துகொள்வார்.

## பட்டதாரிகளுக்கான முக்கிய அறிவித்தல்

2006ஆம் ஆண்டு வடமாகாண ஆசிரியர் போட்டிப் பரீட்சைக்குத் தோற்றி நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படாத பட்டதாரிகள் அனைவரும் இன்று (25.06.2009) யாழ். பெருமாள் கோயில் முன்றிலில் 8 மணி முதல் 10 மணிவரை உரிய ஆவணங்களுடன் வருகை தரவும். ஆவணங்கள் கல்வி அமைச்சரிடம் சமர்ப்பிக்க உள்ளதால் தவறாது பதிவு செய்யும்படி கேட்டுக் கொள்கின்றோம். மீள்பதிவுகள் மேற்கொள்ளப் படமாட்டாது.

*யாழ்ப்பாணம்.* (86529) பட்டதாரிகள் செயற்குழு

## தவறிவிட்டது

அரசவீதி, உரும்பிராய் என்னும் முகவரியுடைய திருமதி ஆனந்தராசா பரமேஸ்வரி ஆசிரியை என்பவரது தே.அ.அட்டையும் (இல.498120156V) வீட்டுத்திறப்பும், சிறுதொகைப் பணமும் கொண்ட கைப்பை சண்டிலிப்பாய்க்கும் மாரீசன் கூடலிற்கும் இடையில் கடந்த 19.06.2009 அன்று தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் மேற்படி விலாசத்திற்கு அனுப்பி உதவவும் அல்லது 0602215033 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும் சன்மானம் வழங்கப்படும்.

## பாராட்டுக்களும் நன்றிகளும்


(3ஆம் கட்ட பட்டதாரிகள் ஆசிரியர் நியமனம்)



மேற்படி ஆசிரியர் நியமனத்திற்கு வடமாகாணத்தில் தெரிவுசெய்யப்பட்டு நியமனம் வழங்கப்படாத யாழ்.மாவட்ட பட்டதாரிகளுக்கு கௌரவ அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் இடைவிடாத முயற்சியால் நேற்று (24.06.2009) கௌரவ கல்வி அமைச்சர் சுசில் பிரேம ஜெயந்தவுடன் யாழ்ப்பாணத்தில் பட்டதாரிகளை நேரடியாகச் சந்திப்பதற்கு வாய்ப்பினை ஏற்படுத்தியும் அவரூடாக நியமனத்திற்கான உறுதி மொழியைப் பெற்றுத் தந்தும் எதிர்வரும் இரு வாரங்களில் நியமனக் கடிதத்தை வழங்குவதற்கு ஏற்பாடு செய்தமைக்கும் பட்டதாரிகள் ஆகிய நாம் எமது மனமார்ந்த நன்றியையும் பாராட்டுக்களையும் தெரிவித்துக் கொள்கிறோம்.

*யாழ்.மாவட்டம்.* (86522) பட்டதாரிகள் செயற்குழு.

## அகவை அறுபதில் அகங்குளிர வாழ்த்துகின்றேன்



யா/ஸ்ரீ சோமாஸ் கந்தக் கல்லூரியின் புகழ்பூத்த சித்திரபாட ஆசிரியராக விளங்கி 23.06.2009 இல் ஓய்வுபெற்ற எனது ஆசான்

### திரு.கந்தையா தவராசன்

*சித்திரமும் கைப்பழக்கம்*
*செந்தமிழும் நாப்பழக்கம்.*

சித்திரத்தில் சிறந்து விளங்கிய சிற்பியே! உமது ஓய்வுக் காலம் சிறக்க கனிவுடனே கூறுகின்றேன் கணிசமான வாழ்த்துக்கள்.

குருபரன் கல்வி நிறுவனம்,
புத்தூர். (86528)

நா.விஜயகுமார்
(அன்ரன்) ஆசிரியர்.


## கணக்கியல் துறையில் ஓர் புதிய பரிமாணம்

ஒவ்வொரு வாரமும் புதிய பிரிவுகள் ஆரம்பம்...

A/L மாணவர்கள், HNDA, CIMA, AAT, பல்கலைக்கழக மாணவர்கள் மற்றும் கணக்கியல் துறையில் ஆர்வமுடையவர்கள் அனைவருக்குமான கற்கைநெறி உலகின் முன்னணி கணக்கியல் மென்பொருள்களூடாக.

Tally ies 9.0

Duration 2 months

ஒவ்வொரு வாரமும் புதிய பிரிவுகள் ஆரம்பமாகின்றன...

QUICKBOOKS

100% Practical



Course Contents

Principles of Accounting, Vouchers, Ledgers, Inventory, Billing, Budgets, Cost Centres, Salary Sheet (Pay Roll), VAT, Bank Reconciliation, Stock, Trial Balance, Balance Sheet, P & L Account, Cash Flow, Fund Flow, Consolidation of Accounts, Loan Manager, Graphical Analysis & Reports.

யாழ் மாவட்டத்திலே Tally நிறுவனத்தால் அங்கீகாரம் பெற்ற சான்றிதழ், பாடநூல் மற்றும் மென்பொருள் எமது நிலையத்தால் மட்டுமே வழங்கப்படுகின்றது.

ASIAN-CSC COMPUTER EDUCATION

26, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்
Tel:021 222 5677

கிளை

கொடிகாமம் வீதி, சாவகச்சேரி,
Tel:077 [illegible]


## பாராட்டி வாழ்த்துகின்றோம்



மொறட்டுவ பல்கலைக்கழகத்தில் தனது கற்கை நெறியைப் பூர்த்தி செய்து, இன்று (25.06.2009) வியாழக்கிழமை கொழும்பு B.M.I.C.H இல் சிவில் என்ஜினியராகப் பட்டம் பெறும்

### செல்வன் வை.பிரகலாதன்

எல்லாம் வல்ல அளவெட்டி தவளக்கிரி முத்துமாரி அம்மன் அருளுடன் கல்வியில் மேன்மேலும் பல பட்டங்கள் பெற்று வாழ வாழ்த்துகின்றோம்.

*வாழ்த்துவோர்:*
பாசமான குடும்பத்தினர்,
அம்மா, அண்ணா, தம்பி,
மாமாமார், அத்தைமார்,
சித்தப்பாமார், சித்திமார்,
தம்பிமார், தங்கைமார்,
மச்சான்மார்.

*கலாசாலை வீதி,*
*திருநெல்வேலி.* (86471)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





யாழ்ப்பாணத்துக்கு நேற்று விஜயம் மேற்கொண்ட கல்வியமைச்சர் சுசில் பிரேம ஜயந்த யாழ். செயலகத்தில் இடம்பெற்ற கல்வி அபிவிருத்தி தொடர்பான மாநாட்டில் உரையாற்றுவதையும் அருகில் சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அமர்ந்திருப்பதையும் முதலாவது படத்திலும் மாநாட்டில் கலந்துகொண்டவர்களை மற்றைய படத்திலும் காணலாம். அமைச்சர்கள் வேம்படி மகளிர் பாடசாலைக்கு விஜயம் மேற்கொண்ட போது மாணவர்களால் வரவேற்கப்படுவதை கடைசிப் படத்தில் காணலாம். (படங்கள்: லக்ஸ்மன்)

# மோதலில் பெற்றோரைப் பிரிந்திருந்த சிறுமி சோபிகா கொடிகாமம் முகாமிலிருந்து குடும்பத்துடன் வவுனியாவுக்கு

## உயர்நீதிமன்றின் தலையீட்டினால்

கொழும்பு, ஜூன் 25

வன்னி புதுமாத்தளன் பகுதியில் இடம் பெற்ற சண்டையில் சிக்கிக் காயமடைந்த நிலையில் குடும்பத்தை விட்டுப் பிரிந்து வேறு முகாமில் தங்க வைக்கப்பட்டிருந்த பதின்மூன்று வயதுச் சிறுமி அவர் சம்பந்தமாக உயர்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப் பட்ட மனுவை அடுத்து பெற்றோருடன் - குடும்பத்துடன் - நேற்றுமுன்தினம் சேர்த்து வைக்கப்பட்டார்.

இது குறித்து நேற்று உயர்நீதிமன்றுக்கு உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்பட்டது.

இந்த விவகாரம் குறித்துக் கூறப்படுவதாவது:-

ஒரே குடும்பத்தைச் சேர்ந்தவர்களான கதிர்காமு மாணிக்கராஜா (பாட்டன்), மாணிக்கராஜா சிவபாக்கியம் (பாட்டி), ஜெயராணி சுரேந்திரநாதன் (தாய்), பொன்னுச்சாமி சுரேந்திரநாதன் (தந்தை), சோபிகா சுரேந்திரநாதன் (13 வயது மகள்), நேசனா சுரேந்திரநாதன் (சகோதரி), கிஷோர் சுரேந்திரநாதன் (சகோதரன்) ஆகியோர் வன்னி, புளியம்பொக்கணை, பெரியகுளத்தைச் சேர்ந்தவர்கள். இவர்கள் கடந்த ஜனவரி மாத ஆரம்பம் வரை வன்னியில் பல இடங்களிலும் ஒன்றாக வாழ்ந்தனர்.

பின் யுத்தச் சூழல் காரணமாக சிறுமியின் பெற்றோர், பாட்டன், சகோதரி ஆகியோர் விஸ்வமடுப் பகுதியை நோக்கியும், சிறுமி, சிறுமியின் சகோதரன் கிஷோர் மற்றும் பாட்டி ஆகியோர் புதுமாத்தளன் பகுதியை நோக்கியும் பிரிந்து செல்ல நேர்ந்தது.

### கொடிகாமம் அகதி முகாமுக்கு

துரதிஷ்டமாக சிறுமியின் சகோதரன் கிஷோர் ஏப்ரல் 09 ஆம் திகதி புதுமாத்தளனில் இடம்பெற்ற தாக்குதலில் படுகாயமடைந்து இறந்துவிட்டார். அதேபோல சிறுமியும், பாட்டியும், காயமடைந்திருந்தார்கள். இருவரும் பாதுகாப்புப் படையினரால் கடைசியாகக் கொடிகாமம் அகதி முகாமுக்கு கொண்டு போய்ச் சேர்க்கப்பட்டார்கள்.

இதனிடையில் விஸ்வமடுப் பகுதி நோக்கிச் சென்ற சிறுமியின் பெற்றோர், சகோதரி, பாட்டன் ஆகியோர் பாதுகாப்புப் படையினரால் வவுனியாவிலுள்ள முகாம் ஒன்றில் தங்கவைக்கப்பட்டார்கள்.

சிறுமியின் பாட்டனார் நாளடைவில் வயோதிபம் கருதி முகாமை விட்டு வெளியேறி வேறிடத்தில் சுதந்திரமாக வாழ அனுமதிக்கப்பட்டார்.

ஆயினும் சிறுமி சோபிகாவுடன் கொடிகாமம் முகாமில் கூடவே இருந்த பாட்டி சிறுமியைப் பிரிந்து முகாமை விட்டு தனியே வெளியேற விரும்பவில்லை.

இந்நிலையில் இக்குடும்பத்தை ஒன்றாகச் சேர்ந்து வாழ அனுமதிக்குமாறு கோரி சோபிகாவின் பாட்டி, பெற்றோர், சகோதரி, சோபிகா ஆகியோர் சார்பில் உயர்நீதிமன்றத்தில் சிரேஷ்ட சட்டத்தரணி கௌரிசங்கரி தவராசாவை மனுதாரராகப் பெயர் குறிப்பிட்டு அடிப்படை உரிமை மீறல் மனுவொன்று தாக்கல் செய்யப்பட்டது.

### சோபிகாவை குடும்பத்துடன் சேர்க்குமாறு மனு

இம்மனுவின் பிரதான கோரிக்கைகளில் ஒன்றாக சிறுமி சோபிகாவைப் பெற்றோர் குடும்பத்துடன் ஒன்றாகச் சேர்க்குமாறு வேண்டப்பட்டிருந்தது.

மனுவில் எதிர்மனுதாரர்களாக பட்டாணிப் புளியங்குளம் கிராம உத்தியோகத்தர், வவுனியா பிரதேச செயலர், வவுனியா அரச அதிபர், வன்னிப் படைகளின் தளபதி, நலன்புரி முகாம்களைக் கூட்டிணைக்கும் கட்டளை அதிகாரி, சாவகச்சேரி பிரதேச செயலர், யாழ். அரச அதிபர், யாழ். படைகளின் தளபதி, பொலிஸ் மா அதிபர், சட்டமா அதிபர் ஆகியோர் குறிப்பிடப்பட்டிருந்தனர்.

இந்த மனு மீதான பூர்வாங்க விசாரணைகளின் போது மேற்படி சிறுமியை அவரது குடும்பத்தவர்களுடன் சேர்ப்பது தொடர்பான பிரதான கோரிக்கையை நிறைவேற்றுவது குறித்து உயர்நீதிமன்றம் பரிசீலித்தது. இது தொடர்பாகப் பாதுகாப்புத் தரப்பினருடன் ஆலோசித்து உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்று சட்டமா அதிபரால் அப்போது மன்றுக்குத் தெரிவிக்கவும் பட்டது.

### வவுனியா முகாமுக்கு கூட்டிச் செல்லப்பட்டார்

இந்நிலையிலேயே சிறுமி சோபிகா கடந்த செவ்வாய்க்கிழமை கொடிகாமம் முகாமிலிருந்து வவுனியா முகாமுக்குப் பாதுகாப்புத் தரப்பினரால் அழைத்துச் செல்லப்பட்டு பெற்றோருடன் சேர்க்கப்பட்டார்.

இத்தகவல் இந்த மனு நேற்று பதில் பிரதமநீதியரசர் ஷிராணி பண்டாரநாயக்கா, நீதியரசர்கள் கே.ஸ்ரீபவன், சந்திரா ஏக்கநாயக்கா ஆகியோர் முன்னிலையில் எடுத்துக்கொள்ளப்பட்டபோது அரச சட்டவாதி ரியாஸ் ஹம்ஷாவாஸால் உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்பட்டது.

மனுதாரர்கள் சார்பாக சிரேஷ்ட சட்டத்தரணி கௌரிசங்கரி தவராசாவின் நெறிப்படுத்தலில் சிரேஷ்ட சட்டத்தரணி சாலிய பீரிஸ் மன்றில் ஆஜராகியிருந்தார். அவர் இக்குடும்பத்தை எந்த நிபந்தனையிலேனும் வவுனியா முகாமைவிட்டு வெளியே சென்று சுதந்திரமாக வாழ அனுமதிக்குமாறும், சிறுமி சோபிகாவுக்கு ஏற்பட்ட படுகாயம் இன்னமும் குணமாகாத நிலையில் உரிய மருத்துவ சிகிச்சையைப் பெறுவதற்கு வழி செய்யுமாறும் நீதிமன்றத்திடம் கோரினார்.

இக் கோரிக்கைகளை நிறைவேற்றுவது தொடர்பில் பாதுகாப்பு தரப்பினரின் நிலைப்பாட்டை அறிந்து மன்றுக்குத் தெரிவிக்கு மாறு அரச சட்டவாதிக்கு நீதியரசர்கள் உத்தரவிட்டனர்.

இதையடுத்து பாதுகாப்புத் தரப்பினரின் நிலைப்பாட்டை அறிந்து மன்றுக்குத் தெரியப்படுத்தும் பொருட்டு அரசுத் தரப்புக்கு எதிர்வரும் 2 ஆம் திகதிவரை உயர் நீதி மன்றம் கால அவகாசம் வழங்கியது.(அ-சி)

# ஊவா மாகாணத்துக்கு ஓகஸ்ட் 8இல் தேர்தல்

## ஏட்டிக்குப் போட்டியாக அணிகள் களத்தில்

கொழும்பு, ஜூன் 25

ஊவா மாகாணசபைத் தேர்தல் எதிர்வரும் ஓகஸ்ட் 8 ஆம் திகதி நடைபெறும் எனத் தேர்தல் திணைக்களம் நேற்று அறிவித்துள்ளது.

ஊவா மாகாணசபைத் தேர்தலுக்கான வேட்பு மனுக்களை ஏற்றுக்கொள்ளும் கால எல்லை நேற்று நண்பகல் 12 மணியுடன் முடிவடைந்தது.

வேட்புமனுக்களை ஏற்றுக்கொள்ளும் இறுதிநாள் நேற்று. ஆகையால் மாவட்ட செயலகங்களுக்கு அருகில் பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, ஊவா மாகாணசபைத் தேர்தலில் போட்டியிடுவதற்காக பதுளை மாவட்டத்தில் ஐ.ம.சு. முன்னணி, ஐ.தே. கட்சி, ஜே.வி.பி., ஐக்கிய சோஷலிசக்கட்சி, மலையக மக்கள் முன்னணி, ஜன சக்தி முன்னணி மற்றும் தேசிய அபிவிருத்தி முன்னணி ஆகிய கட்சிகளும் 3 சுயேட்சைக் குழுக்களும் வேட்புமனுக்களைத் தாக்கல் செய்துள்ளன.

நேற்று வேட்புமனுத் தாக்கல் செய்த முக்கிய கட்சிகளில் மலையக மக்கள் முன்னணி, முஸ்லிம் காங்கிரஸ், மக்கள் விடுதலை முன்னணி என்பன அடங்கும்.

# ஐக்கிய சுதந்திரக் கூட்டமைப்பு,முஸ்லிம்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பிரேம ஜயந்த கூட்டமைப்பின் சார்பில் வேட்புமனுவைத் தாக்கல் செய்தார். ஈ.பி.டி.பியின் செயலாளர் நாயகமும் சமூக சேவைகள் மற்றும் சமூகநலத்துறை அமைச் சருமான டக்ளஸ் தேவானந்தாவும் கல்வி அமைச்சருடன் உடனிருந்தார்.

இந்தக் கூட்டமைப்பில் ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி (ஈ.பி.டி.பி), சிறிரெலோ, ஈரோஸ் ஆகியன இணைந்துபோட்டியிடுகின்றன. பெண் வேட்பாளர் ஒருவரும்களம் இறங்கியுள்ளார்.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் சார்பில் நேற்று முகமட் நிசார் காரியப்பர் வேட்பு மனவைத் தாக்கல் செய்தார்.

அபிமன்ன சிங்கம் மாணிக்க சோதி தலைமையிலான சுயேட்சைக் குழுவும் நேற்று வேட்பு மனுவை தாக்கல் செய்தது.

### வேட்பு மனுத் தாக்கலுக்கு இன்று இறுதிநாள்

இறுதிநாளான இன்று நண்பகல் 12 மணிவரை வேட்புமனு தாக்கல் செய்ய முடியும். இன்று 1.30 மணி வரை ஆட்சேபனைகளை சமர்ப்பிக்க அவகாசம் வழங்கப்படும்.

அதன் பின்னர் போட்டியிடும் வேட்பாளர் விவரங்களை தேர்தல் திணைக்களம் உத்தியோகபூர்வமாக அறிவிக்கும்.

நேற்று வேட்புமனுத் தாக்கல் செய்தோரின் விவரம் வருமாறு:-

### ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு

கைலாசபிள்ளை தேவேந்திரன், மாணிக்கம் கனகரத்தினம், அப்புத்துரை மனுவல் மங்கள நேசன், செல்லையா நியூட்டன் ஜெயக்குமார், பற்குணராசா யோகேஸ்வரி, பிஸவியன் [illegible] திகேசு தில்[illegible], [illegible] பிள்ளை கிஸேடோசியஸ், சீனிவாசகம் சிறீ மாதவன், பாவாஷாகிப் மொகிதீன், சாரா புல் அஸான், திருநாவுக்கரசு சிவதாசன், துரைசிங்கம் தட்சணாமூர்த்தி, மொகமட் மீரா சாகிப் முஸ்தப்பா, அஸ் ஹார்றுமி பதுர்தீன், மீரா சாகிப் மொகமட் றமீஸ், இராசதுரை இரத்தினேஸ்வரன், சுதர்சிங் விஜயகாந்த், முருகையா கோமகன், இந்திரராசா நிரா குலன், சுவிதரன் நிசாந்தன், செல்வராசா ரமணன், சலீம் முகமட் றகுபர், அரியரத்தினம் பிரா சாந்தன், விற்றாலிஸ் டிரோன், தவராசா அஜந்த்குமார், ஜேயசுதாசன் டெல்சன், பத்மநாதன் றொபின் றோய், அஜ்மயீன் அஸ்பர்.



### சுயேட்சைக்குழு

அபிமன்னசிங்கம் மாணிக்கசோதி, வைத்தியநாத ஐயர் சுப்பிரமணியக் குருக் கள், முத்துத்தம்பி சிவசுப்பிரமணியம், தம்பையா நடராசா, இரத்தினேஸ்வரி பாலசிங்கம், கந்தையா தட்சணாமூர்த்தி, நாகராசா சந்திரகுமார், செல்[illegible] திரன், வல்லிபுரம் செல்லை[illegible] ரத்தினம் ஏகாம்பரநாயகி, சீனிவாசகம் நாகலிங்கம், சின்னப்பொடி பாலசிங்கம், அப்புக்குட்டி தேவராசா, ஆறுமுகம் விமல், நாகலிங்கம் சத்தியலிங்கம், இராசரத்தினம் இராஜன், மகேந்திரன் சயந்தன், தம்பிநயினார் பால பாஸ்கரன், தவசி சிவரூபன், அமிர்தலிங்கம் குணதீபன், தங்கராசா நிரஞ்சன், முருகேசு அஜீகரன், பொன்னுத்துரை வரதராசா, அழகேந்திரராசா அஜாகரன், நவரத்தினம்டெம்மியஸ், சிவபாலன் சிறீகுமார், சிவஞானம் தில்லைநாதன், மோகன் சதீஸ்குமார்.

### முஸ்லிம் காங்கிரஸ்

முகமட் இஸ்மாயில், முகமட் ஷரிவ், மொகிதீன் பாக்கீர், மொமட் பிரகாத், அப்துல் கரீம் நவமிஸ்,மொகமட் காசிம், இஸ்ஸடீன், நைனாமுகமட் நமீம், கச்சி முகம்மது முகமட் நியாஸ், ரசீம்காந் திஸ்னாஸ், அப்துல்கபூர் ஜவ்றிராஜன், சேகுநாசர் மீரா, பாக்கீர் மொகிதீன் மொகமட் நிசாம், முகமட் சுல்தான் நிஜாம்,முகதீன் சாகிப் முகமட் பார்லி, அப்துல்கரீம் முகமட் றியாஸ், பதுர் தீன்ரஸ்மீன், முகமட் நசுரூர்தீன் முகமட் இம்ரான், அமீர்அலி கனீபா, முகமட் நவாஸ் ஜபர் டீன், முகமட் ரஸ்மீன், முகமட் அலியார் றஜப், குதுப்தீன் துஸ்ரத், முகம்ட் யூசுப் பஸ்லீன், அப்துல் கலாம் ஜனகத், சுபைர் முகமட் நிஸ்வான், முகமட் கனீபா முகமட் சுகிர்ஷா, நைனா முகமட் ஷிராஜ், அப்துல் மஜீத் றம்ழான்.

(அ-1-9-111-120-236)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வவுனியா மனிக்பாம் அகதிமுகாம்களிலுள்ள 35 ஆயிரம் சிறுவர்களுக்கு போஷாக்கு குறைபாடு

## 'சர்வோதயம்' அமைப்பு அதிர்ச்சித் தகவல்

வவுனியா, ஜூன் 25

வவுனியா மனிக் பாம் அகதி முகாம்களில் உள்ள 35 ஆயிரம் சிறுவர்கள் போஷாக்கின்மையால் பாதிக்கப்பட்டுள்ளனர் என இலங்கையின் பிரபல மனித நேய அமைப்பான சர்வோதயம் தெரிவித்துள்ளது.

இந்த முகாமில் ஒரு மலசலகூடத்தை 70 பேர் பயன்படுத்தும் நிலைமை காணப்படுகிறது என சர்வோதயத்தின் நிறைவேற்று இயக்குநர் தெரிவித்துள்ளார்.

அவர் பி.பி.ஸியின் சிங்கள சேவைக்கு மேலும் தெரிவித்துள்ளவை வருமாறு:-

மனிக் பாம் முகாமில் போஷாக்கின்மையால் பாதிக்கப்பட்ட சிறுவர்கள் 30 ஆயிரம் முதல் 35 ஆயிரம் வரையிலானோர் உள்ளனர்.

இவர்களில் பலர் நோய்கள் காரணமாகப் பாதிக்கப்பட்டுள்ளதுடன் காயங்களாலும் துயருறுகின்றனர்.

இந்தக் குழந்தைகளில் 15 முதல் 20 வீதமானவர்கள் மிக மோசமான போஷாக்கின்மையாலும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

யுத்தத்தின் இறுதிக் காலகட்டத்தில் உரிய உணவின்றித் தொடர்ச்சியாக இடம்பெயர்ந்தமையால் இவர்கள் மிக மோசமான போஷாக்கின்மைக்கு உட்பட்டுள்ளனர்.

வவுனியா முகாம்களில் உள்ள சிறுவர்கள் மத்தியிலிருந்து மந்த போஷணையைக் குறைப்பதற்கு சர்வோதய அமைப்பு, யுனிசெவ் மற்றும் சுகாதார அமைச்சுடன் இணைந்து நடவடிக்கை எடுத்து வருகிறது.

இந்தச் சிறுவர்கள் போஷாக்குக் குறைபாட்டின் பாதிப்பிலிருந்து விடுபடுவதற்கு சில வாரங்கள் அல்லது மாதங்கள் எடுக்கும்.

அவர்களுக்குத் தற்போது உணவு போதிய அளவுக்கு வழங்கப்படுகின்றது. எனினும், குறுகிய காலத்தில் இவர்கள் உடல் நலம் தேறுவதற்கு சந்தர்ப்பமில்லை. மலசலகூடங்கள் போதியளவு இல்லாத பிரச்சினைக்குத் தீர்வு காண அதிகாரிகள் முயல்கின்றனர்.

சர்வதேச தராதரத்தின்படி ஒரு மலசலகூடத்தை 20 பேர் பயன்படுத்தலாம். எனினும், மனிக்பாம் முகாமில் ஒரு மலசலகூடத்தை 70 பேர் பயன்படுத்து கின்றனர். - என்றார்.

# புதைக்கப்பட்டிருந்த குண்டு வெடித்ததில் சந்தேக நபர் பலி; பொலிஸ் அதிகாரி காயம்

மட்டக்களப்பு, ஜூன் 25

மட்டக்களப்பு, வெல்லாவெளிப் பிரதேசத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற குண்டுவெடிப்பில் சந்தேக நபர் ஒருவர் உயிரிழந்துள்ளார். அத்துடன் பொலிஸ் அதிகாரி ஒருவர் காயமடைந்துள்ளார் என வெல்லாவெளிப் பொலிஸார் தெரிவித்தனர்.

மட்டக்களப்பு-அம்பாறை எல்லைப் பகுதியில் வைத்துத் தமிழீழ விடுதலைப் புலிகளின் பொறுப்பாளர் எனக் கூறப்படும் ஒருவரை அண்மையில் பொலிஸார் கைது செய்திருந்தனர்.

விசாரணைகளின் பின்னர் நேற்றுமுன்தினம் குறித்த சந்தேக நபர் மறைத்து வைத்திருந்த வெடிப்பொருள்களைக் காட்டுவதற்காக பொலிஸார் அவரை அழைத்துச் சென்றுள்ளனர்.

அதன்போது, புதைத்து வைக்கப்பட்டிருந்த குண்டு ஒன்று வெடித்ததினாலேயே இந்த இழப்புக்கள் ஏற்பட்டன என்று பொலிஸார் குறிப்பிட்டனர்.

சம்பவத்தில் தமிழீழ விடுதலைப் புலிகளின் பிரதேச பொறுப்பாளர் எனக்கூறப்படும் சின்னக்கடாபி என்று அழைக்கப்படும் நல்லதம்பி ஜோகேந்திரன் என்பவர் உயிரிழந்தார் என வெல்லாவெளிப் பொலிஸார் தெரிவித்தனர்.

# இலக்கத் தகடற்ற வாகனத்தில் வந்தோரே ஐ.நா. பணியாளர்களைக் கூட்டிச்சென்றனர்

நியூயோர்க், ஜூன் 25

இலக்கத்தகடற்ற வாகனத்தில் வந்த சீருடையணியாத நபர்களே ஐ.நா. பணியாளர்களைக் கைதுசெய்தனர் என்று இலங்கைக்கான ஐ.நாவின் பதில் வதிவிடப் பிரதிநிதி அமிம் அவார் தெரிவித்தார்.

ஐ.நாவின் இலங்கைப் பணியாளர்களுக்கு அனுப்பி வைத்துள்ள செய்திக் குறிப்பொன்றிலேயே அவர் இதனைத் தெரிவித்துள்ளார் என 'இன்னர்சிட்டி பிரஸ்' தெரிவித்துள்ளது.

அமிம் அதில் மேலும் தெரிவித்திருப்பவை வருமாறு:-

ஜூன் 11,12ஆம் திகதிகளில் ஐ.நாவின் இரு பணியாளர்கள் காணாமற்போனமையை நீங்கள் அறிந்திருப்பீர்கள்.

எமக்குக் கிடைத்த தகவல்களின் அடிப்படையில் தங்களை யார் என அறிமுகப்படுத்தாத, இலக்கத்தகடற்ற வாகனத்தில் வந்த சீருடை அணியாத நபர்களே இருவரையும் விசாரணைக்காக அழைத்துச் சென்றுள்ளனர்.

யு.என்.எச்.சி.ஆர். பணியாளர் அவரது வீட்டிலிருந்து கூட்டிச் செல்லப்பட்டார்.

யு.என்.ஓ.பி.எஸ்ஸின் உறுப்பினர் தனது வாகனத்திற்கு எரிபொருள் நிரப்பிக்கொள்ளவிருந்த வேளை அங்கிருந்து கூட்டிச் செல்லப்பட்டார்.

### கைது குறித்து அறிவிக்கப்படவில்லை

ஐ.நாவிற்கு இது குறித்து அறிவிக்கப்படவில்லை. எமது விசாரணைகளின் பின்னரே அவர்கள் இலங்கைப் பாதுகாப்புப் படையினரால் கைதுசெய்யப்பட்டமை எமக்கு உத்தியோகப்பற்றற்ற விதத்தில் தெரியவந்தது.

இதுவரையில் இது குறித்து உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்படவில்லை. காரணங்களும் தெரிவிக்கப்படவில்லை. குற்றச்சாட்டுகளும் முன்வைக்கப்படவில்லை.

ஐ.நா.பணியாளர்களுக்கு எதிரான குற்றச்சாட்டுகள் குறித்தோ அல்லது அவர்கள் தடுத்து வைக்கப்பட்டுள்ள இடம் பற்றியோ எதுவும் தெரிவிக்கப்படவில்லை.

அவர்களுடைய குடும்பத்தவர்களுக்கும் உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்படவில்லை.

இலங்கையின் அவசரகாலச் சட்டத்தின் படி ஒருவர் கைது செய்யப்படும்போது குடும்பத்தவர்களுக்கு இது குறித்து அறிவிக்கவேண்டும்.

ஐ.நா. பணியாளர்கள் கைது செய்யப்படும்போது உரிய நடைமுறை பின்பற்றப்பட்டதா என்பது குறித்து சட்ட ஆலோசனைகளைக் கோரியுள்ளோம்'' - எனத் தெரிவித்துள்ளார். (அ-சி)

# கட்டுநாயக்க விமான நிலையத்தில் கைதுசெய்யப்பட்ட வர்த்தகர்கள் நீதிமன்றில்

கொழும்பு, ஜூன் 25

வெளிநாடு செல்லவிருக்கையில் கட்டுநாயக்கா விமானநிலையத்தில் வைத்துப் பொலிஸாரால் கைது செய்யப்பட்ட இரு தமிழ் வர்த்தகர்கள் நேற்று கொழும்பு பிரதம நீதிவான் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டனர்.

கொழும்பு ஐந்தாம் குறுக்குத் தெருவைச் சேர்ந்த வர்த்தகர்களான சிவலிங்கம் எழில்வேந்தன், சரவணமுத்து சிவலிங்கம் ஆகிய இருவரே கைது செய்யப்பட்டவர்களாவர்.

இவர்கள் இருவரும் கொழும்பு வர்த்தகர்களுக்கு சுமார் பன்னிரண்டரைக்கோடி ரூபா பணம் கொடுக்கவேண்டி உள்ள நிலையில் - அவர்கள் வழங்கிய சுமார் இரண்டு கோடி மூன்று லட்சம் ரூபா பெறுமதியான காசோலைகள் வங்கியில் பணமில்லாமல் திரும்பியமை தொடர்பாக முறைப்பாடுகள் கிடைத்துள்ள காரணத்தால் - அவர்களைத் தடுத்துத் தாம் கைது செய்தனர் எனக் குற்றப் புலனாய்வுப் பொலிஸார் நீதிமன்றில் தெரிவித்தனர்.

சந்தேக நபர்கள் சார்பில் ஆஜரான சட்டத்தரணி குணரட்ண வன்னிநாயக்கா, நீதிமன்ற உத்தரவு ஏதுமின்றி விமான நிலையத்தில் வைத்துப் பயணிகளைக் கைது செய்தமை சட்ட விரோதமானது என நீதிமன்றுக்குச் சுட்டிக்காட்டினார்.

ஐந்தாம் குறுக்குத் தெரு, ஆமர் வீதியைச் சேர்ந்த இராஜரத்தினம் விஜயகுமார் என்பவருக்கு சந்தேக நபர்கள் இருவரும் கொடுக்க வேண்டிய தொகை தொடர்பாக அவர்கள் இருவரும் பாதாள உலகக் குழுவினரால் பதினொரு தடவைகள் பிடிக்கப்பட்டுத் தாக்கப்பட்டுள்ளனர் என்றும் -

அவர்கள் பெயரில் கடுவெலவில் இருந்த சுமார் ஒன்பது கோடி ரூபா பெறுமதியான சொத்து, மாபோலவில் இருந்த 4 கோடி ரூபா பெறுமதியான சொத்து, ஆமர் வீதியில் தலா ஒரு கோடி இருபது லட்சம் ரூபா பெறுமதியான இரு அடுக்கு மாடி குடியிருப்பு வீடுகள் போன்ற பல உடைமைகள் பலவந்தமாகப் பெயர் மாற்றம் செய்துகொடுக்கப்பட்டுள்ளன.

பாதாள உலகக் குழுவினரின் கட்டைப் பஞ்சாயத்தின் பின்னரும் அவர்கள் நெருக்குதலுக்கு உள்ளாக்கப்படுகின்றனர் என அவர்கள் சார்பில் ஆஜரான சட்டத்தரணி மேலும் நீதிமன்றத்தில் தெரிவித்தார்.

சந்தேக நபர்கள் இருவரையும் தலா இருபத்தியையாயிரம் ரூபா காசுப் பிணையிலும், தலா ஒரு கோடி ரூபா உறுதிப் பிணையிலும் செல்ல அனுமதித்த பிரதம நீதிவான் நிஷாந்த ஹப்பு ஆராய்ச்சி, அவர்களைத் தமது கடவுச்சீட்டுக்களை நீதிமன்றில் ஒப்படைத்துவிட்டு, வாரம் தோறும் பொலிஸில் ஆஜராகி ஒப்பமிடுமாறும் பணித்தார். (அ-சி)

## யாழ்.நலன்புரி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கல்வி நிலைமை குறித்துக் கேட்டறிந்தார்.

தொண்டர் ஆசிரியர்களையும் சந்தித்து அவர்களின் பிரச்சினைகளையும் அமைச்சர் கேட்டறிந்தார்.

சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவும் இந்த நிகழ்வுகளில் கலந்து கொண்டார்.

(1-50-9-111)

## 13 திருத்தத்துக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வாக்குறுதி அளித்திருக்கிறது.

அந்த மக்களை மீளக்குடியமர்த்தி புனர்வாழ்வு அளிப் பதற்கும் அதற்கு ஏதுவாக மிதிவெடிகளை அகற்றுவ தற்கும் இந்தியா உதவும் என்றும் தூதுக்குழுவினரிடம் நாம் உறுதி அளித்துள்ளோம்.

### கச்சதீவில் இராணுவ முகாம் அமைக்கும் உத்தேசம் இல்லை

கச்சதீவில் எந்தவொரு இராணுவக் கட்டமைப் பையும் அமைப்பற்கு உத்தேசம் எதுவும் இல்லை என்று தூதுக்குழுவினர் எங்களிடம் தெரிவித்தனர் -என்றார்.

வடமாகாணத்தில் மக்கள் குடியேற்றப்பட்ட பின்னரே அங்கு தேர்தல்கள் நடத்தப்படும்.

அதிகாரப் பகிர்வு குறித்து இந்தியா கொண்டுள்ள கரிசனைக்கு உகந்ததாக ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ உருவாக்கியுள்ள அதிகாரப் பகிர்வுத்திட்டம் அமையுமென எதிர்பார்க்கிறோம் - என்றார்.

இலங்கைத் தூதுக்குழுவில் ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகர் பஸில் ராஜபக்ஷ, பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ, ஜனாதிபதியின் செயலாளர் லலித் வீரதுங்க ஆகியோர் வந்துள்ளனர். (அ)

## உதவிப்பொருள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இலங்கையில் இருந்து, ஜனாதிபதியின் ஆலோசகர் பஸில் ராஜபக்ஷ, பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ, ஜனாதிபதியின் செயலாளர் லலித் வீரதுங்கா ஆகியோர் நேற்று இங்கு திடீர் விஜயம் செய் திருந்தனர். அவர்களுடன் நடத்திய சந்திப்பின் பின்னரே வெளிவிவகார அமைச்சர் 'வணங்காமண்' கப்பல் கொழும்புக்கு செல்லவுள்ள தகவலை வெளியிட்டார்.

'வணங்காமண்' கப்பல் உதவிப்பொருள்களுடன் கொழும்புக்குச் செல்ல இருப்பதை பஸில் ராஜபக்ஷவும் உறுதிசெய்தார்.

**வணங்காமண் கப்பல் உதவிப்பொருள்களுடன் புதன்கிழமை (நேற்று) இரவு சென்னையில் இருந்து கொழும்பு நோக்கிப் புறப்பட்டு விட்ட தாக நள்ளிரவுச் செய்திகள் தெரிவித்தன.**

இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ்.எம். கிருஷ்ணா கூறியதாவது:-

'கப்டன் அலி'க் கப்பலிலுள்ள பொருள்களை இறக்குவதற்கு இந்தியா விடுத்த வேண்டுகோளுக்கு இலங்கை சாதகமான பதிலையளித்துள்ளது.

இந்தப் பொருள்கள் இந்தியா செஞ்சிலுவைச் சங்கம் சர்வதேசக் குழு ஊடாக வடக்கில் இடம்பெயர்ந்துள்ள மக்களுக்கு வழங்குவதற்கு இலங்கை இணக்கம் தெரிவித்துள்ளது - என்றார்.

இது குறித்து இலங்கை ஜனாதிபதியின் ஆலோசகர் பஸில் ராஜபக்ஷ தெரிவித்ததாவது:-

இன்றைய சூழ்நிலையில் இடம்பெயர்ந்து முகாம்களில் உள்ள மக்களுக்கு உதவி தேவை. எனவே, 'கப்டன் அலி' (வணங்காமண்) கப்பலை விரைவில் இலங்கைக் கடற் பரப்பிற்குள் அனுமதிப்போம்.

'கப்டன் அலி' கப்பல் தொடர்பாக இந்தியா எழுப்பிய கேள்விகளுக்குச் சாதகமான பதில்களையே அளித்துள்ளோம். இந்தக் கப்பல் தொடர்பாக எட்டப்பட்ட முடிவுகள் குறித்து தமிழ் நாட்டிற்கு மத்திய அரசு அறிவிக்கும் -என்றார். (அ)

புதிய பிரிவுகள் ஆரம்பம்
aat (Sri Lanka)
Foundation, Intermediate, Final
Registration is now open for any body having 06 passes at GCE O/L
Medium:- தமிழ் & English
விரிவுரைகள் ஆரம்பம்:- 27.06.2009
Saturday 10 a.m.
★ A/L 2009 பரீட்சை எடுக்கும் மாணவர்கள் பதிவினை தற்போது மேற்கொண்டு பரீட்சை முடிந்தவுடன் தொடங்கும் விசேட பிரிவில் இணைந்து கொள்ளலாம்.
★ பதிவுகள் இன்றுமுதல் ஏற்றுக் கொள்ளப்படுகின்றன. பதிவுகளை முன்கூட்டியே செய்து கொள்வதன் மூலம் சிரமங்களைத் தவிர்த்துக்கொள்ளலாம்.
Furthur Detail
Director
Jaffna College Undergraduate Dept.
464, Hospital Road, Jaffna.

வெளிவந்து விட்டது
A/L 2009
கலை, வர்த்தக, விஞ்ஞான மாணவர்களுக்கான
பொதுசாதாரண பரீட்சை
வழிகாட்டி - 2009
தொடர்-15
விலை: 250ரூபா
இலவசப் பிரதியுடன்
Free Hit
பொது அறிவு, நுண்ணறிவு
By: P.கமல்தாசன் & P.உமாசங்கர்

விற்பனையாகிறது
உணவும் போசணையும்
(Food and Nutrition)
ஆக்கம்:- திருமதி சரோஜினி பேராவந்தன்
பேராசிரியர் வசந்தி அரசரட்ணம்
விற்பனையாகிறது.
அன்னை புத்தகசாலை
இல.07, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். தொ.பே: 222 9881

A/L வரலாறு
திரு. M.பத்மன் M.A.
A/L 2010, 2011
மாணவர்களுக்கான
புதிய அனுமதிகள்
வழங்கப்படுகின்றன
BITSMANS
கல்வி நிறுவனம், மானிப்பாய்

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 25.06.2009 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org